# கல்கி



KALKI


15.3.1964 30 காசு

# மக்ளீன்ஸ்

உபயோகித்து
அந்த அதிகமான வெண்மையைப்
பாருங்கள்!



## இவ்விதம் சோதியுங்கள்



1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்ளீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.




மக்ளீன்ஸ் பழுப்பு நிறமடைந்த
பற்களை வெண்மையாக்குகிறது!

MTP/I/P/2-63-TM

# பொருளடக்கம்

சோபகிருது, பங்குனி 2 ★ மார்ச் 15






51ம் பக்கம் பார்க்க

“கல்கி”யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


பனாமா
இழுக்க இழுக்க
இன்பம்
இறுதிவரை
Panama
20
CIGARETTES
Specially blended for a
cool and pleasant smoke
from selected Virginia
Tobacco leaves.
பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்., பம்பாய்.56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
GT. (P) 633 TM
Greens' Advtg.



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி, பாப்பா —பாரதியார் | இதழ் 33

# அசூயைக்கு அடிபணியாதீர்!

ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் அதிருஷ்டசாலி! சென்ற ஆண்டு நாடு முழுதும் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்களின் பட்ஜெட்டைக் கண்டு கொதித்து எழுந்தது. ஆனால் அதையும் விடப் புது வரிகள் மூலம் சர்க்கார் வருமானத்தை 40 கோடி ரூபாய் கூடுதலாக்கியிருக்கும் நடப்பு ஆண்டு பட்ஜெட்டை அளித்துள்ள ஸ்ரீ டி. டி. கே. இவ்வளவு கண்டனத்துக்கு ஆளானதாகத் தெரியவில்லை. இந்த நாற்பது கோடி ரூபாய், வண்டி இருசு முறிந்து போகும் அளவுக்கு ஏற்கனவே ஏற்றியுள்ள பாரத்துக்கும் மேலாகச் சுமத்தியுள்ள புதுப் பளு என்பதை மக்கள் புரிந்து கொள்ளாததாகத் தோன்றுகிறது. மொரார்ஜியின் பட்ஜெட்டுக்குப் பிற்பாடும் சர்க்காரின் வருமானத்தை உயர்த்த முடியும் என்ற இரக்கமற்ற காரியத்தை வெகு சாமர்த்தியமாகச் சாதித்திருக்கிறார் ஸ்ரீ டி. டி. கே.

இந்தச் சாமர்த்தியங்களிலொன்று நடுத்தர வருமானக்காரர்களைப் பாதிக்கும் கட்டாயச் சேமிப்பை ரத்து செய்திருப்பது. ஆனால் இப்போது கட்டாயச் சேமிப்பில் பெரும் பங்கு வருமான வரி உயர்வாகப் பரிணமித்திருப்பதை நாம் காண்கிறோம். மொரார்ஜியின் கட்டாயச் சேமிப்புத் தொகையாவது ஐந்தாண்டுகளுக்குப் பின் கைக்குத் திரும்பும். ஆனால் வருமான வரியில் கரைந்துவிட்ட புதுச்சுமை சர்க்காருக்கே தத்தம் செய்ததுதான்!

அரசியல் நீதியைவிட அசூயை நியதியைப் பெரிதாக மதித்து இந்த பட்ஜெட்டை உருவாக்கியிருக்கிறார் நமது சோஷலிஸ்ட் மந்திரி. படித்தவர்கள் வாசிக்கும் ஆங்கில தினசரிகளை நீக்கி, பொது மக்களின் பத்திரிகைகளான தாய்மொழி ஏடுகளின் தலையங்கங்களைப் பார்த்தால் டி. டி. கே. தமது 'அசூயை வளர்ப்பு சித்தாந்த'த்தில் ஓரளவு வெற்றி பெற்றுவிட்ட அதிருஷ்டசாலி என்றே தோன்றுகிறது. இதை நாம் கண்டித்து எழுதினாலும் 'சுதந்திரக் கட்சி பணக்காரர் கட்சி; 'கல்கி'க்கு எப்போதும் சர்க்காரைக் குறை சொல்லிப் பழக்கமாகி விட்டது' என்று சிலர் எண்ணலாம். எனினும் நம் நாட்டு மக்களின் இதய அடிவாரத்திலுள்ள பெருந்தன்மையான இயல்பை நம்பி இதை எழுதுகிறோம்.


சொத்து வரிகளையும், கொடை வரிகளையும் சர்க்கார் உயர்த்தியிருப்பதால் உடனடியாகச் செல்வந்தர்கள் மட்டுமே பாதிக்கப்படலாம். ஆனால் காலக்கிரமத்தில் இதனால் நாட்டுப் பொருளாதாரம் முழுவதும் நாசமாகி விடும். இறுதியில் தொழிலாளர் உள்படப் பொது மக்கள் யாவருக்கும் தீமையே விளையும். தங்கள் நலனுக்காக மட்டுமின்றி, தங்களுடைய உற்றோர் நலனுக்காகவும், மனைவி மக்கள் நலனுக்காகவும் திரவியம் சேர்ப்பது மனிதனின் இயற்கையான மனப்பாங்கு. இயற்கை மனப்பாங்குகளைக் கவனிக்காமல், ஜடப் பொருள்களை வைத்துக் கொண்டு கணக்குப் போடுவது போல் பட்ஜெட் தயாரிப்பது கலைக்கு உதவாது. சொத்து வரியும் கொடை வரியும் அபரிமிதமாக உயர்வதால் தொழிலதிபர்களுக்குத் திரவியம் ஈட்டுவதில் ஊக்கமே இராது. இதனால் உற்பத்தியில் அவர்களுடைய கவனம் குறையும். அதாவது தனியார் துறையின் மூலம் இன்று நாட்டின் பொருளாதாரத்துக்குக் கிடைக்கும் பெரும் வளர்ச்சி குன்றிப் போகும். இந்தத் தொழில்களைச் சர்க்கார் எடுத்துக் கொண்டால் உற்பத்தி குட்டிச்சுவர்தான் ஆகும்.

சர்க்கார் உடைமையாகியுள்ள தொழில்களினால் நாட்டின் உற்பத்தி ஒருகாலும் உயர முடியாது என்ற பிரத்தியட்ச உண்மையைத்தான் நாம் அறிவோமே! எனவே தனியார் துறையை ஒரேயடியாக முடக்கிப் போட்டால் அப்புறம் தேசத்தின் பொருளாதாரம் என்ன ஆவது? பொறுமையை விடுத்து இதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தவறான முறையில் சொத்துக்களை மாற்ற விரும்புகிறவர்களைத் தண்டிப்பது நியாயம்தான். சிலரிடம் பணம் குவிவது உண்மையா யிருக்கலாம். அது அநீதமான முறையில் சேருமானால் தடுப்பதற்குச் சர்க்கார் சகல உரிமையும் பெற்றிருக்கிறது. ஆனால் எல்லாச் சொத்துக்களுக்குமே வரம்பு மீறி வரி போட்டு, அடுத்த தலைமுறையில் பெருந் தொழில் நடத்த ஒருவருமே இல்லாத பொருளாதார சூனியத்தை உண்டாக்குவது வடிகட்டின மடமையாகும். வரி என்ற பெயரில் சொத்துக்களை நாசம் செய்வதற்குப் பதிலாக, ஹிட்லர் யூதர்களைச் செய்தது போல, தனவந்தர்களின் சொத்துக்களை யெல்லாம் சர்க்கார் அப்பட்டமாகப் பறிமுதல் செய்து விடலாமே!

பலமுறை கூறிய உண்மையை மீண்டும் கூறுகிறோம்: நம் நாட்டு ஜனத்தொகையில் ஏழை மக்களின் சதவிகிதம் மிகவும் உயர்வு. பெரும் செல்வந்தர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். அதாவது பணக்காரர்களின் உபரி வருமானத்தைக் கொண்டு ஏழ்மையைத் துடைக்க முடியாது. தனவந்தர்கள் நியாயமாக ஈட்டிய பொருளைப் பேண வசதி தந்தால்தான் தொழில்கள் பெருகும் என்பதை மக்கள் உணரவேண்டும். தொழில்கள் பெருகினாலொழிய நம்நாட்டில் மக்களுக்கு ஏராளமான தொழில் வசதியும், வேலை வாய்ப்பும் உண்டாக்க முடியாது. தனி முதலாளிகளின் செல்வம் சர்க்கார் கைக்கு மாறுமானால் மனித சக்தியை மிகக் குறைவாகவே பயன்படுத்தும் டம்பாச்சாரி திட்டங்களில்தான் அவை விரயமாகும். இதையெல்லாம் பொதுமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

''ஏன் சில ஏரி, குளங்களில் மட்டும் நீர் தேங்க வேண்டும்? அவற்றையெல்லாம் வெட்டி, ஊர் முழுவதும் ஒரே மட்டத்தில் ஜலம் ஓடச் செய்வோம்'' என்று அசமஞ்ச ஆட்சி நடத்த விரும்பி, அதைப் பட்ஜெட்டுகளில் செயலாக்கப் பார்க்கிறது காங்கிரஸ். இது தர்மமா, அதர்மமா என்ற கேள்வி ஒருபுறமிருக்கட்டும். இதை ஒரு பொருளாதாரப் பிரச்னையாகவே வைத்துப் பார்த்தாலும் கூட, இறுதியில் உற்பத்திக்குக் குந்தகம் உண்டாகித் தொழிலாளர் நலன் பாதிக்கப்படும் என்று அறிகிறோம். மறைமுக வரிகளில் பல எப்படிக் கடைசியில் பொதுமக்களின் தலை






வியிலேயே வந்து விழுகின்றனவோ, அதே போல் செல்வந்தர்களை ஒடுக்குவதற்காக இப்போது எடுக்கும் நடவடிக்கைகள் இறுதியில் பொதுமக்களுக்கே தீமையாக முடியும்.

இப்போதுதான் நம் மக்கள் பண்பில் உயர்ந்து நின்று ஆட்சியிலிருப்போருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்.

**ஊருணி நீர்நிறைந் தற்றே உலகு அவாம்**
**பேர் அறிவாளன் திரு**

என்று தெய்வப் புலவர் பாடியதற்கேற்பச் செல்வந்தர்கள், தடாகம் தண்ணீரை மக்கள் நலனுக்காகவே தருவது போல் தங்கள் செல்வத்தைப் பொது நன்மைக்காகவே ஈட்டிச் செலவிடப் பயில வேண்டும். நிர்ப்பந்தத்தின் மூலம் சர்க்காரால் சாதிக்க இயலாததை ஒப்புரவு உணர்ச்சியின் மூலம் செயலாக்கித் தர வேண்டும்.

ஏழை மக்களும் தாங்கள் கீழ்த்தரமான பொறாமை உணர்ச்சிக்கு மசிய மாட்டோம் என்பதைக் காட்டி, நியாயமான முறையில் பெருகும் செல்வத்துக்கு விதிக்கும் தடையை எதிர்த்து அதன் மூலம் நாட்டின் தொழில் உயரவும், தொழில் உயர்வின் அங்கமாகத் தங்களுடைய வாழ்நிலை உயரவும் உகந்த வழிகளையே ஆதரிக்க வேண்டும். ஏழை

களின் அருமை நம் நாட்டுப் பண்புக்குத் தெரியாத அம்சம். பாரத மக்கள் செல்வம் தேடுவதும் உழைப்பதும் தங்கள் சரீர வளர்ப்புக்கல்ல. தங்கள் மக்கள், உறவினர், இனத்தார் இவர்களுக்கு உதவவே. இது நம் காங்கிரஸ் ஆட்சியாளருக்கு மறந்து போயிற்று.

இன்று நாட்டை ஆள்கிறவர்கள் இந்திய மக்களின் பிரதிநிதிகளாகத் தோன்றவில்லை. அவர்களின் உடலில் பாரதப் பண்பு சிறிதும் ஓடவில்லை. மாஸ்கோ ரத்தம் ஓடுகிறவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிவு தர வேண்டியது மக்கள் கடமை.

# என்ன சேதி?

## ராஜாஜியும் மாணவர்களும்

இப்போது சர்க்கார் செய்து வரும் ஆட்சி மொழி, போதனை மொழிக் குழப்பத்தினால் பாதிக்கப்படப் போவது இளம் தலைமுறையினர்தான்.

நிகழ்கால வல்லரசு பேதங்களை வைத்துச் சர்க்கார் கடைப்பிடிக்கும் தகிடுதத்த அந்நியக் கொள்கைகளின் விளைவுகளை அநுபவிக்கப் போவதும் வருங்காலப் பிரஜைதான். திட்டங்களுக்காக வாங்கும் பெரிய கடன்களைத் தீர்க்க வேண்டியவர்களும் வாலிபர்களே.

இவ்வாறாக இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் முறையிலேயே இன்று ஆட்சி நடத்தப் பெறுவதைப் பொறுப்புள்ள எவருமே தகுந்தபடி எதிர்க்கவில்லை. பெரியோர்கள் தங்கள் கடமையைச் செய்யாமல் விட்டபடியால் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் கடமை யுவர்களுக்கு ஏற்படுகிறது. இவ்வாறு ராஜாஜி கருதி, இதனைக் கிறிஸ்துவக் கல்லூரி உரையொன்றில் வெளியிட்டார். மற்றப்படி அவர் இளைஞர்களுக்கு வலை விசி ஒத்துழையாமை இயக்கமோ, கல்வி பகிஷ்கரிப்பு இயக்கமோ நடத்தவில்லை. யாருடைய நலன்களைப் பாதிக்கும் முறையில் இன்று அரசு நடக்கிறதோ, அவர்கள் ஏமாந்து போகாமலிருக்க அவர் எச்சரிக்கை செய்தார். இதை வைத்துக்கொண்டு 'மாணவர்கள் தங்கள் படிப்பை விட்டு விட்டு அரசியலில் குதிக்க வேண்டுமென்று ராஜாஜி சொல்கிறார்' என்று அபவாதத்தைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். இது தகாது.

## இரண்டு முதன் மந்திரிகள்!

சட்டசபையில் பெருவாரி ஸ்தானங்களுள்ள கட்சியின் தலைவரே முதன் மந்திரி பதவி ஏற்று மந்திரிசபை அமைக்கவேண்டுமென்பது இதுவரை வழக்கமாயிருந்தது. இப்போது ஸுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பையொட்டி ராஜிநாமா செய்த சஞ்சீவ ரெட்டி அவர்கள் விஷயத்தில் இந்த விதி விலக்கப்பட்டிருப்பது காங்கிரஸ் கட்சியும் அரசாட்சியும் அத்வைத ஐக்கியம் அடைந்து வருவதில் மேலும் ஒரு படியாகும். பேருக்கு முதன் மந்திரி பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, ஒரு பொம்மை முதன் மந்திரியை முன்னே வைத்துக் கொண்டு பழைய அதிகாரம், செல்வாக்கு யாவற்றையும் பிரயோகித்து திரு சஞ்சீவ ரெட்டி நிர்வாகத்தை நடத்தப் போகிறார். காமராஜர் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாநிலத்திலும் இரண்டு முதன் மந்திரிகள் ராஜ்யபாரம் வகித்து வருகிறார்கள் என்று நாம் முன்பே சொன்னதுண்டு. ஆந்திரத்தில் அது மிகமிக வெளிப்படையாக நடைபெறப் போகிறது. கட்சியாபீசும் அரசாங்க ஆபீசும் இரண்டும் ஒன்றாகி, ஆட்சி அமைப்பே குழப்பத்துக்கு இரையாகி வருவதற்கு இது வழி.

## ஊழல் உத்தியோகஸ்தர்!

மத்திய மந்திரி ஸ்ரீ நந்தா அரசாங்க நிர்வாகத்தில் நிலவும் லஞ்சத்தையும், ஊழலையும் ஒழிக்க உறுதி செய்துகொண்டிருப்பதாகத் தினமும் முழங்குகிறார். ஆனால் உண்மையில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கிறது.

ஒரிஸ்ஸாவில் ஓர் உயர் அதிகாரியின் மீது லஞ்சப் புகார் சுமத்தப்பட்டு, அவர் வேலையினின்று 'ஸஸ்பெண்ட்' செய்யப்படவேண்டும் என்றும் தீர்ப்பாகியுள்ளது. 'அவரை நீக்குங்கள்' என்று ஒரு முறைக்கு மூன்று முறை மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கத்துக்குத் தாக்கீது விடுத்துள்ளது. எனினும், ராஜ்ய அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. இதற்குக் காரணம், அந்த அதிகாரி தம்மை நீக்கினால், மந்திரிகளும், மற்ற முக்கியமானவர்களும் நிகழ்த்திய ஊழல்களை அம்பலப்படுத்திவிடுவேன் என்று அச்சுறுத்திவருகிறாராம். இதற்குப் பயந்துகொண்டு ஊழல் உத்தியோகஸ்தர் என்று நிதர்சனமாகத் தெரிந்த ஒருவரை அனுப்ப முடியாமல் காங்கிரஸ் தவிக்கிறது.



அகிலன் எழுதும்
சரித்திரத்
தொடர் கதை
கயல் விழி
கல்கி
ஏப்ரல் 12ந்தேதி
புத்தாண்டு மலரில் ஆரம்பமாகிறது

# போகிற போக்கில்..



மந்திரி பதவியிலிருந்து கீழே இறங்கியதன் மூலம் நவீன பட்டினத்தாராகியவர்களைக் காங்கிரஸ் மேலிடம் மறந்துவிடாதென்று முன்பொரு சமயம் கூறியிருந்தோம். அது இப்போது பலித்து வருகிறது. மைசூரைச் சேர்ந்த திரு கே.சி. ரெட்டியும், ஃபருகாபாத்தில் தோல்வியுற்றதன் விளைவாகப் பதவியைத் துறந்த திரு ஹஃபீஸ் முகம்மது இப்ராஹிமும் கவர்னர்களாக நியமனம் பெறப் போவதாகச் செய்திகள் அடிபடுகின்றன.

ஃ ஃ ஃ

கேரளத்தில் பதவியைத் துறந்த திரு சாக்கோவுக்கு மோட்டார் காரும், பண முடிப்பும் தரப் போவதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்தச் செய்தியைப் பார்த்த இருவர் வயிற்றெரிச்சல் தாங்காது கஷ்டப்படுகிறார்களாம். ஒருவர் திரு கே.டி. மாளவியா. மற்றொருவரைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. அவர்தான் திரு கிருஷ்ண மேனன் என்பதை நாடே அறியும். திரு மாளவியா பாங்குகளைச் சர்க்கார் உடைமையாக்க வேண்டுமென்று கர்ஜிப்பதன் மூலமாகத் தமது ஆத்திரத்தைத் தணித்துக் கொள்ளுகிறாராம்.

ஃ ஃ ஃ

இன்னொருவராகிய திரு கிருஷ்ண மேனன் அமெரிக்காவிலிருந்து வரும் உதவி ராஜாங்கக் காரியதரிசியான திரு டால்போட்டுடன் எந்த மந்திரியும் பேசக்கூடாதென ஹைதராபாத்தில் முழங்குவதன் மூலம் கோபத்தை ஆற்றிக்கொள்ள நினைக்கிறார். திரு டால்போட் காஷ்மீர் விவகாரம் குறித்துப் பேச வருகிறார் என்பதாக வந்திருக்கும் செய்திதான் இவரது ஆத்திரத்துக்குக் காரணம். வருகிறவரிடம் பேசவே கூடாதெனப் பதவி போன இவர் பதவியிலிருக்கும் மந்திரிகளுக்குப் புத்திமதி சொல்வது என்ன ஆச்சரியம் பாருங்கள்! இந்த ஆச்சரியங்களெல்லாம்தான் காங்கிரஸ் ஆட்சியில் சகஜமாகி விட்டனவே. கடைசியில், டால்போட்டோ 'நான் காஷ்மீரைப் பற்றி எதுவுமே பேச வரவில்லை. பொருளாதார, ராணுவ உதவிகள் குறித்தே பேசப்போகிறேன்' என்று கூறி விட்டார். அவர் செய்யப் போகாத ஒரு காரியத்தை இவ்வளவு அவசரப்பட்டுக் கண்டனம் செய்து திரு கிருஷ்ண மேனன் அவர்கள் தமது கருடன் மூக்கை உடைத்துக் கொண்டிருக்க வேண்டாம்!

ஃ ஃ ஃ

ஆண்டொன்றுக்கு உணவுப்பொருள்கள் விலை நூற்றுக்கு ஏழு ரூபாய் வீதம் ஏறிக் கொண்டே போகிறதென்றும், அதே சமயத்தில் ரூபாயின் வாங்கும் சக்தி குறைந்து கொண்டே வருகிறதென்றும், 1956ல் ஒரு ரூபாய்க்கு மதிப்பு ஒரு ரூபாயாக இருந்ததென்றால் இன்று அதன் மதிப்பு நாற்பது காசுதான் என்றும் ஒரு பொருளாதார விமர்சனம் கூறுகிறது. இந்த விமர்சனத்தைப் பார்க்கும்போது நமக்கு ஒரு பயம் ஏற்படுகிறது. 1956லிருந்து 1964க்குள் நூறு காசு நாற்பது காசாகக் குறைந்திருக்கிறது என்றால் 1964லிருந்து 1972க்குள் இந்த நாற்பது காசு என்ன கதிக்கு உள்ளாகும்? ஐந்தாண்டுத் திட்டம் தொடர்ந்து நடைபெறுமேயானால் நாடே ஓட்டாண்டியாக வேண்டியதுதான். இதைத்தான் ராஜாஜி படித்துப் படித்துச் சொல்கிறார். ஆனால் ஆளும் கட்சி உணருவதாகக் கூடத் தெரியவில்லை. ரூபாய்க்கு எவ்வளவு மதிப்புக் குறைந்துவிட்டாலும் அமுதகரபியான காங்கிரஸ் கஜானா இருக்க ஆட்சியாளருக்குக் கவலை ஏன்?

ஃ ஃ ஃ

இந்தியா மீது சீனா படையெடுத்ததை ருஷ்ய அரசாங்கம் ஆதரிப்பதாகப் பீகிங் சர்க்காரின் ''பீப்பிள்ஸ் டெய்லி'' என்ற பத்திரிகை, செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்தச் செய்தியைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டாமென்றும் பிரசார நோக்கத்துக்காக இப்பத்திரிகை இப்படிச் சொல்லுகிறதென்றும் வெளிநாட்டிலாகா உதவி மந்திரி ஸ்ரீமதி லட்சுமி மேனன் சொல்லுகிறார். ஸ்ரீமதி லட்சுமி மேனன் சொல்லுவது இந்திய அரசாங்கத்தின் அபிப்பிராயமாகும். யாரைப் பற்றியும் சந்தேகம் கொள்ளாது நல்ல விதமாகப் பேசுவது சிறந்த பண்புதான். ஆனால் இப்பண்பை அஜாக்கிரதைக்கு ஒரு சாக்காக வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. கம்யூனிஸ்டுகள் விஷயத்தில் எதற்கும் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும். இந்திய சர்க்கார் ருஷ்யாவை நம்புகிற அளவுக்கு மக்கள் அதை நம்பவில்லை என்பதை ஆட்சியாளர்கள் மறந்துவிடக் கூடாது.

ஃ ஃ ஃ

ஹோட்டல்களில் சாப்பாட்டு விலை ஏறிவிட்டது. அரிசி படி ரூபாய் இரண்டென விற்பது தான் காரணம் என்று கூறப்படுகிறது. இதற்கு விமோசனம் கிடையாதா என்று ஹோட்டலை நம்பி வாழ்வோர் ஏங்குகிறார்கள். ஏங்குவோருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறோம். அரசாங்கம் பின்பற்றிவரும் கட்டாயக் கொள்முதல் கொள்கையையும் உணவுப் பொருள் விநியோக மண்டல ஏற்பாடுகளையும் கைவிட்டால் விலை தானாகவே இறங்கிவிடும். இப்படிக் கைவிடச் செய்வதற்கு மக்களும் ஒரு காரியம் செய்ய வேண்டும்.

அதாவது சென்னைவாசிகள் நகரசபைத் தேர்தலில் எப்படி வோட்டுப் போட்டனரோ அதேபோல், எல்லா மக்களும் பொதுத் தேர்தலில் செய்ய வேண்டும். தனது கொள்கைகளைக் கைவிட மறுக்கும் காங்கிரஸை மக்கள் கைவிட்டால் தான் விமோசனம் கிடைக்கும்.

**— சிட்டுக் குருவி**




அவரிடம் உங்கள்
ஆசையைக் காட்ட...
அம்பீஸ்
காண்டிமெண்ட்ஸில்
தயாரித்த
உணவு
கொடுங்கள்
• சாம்பார் பொடி
• ரசப் பொடி
• கறிப் பொடி
தயாரிப்பாளர்:-
அம்பீஸ் கபே 6. பிராட்வே, சென்னை-1




அருணகிரி விலாஸ்
சீயக்காய்
பவுடர்
REGD
ARUNAGIRI VILAS SOAP NUT POWDER, KARAIKUDI



# மானேர்ஸ்
# கிரைப் மிக்ஸ்சர்
# கொடுத்து



மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் அஜீரணத்தைத் தடுக்கிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்குப் பற்கள் தோன்றும்போது பெருமளவில் உதவுகிறது.

குடலில் ஏற்படும் திருகுவலி போன்ற வயிற்று வலி சம்பந்தமான தொல்லைகளைப் போக்கி, சுகமான நிலையை உண்டாக்குகிறது.

வயிற்று விக்கல்களை-உப்புசங்களைப் போக்கி, காற்று பிரிவதற்கு உதவுகிறது.

உடல் நலத்தைப் பாதுகாத்து, குழந்தை அமைதியுடன் உறங்கவும் உறுதுணைபுரிகிறது.

# மீண்டும்
# புன்னகை
# தோன்றக்
# காணுங்கள்





ஒரு நாளைக்கு இருமுறை வீதம்
ஒவ்வொரு நாளும்
**மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர்**
கொடுத்து வந்தால், உங்கள் குழந்தை
உற்சாகத்துடனும், உடல்
நலத்துடனும் காணப்படும்.

**GEOFFREY MANNERS & COMPANY LIMITED**

ASP/GM 18 TM.

# பட்டினத்துப் பேச்சு



○ உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் பல சிப்பாய்களுக்குக் கொலை வெறி கட்டு மீறிப் போய் விடுவதுண்டு. தாங்கள் வெற்றி கொண்ட கிராமத்திலுள்ள ஒரு பாவமும் அறியாத ஆடு மாடுகளை வெட்டித் தள்ளுவார்கள்.



ஆனால் காங்கிரஸ் தோற்றுவிட்ட ஒரு தொகுதியில் ஒரு மாட்டைப் பதினேழு ரூபாய்க்கு வாடகைக்கு எடுத்து அதனை நையப் புடைத்த தேர்தல் வெறியை என்னென்பது? வெட்கக் கேடு!

○ தங்கக் கட்டுப்பாட்டையொட்டி அரசாங்கம் தங்கப் பத்திரங்களை வெளியிட்டது. நாட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாய் நிதி மந்திரி கருதும் தங்கத்தின் பெறுமானம் நாலாயிரம் கோடி ரூபாயாகும். ஆனால் தங்கப் பத்திரங்கள் பத்துக்கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கத்தைத்தான் இன்று வரை அரசாங்கத்துக்குப் பெற்றுத் தந்துள்ளன.

இதே சமயத்தில் தங்க நகைகளில் வியாபாரம் படுத்து விட்டதன் காரணமாக அரசாங்கம் ஒவ்வொரு வருஷத்திலும் முப்பது கோடி ரூபாய் வரி வருமானத்தை இழந்து கொண்டிருக்கிறது.

தங்கக் கட்டுப்பாட்டை அடுத்து நாடெங்கிலுமுள்ள 23,000 நகை வியாபாரிகள் கடையை மூடும் நிலைக்கு வந்துள்ளனர்.

ஐந்து லட்சம் பொற்கொல்லர்கள் வறுமையால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இதுவரை இருநூறு பேர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

முன்பெல்லாம் பாங்குகளும் மற்ற நிதி நிறுவனங்களும் தங்கத்தை அடமானமாக வைப்பவர்களுக்குச் சுமார் ஐந்நூறு கோடி ரூபாய் வரையில் ஒவ்வொரு வருஷமும் கடன் வசதி அளித்து வந்தன. இத்தொகை தொழில் துறையில் முதலீடாகி வந்தது. இப்போது தங்கத்தை அடமானம் வைக்க அனைவரும் அஞ்சுகிறபடியால் இந்தப் பெருந் தொகை ஒவ்வொருஆண்டும் தொழில் துறையில் முதலீடாவது பெரும்பாலும் தடுக்கப்பட்டுவிட்டது.

○ சஞ்சீவரெட்டி தம்மை நீரில்லாத ஆற்றுக்கும், விக்கிரகம் இல்லாத கோயிலுக்கும் ஒப்பிட்டுக் கொண்டார். தாம் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகி விட்டதால் அதிகார பலம் இல்லாத ஒரு தலைவன் என்று கூறிக் கொண்டார். சஞ்சீவ ரெட்டி அதைரியம் அடைந்து குறைப்பட்டுக் கொள்ள வேண்டியதில்லை.



முஸ்லிம் மக்கள் விக்கிரகம் இல்லாத மசூதிக்குத்தான் போகிறார்கள். அவர்கள் அப்துல் ரஹ்மான், அப்துல் ஹமீத், அப்துல் கரீம் என்றெல்லாம் பெயர் வைத்துக் கொள்கிறார்கள். அப்துல் என்ற சொல்லுக்கு ஆண்டவனின் பணியாள் என்று அர்த்தம். திரு சஞ்சீவ ரெட்டி கொஞ்ச நாளைக்கேனும் ஓர் உண்மையான அப்துல்லாக இருந்து பார்க்கட்டும். அது ஆட்சிப் பொறுப்பு அதிகார பலம் எல்லாவற்றையும் விடச் சிறந்தது எனக் காண்பார்.

○ சென்னை சட்டசபையில் எஸ். ராமஸ்வாமி, திருச்சியில் தன்னைத் தானே எரித்துக் கொண்ட சின்னஸ்வாமியை அவ்வாறு செய்யுமாறு தி. மு. கழகம் தூண்டவில்லை என்றும் கழகத் தலைவர்களைச் சின்னஸ்வாமி கலந்தாலோசித்திருந்தால் அவ்வாறு செய்ய வேண்டாமென்று அவர்கள் அறிவுரை வழங்கி யிருப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

சின்னஸ்வாமி அதை அறிந்துதான் யாரையும் கேளாமல் தம்மைத் தாமே கட்டெரித்துக் கொண்டிருப்பார். எந்த வகையிலேனும் பிரபலமடைய வேண்டும் என்கிற அவாவினால் உந்தப்பட்டுச் சிலர் இப்படிப்பட்ட காரியங்களில் இறங்குகின்றனர். ஒரு காரணமுமில்லாமல் கென்னடியைக் கொன்ற ஆஸ்வால்டும் ஆஸ்வால்டைச் சுட்டுத் தீர்த்த ரூபியும் தங்கள் பெயர் உலகப் பிரசித்தி பெற வேண்டும் என்பதற்காகவே அக்காரியங்களைச் செய்தனர் என்று மனோதத்துவ நிபுணர்களைக் கேட்டால் சொல்லுவார்கள்.



'அண்ணா ஒரு குற்றமும் செய்யவில்லை; அவரை விடுதலை செய்யுங்கள்' என்று கோட்டைக்கு முன்னால் கத்திவிட்டுக் கம்பி எண்ணப் போன அன்பு மணியும் பிரபலமடையவேண்டும் என்கிற மனோ வியாதியால் பீடிக்கப்பட்ட ஒருவராகத்தான் இருக்க வேண்டும்.

○ பிப்ரவரி 17ந் தேதியன்று காணாமல் போன இந்திய விமானப் படையைச் சேர்ந்த ஒரு விமானத்தை இன்றுவரை (மார்ச் 5உ) கண்டுபிடிக்க முடியவில்லை.

'பதினேழு நாட்களாக ஒரு விமானம் காணாமல் போயிற்று, அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை' என்று சொல்லிக் கொண்டிருக்கிற காரியம் நம் நாட்டில் மட்டும்தான் நடக்க முடியும், நம்புங்கள்! அந்த விமானத்தில் இருந்தவர்களின் எண்ணிக்கை — துரதிர்ஷ்ட எண்ணான 13!

இந்த லட்சணத்தில் இன்றைய தேதியில் இந்திய விமானப் படையைச் சேர்ந்த இன்னொரு விமானம் விழுந்து நொறுங்கி இருபத்திரண்டு பேர் இறந்துபோனதாய்ச் செய்தி வந்திருக்கிறது.

○ 'எங்கே விஜயா?' என்று குமுதம் கேட்டதற்கு 'இதோ இங்கே' என்று பதிலளிப்பது போல் கற்பகம் புகழ் விஜயாவைப் பற்றிய ஒரு விளம்பரம் அடுத்த நாள் ஹிந்து பத்திரிகையிலேயே வெளிவந்தது. சென்னையில் நடக்கும் கைத்தறித் துணி கண் காட்சியில் அன்று மாலை சர்க்கரை மன்றாடியார், ம. பொ. சி. ஆகியோருடன் ஒரே மேடையில் தோன்றி பேசப் போகிறார் என்பதுதான் அந்த விளம்பரம்!

— இராவதம்



# நடப்பவைதான் நம்புங்கள்

ஜோகன்னஸ்பேர்க் பெண்மணிகளின் டம்பப் பையைக் கொள்ளையிட்டுச் செல்பவன் அப்பையைத் திறந்தால் 'உஸ்' என்று சீறிக் கொண்டு பாம்பு வருமாம்! அதைக் கண்டு நடுநடுங்கிப் பையை அங்கேயே போட்டுவிட்டு ஓடி விடுபவர்களும், போலீசில் ஒப்படைத்து விட்டு ஓடி விடுபவர்களும், டாக்டர்களைத் தேடிக் கொண்டு போவோரும் — இப்படிப்



பல ரகமாக ஜேப்படித் திருடர்கள் மாறி விடுகிறார்களாம்!

இதற்காகவே ஜோகன்னஸ்பேர்க்கில் ஏராளமான பெண்கள், வீட்டு வளர்ப்புப் பிராணிகள், பறவைகள் விற்கும் கடைகளுக்குச் சென்று விஷமில்லாத பாம்புகளை வாங்கத் தொடங்கி யிருக்கிறார்கள். ஒரு ரூபாயிலிருந்து எண்பது ரூபாய்வரை பல வகைப் பாம்புகள் கடைகளில் கிடைக்கின்றனவாம். கார் ஓட்டும்பெண்கள் தங்கள் வண்டிகளைத் திருடர்கள் கவர்ந்து கொண்டு போகாமல் இருக்க ஸ்டீயரிங்கைச் சுற்றிப் பாம்பைக் கட்டி வைக்கிறார்கள். பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் போது கார் திருடர்களும் ஜேப்படிக்காரர்களும் எம்மாத்திரம்?

ஃ ஃ ஃ

● ''அவனைப் பூச்சி போல நசுக்கிப்பிடுவேன்!'' என்னும்போது, பூச்சியை எவ்வளவு அற்பமான பொருளாக மதிக்கிறோம் என்பது புலனாகிறதல்லவா? இனி அப்படிச் சொல்வதற்கில்லை. ருஷ்யா, பிரிட்டனிடமிருந்து ஏழு கோடி ரூபாய் பெறுமானமுள்ள புழுக்களை வாங்க மிக ஆவலாக இருக்கிறதாம். ருஷ்யர்கள், வயலுக்கு ரசாயன உரமிடுவதைவிட இப்புழுக்கள் மண்ணின் உரத்தை அதிகப்படுத்தி, விளைவைப் பெருக்க உதவுகின்றன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அராபியர்கள், பிரிட்டிஷ் புழுக்கள் தங்கள் பாலை வனங்களை யெல்லாம் பொன் கொழிக்கும்வயல்களாக்கப் போகின்றன என்று பெருமிதத்தோடு கூறுகிறார்களாம். பிரிட்



டிஷ் விமானப் படையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரி டோனிவுல் என்பவர் தமது ஸ்காட்லாந்துப் பண்ணையில் புழுக்களை உற்பத்தி செய்து அராபிய நாடுகளுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்றுமதி செய்ய விருக்கிறார். புழு அவருக்குப் பொன்னாகி விட்டது!

ஃ ஃ ஃ

● த்ரீ — டி சினிமா நினைவிருக்கிறதா? நீள அகலங்களை மட்டுமின்றி ஸ்பெஷல் மூக்குக் கண்ணாடியின் உதவியுடன் கன பரிமாணத்தையும் அதில் கண்டோம்: இப்போது பத்திரிகை உலகிலும் த்ரீ—டி புகுந்திருக்கிறது. 'லுக்' என்ற பத்திரிகை பதின்மூன்று வருஷ ஆராய்ச்சிக்குப்பிறகு தாமஸ் ஆல்வா எடிசனையும் அவர் கண்டுபிடித்த கருவிகளையும் ஓர் அட்டையில் த்ரீ—டி படமாகத் தந்திருக்கிறது. எனினும் இந்தப் புரட்சி பத்திரிகை உலகில் பரவலாகப் புக நீண்ட காலமாகும். ஏனெனில், 'லுக்'கின் இந்தப் புது முயற்சி சிரம சாத்தியமானது. செலவோ மிக அதிகம். ஒவ்வொரு படமும் தயாரிக்க வாரக் கணக்கில் தாமதமாகும். விளம்பரக் கலையிலும் வாழ்த்து மடல் தயாரிப்பிலும் த்ரீ—டி முதலில் பிரபலமடையும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஃ ஃ ஃ

● ''எப்போ பார்த்தாலும் என்ன தூக்கம்! பாடப் புத்தகத்தை எடுத்து வைச்சுண்டு படியேண்டா!'' என்று பெற்றோர்கள் வருங் காலத்தில் பிள்ளைகளைக் கோபிக்க மாட்



டார்கள். 'எப்போ பார்த்தாலும் என்ன படிப்பு பேசாமல் படுத்துண்டு தூங்கு!' என்று தான் அதட்டுவார்கள். ஆம், இத்தாலிய நிபுணர் ஒருவர் தூங்கும் போதே பாடம் போதிக்கும் கருவியொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார். மாணவர்கள் போனைக் காதில் பொருத்திக் கொண்டு தூங்கலாம். காலையில் எழுந்ததும் அவர்களுக்குப் பாடம் நன்றாக நினைவிருக்கும்; நன்றாகப் புரிந்துமிருக்கும்!

ஃ ஃ ஃ

● இங்கிலாந்தில் க்ளோஸ்டர்ஷயர் பிரதம போலீஸ் அதிகாரி தமது காரில் வரும்போது ஏதோ ஒரு தெருவில் திரும்பினார். அவ்வளவு தான்; அவர் கார், தெருவில் போய்க் கொண்டிருந்த கார் மீது மோதி விட்டது. தவறு தம்முடையது என்று அந்தப் பிரதம



போலீஸ் அதிகாரிக்குப் பட்டு விட்டது. உடனே தமக்குத் தாமே நீதிமன்றத்துக்குப் போக 'சம்மன்' கொடுத்துக் கொண்டார். வழக்கை விசாரித்த நீதிபதி ஜாக்கிரதையாகக் காரை ஓட்டாததற்காக இருபது பவுண்டு (சுமார் 260 ரூபாய்) அபராதம் விதித்தார். ஆயினும் அவர் நேர்மையை மனமாரப் பாராட்டிவிட்டுத்தான் அனுப்பினார்!

ஃ ஃ ஃ

● கடலில் மீன் பிடிப்போருக்கு வசதியாக மீன்கள் அதிகமாக இருக்கும் இடங்களைக் காட்ட ஜெர்மனியில் விமானங்களை உபயோகிக்க முடிவு செய்திருக்கிறார்கள். ஒரு விமானம் 300 சதுர மைல்களை மீன்களுக்காக எளிதில் சர்வே செய்யும். இதற்கு விசேஷக் கண்ணாடிக் கருவிகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.








**1, 2, 3:** சென்னை, திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தினர் பிப்ரவரி 22ந் தேதியி லிருந்து 29ந் தேதி வரை நாடக விழா நடத்தி ரேடியோ ரஸிகர்களை மகிழ்வித்தனர். சர்வர் சுந்தரம், உறவுக்கு அப்பால், இமயத்தின் கண்கள் ஆகிய நாடகங்களில் கலந்துகொண்ட கலைஞர்கள் சிலரையும், ரேடியோ நாடகத் தயாரிப்பாளர் சுகி சுப்பிரமணியம் அவர்களை யும் படங்களில் காணலாம். 4. கேரள ராஜ் யத்திலுள்ள ஐயப்பன் ஸ்தலமாகிய ஸ்ரீ அச்சன் கோவிலில் ஜனவரி 21ந் தேதி நடந்த புஷ் பாஞ்சலி வைபவத்தின்போது தமிழ்வேள் திரு பி. டி. இராசன் அவர்கள் ஆண்டவ னுக்குக் காவடியேந்திச் செல்லும் அருமை யான காட்சி இது. 5. அந்தமானில் நிறுவப் பட்டுள்ள கடற்படை நிறுவனத்தை ஸ்ரீமதி ஸோமன் தொடங்கி வைக்கிறார்.





# அவளுடைய இன்பமான எதிர்காலத்திற்கு




இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கின் ரெக்கரிங்
டிபாஸிட் திட்டத்தின் சேமிப்பு நிச்சயம் உதவும்...

குறைந்த பட்சம் ரூ. 5/-லிருந்து அதிக பட்சமாக அதன் பெருக்குத் தொகை ரூ. 500/- வரையில், டிபாஸிட்டுகள் ஏற்றுககொள்ளபபடும்.

பிரதிமாதம் டிபாஸிட் செய்யும் தொகையான :

ரூ. 5/- ரூ. 10/- ரூ. 50/- ரூ. 100/- ரூ. 500/-

கீழ்க்கண்டபடி பெருகும் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 மாதங்களில் | ரூ. 61.00 | ரூ. 122 | ரூ. 610 | ரூ. 1,220 | ரூ. 6,100 |
| 24 மாதங்களில் | ,, 124.50 | ,, 249 | ,, 1,245 | ,, 2,490 | ,, 12,450 |
| 36 மாதங்களில் | ,, 192.00 | ,, 384 | ,, 1,920 | ,, 3,840 | ,, 19,200 |
| 48 மாதங்களில் | ,, 262.00 | ,, 524 | ,, 2,620 | ,, 5,240 | ,, 26,200 |

*முழு விபரங்கள் பாங்கின் எந்தக் கிளைக்*
*காரியாலயங்களிலும் கிடைக்கும்*

## இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிட்.

தலைமைக் காரியாலயம் : 151, மவுண்ட் ரோட், சென்னை-2

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

எஸ். ஆர். வி. அரசு
ஜெனரல் மானேஜர்

IOB-6-94

# இன்றைய பிரச்னை

## ஸைப்ரஸ்

நூற்றி நாற்பது மைல் அதிகப்பட்ச நீளமும் அறுபது மைல் அகலமுமேயுள்ள சிறிய ஸைப்ரஸ் தீவு இன்று எரிமலையாகக் கொந்தளித்து உலகத்தையே கவலையில் ஆழ்த்தி இருக்கிறது. மத்தியதரைக் கடலிலுள்ள இத்தீவில் வாழும் 500,000 கிரேக்க ஸைப்ரஸ்வாசிகளும் (கிறிஸ்துவர்கள்) 100,000 துருக்கிய ஸைப்ரஸ்வாசிகளும் (முஸ்லிம்கள்) ஒருவரையொருவர் தீர்த்துக் கட்டுவதிலேயே கண்ணுக இருக்கிறார்கள்.

மூன்று கிரேக்க ஸைப்ரஸ் பாதிரிமார்கள் துருக்கிய ஸைப்ரஸ்வாசிகளால் கொல்லப்பட்டனர். — அவர்களுடைய நாய் இவர்களுடைய ஆடுகளுக்குத் தொல்லை கொடுத்தது என்பதற்காக! கிரேக்க ஸைப்ரஸ்வாசியான ஒரு ரொட்டிக் கடைப் பையனின் மண்டை தகர்க்கப்பட்டு அவன் இறந்து கிடக்கும் புகைப்படம் பிரபலமான மறுகணம், துருக்கிய ஸைப்ரஸ் தாயும் இரு குழந்தைகளும் குளிக்கும் தொட்டியில் ரத்தக் குளத்தின் மத்தியில் செத்துக் கிடக்கும் புகைப்படத்தின் பிரதிகள் தீவு முழுதும் தீப்போலப் பரவி எரிச்சலைக் கிளப்பின. ஒரு சாராருக்கு மறு சாராரிடம் நம்பிக்கையில்லை. ஆகவே, 'அவர்கள் நம்மைக் கொல்வதற்கு முன்னால் நாம் அவர்களைக் கொன்று விடுவோம்' என்பதே இரு சாராருக்கும் தாரக மந்திரமாக இருந்து வருகிறது.

இந்தப் பகைமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அதன் ஆணிவேர் சரித்திரத்தில் பல நூறு ஆண்டுகள் ஊடுருவி அழுத்தமாக அழுந்திக் கிடக்கிறது.

அடுத்தடுத்துப் பல தேசங்களைச் சேர்ந்த பல அரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டு வந்த ஸைப்ரஸ் 1571ல் ஆட்டோமான் (துருக்கி) சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக மாறியது. அப்போது கிறிஸ்தவர்களுக்கு அதிகமான சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் 1821ல் கிறிஸ்துவ மதகுருமார்களின் செல்வாக்கு அதிகமாவதைக் கண்டதும் அத்தலைவர்கள் பலரை ஆட்டோமான் அதிகாரிகள் கைது செய்து, கிரீஸுக்குச் சுதந்திரம் கோரிப் புரட்சி செய்து வந்த கிரேக்கர்களுடன் ஒத்துழைத்ததாய்க் குற்றம் சாட்டித் தூக்கிலிட்டனர். அப்போது ஆரம்பித்த பகைதான் காலத்தால் அழியாமல் 'விடேன் தொடேன்' என்று தொடர்ந்து இருந்து வருகிறது.


1878ல் துருக்கியுடன் பிரிட்டன் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தப்படி ருஷ்யா துருக்கியைத் தாக்கினால் பிரிட்டன் துருக்கிக்கு உதவும். இதற்குப் பிரதியாகப் பிரிட்டன் ஸைப்ரஸில் ராணுவ தளம் அமைக்கவும் அந்நிலையை நிர்வகிக்கவும் உரிமை பெற்றது. முதல் உலக யுத்தத்தின் போது துருக்கி ஜெர்மனி பக்கமாகச் சாய்ந்ததும் இந்த நிர்வாக உரிமையைப் பரிபூரண ஆதிக்க ஆட்சி உரிமையாக மாற்றி பிரிட்டன் ஸைப்ரஸைத் தனது சாம்ராஜ்யத்தில் இரண்டறக் கலக்கச் செய்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழும் 480 மைல்களுக்கு அப்பாலுள்ள கிரீஸுடன் இத்தீவு இணைய வேண்டும் என்ற கிரேக்க ஸைப்ரஸ்வாசிகளின் புரட்சியும் இதற்கு எதிராகத் துருக்கிய ஸைப்ரஸ்வாசிகளின் இயக்கமும் தோன்றி வளர்ந்து வந்தன. 1956ல் அராஜகச் செயல்களுக்கு வித்திட்டதற்காகக் கிரேக்க ஸைப்ரஸ்வாசிகளின் முக்கிய தலைவரான ஆர்ச் பிஷப் மகாரியாஸ் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டார்.

இந்த இரு சாராருக்கும் ஏற்ற வகையிலும், அதே சமயத்தில் பிரிட்டனின் யுத்த சாணக்கியத்துக்கும் பிற நாடுகளுடன் அது பாதுகாப்புச் சம்பந்தமாய்ச் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்குப் பங்கம் ஏற்படாத முறையிலும் ஒரு நல்ல முடிவை பிரிட்டன் நாடியது.

இதன்படி 1959ல் மகாரியாஸ் ஸைப்ரஸுக்குத் திரும்பினார். 1960ல் ஸைப்ரஸ் சுதந்திர நாடாகியது. துருக்கி, கிரீஸ், பிரிட்டன், ஸைப்ரஸ் ஆகிய நாலு நாடுகளின் ஒப்புதலுடன் ஸைப்ரஸுக்கு அரசியல் நிர்ணயச் சட்டம் வகுக்கப்பட்டது. பிரிட்டனுக்கு இரண்டு இடங்களில் போர்த் தளங்கள் அமைக்கும் பாத்தியதையும் அந்த இரு பகுதிகளின் முழு நிர்வாக உரிமைகளும் தரப்பட்டன. ஸைப்ரஸ் துண்டாடப்படுவதோ அல்லது வேறு ஒரு ராஜ்யத்துடன் சேருவதோ கூடாது என்று முடிவாகியது. இந்த ஷரத்துக்களை ஸைப்ரஸ் மீறினால் மற்ற மூன்று நாடுகளும் சேர்ந்தோ, அல்லது தனித் தனியாகவோ நடவடிக்கை எடுக்கலாம். துருக்கிக்கும் கிரீஸுக்கும் ஸைப்ரஸுக்கும் இடையில் ஏற்பட்ட ராணுவ ஒப்பந்தப்படி பாதுகாப்புத் தலைமை அலுவலகம் ஸைப்ரஸில் ஏற்பட்டது.

ஆனால் அன்று உருவான அரசியல் நிர்ணயச் சட்டப்படி ஆட்சி நடத்துவது நடைமுறையில் மிகவும் சிரம சாத்தியம் என்பதை ஸைப்ரஸ்வாசிகள் இன்று உணர்ந்து வரு




கிறார்கள். ஜனாதிபதி கிரேக்க ஸைப்ரஸ்வாசியாகவும் உபஜனாதிபதி துருக்கிய ஸைப்ரஸ்வாசியாகவும் இருக்க வேண்டும் என்பதிலிருந்து ஆரம்பித்தால் ஒவ்வொரு நகரத்திலும் இரு சாரார்களுக்கும் தனித்தனியே இரண்டு நகரசபைகள் இருக்க வேண்டும் என்பது வரை — நீதி பரிபாலனம், ராணுவம், ஆட்சி மொழி, மந்திரிகள், மக்கள் பிரதிநிதிகள் போலீஸ் போன்ற சகலத்திலும் 'உனக்கு இவ்வளவு எனக்கு இவ்வளவு' என்பது போல் பங்கீடு அரசியல் நிர்ணயச் சட்டப்படியே இருந்து வருகிறது. இந்நிலையில் ஒழுங்கான ஆட்சி நடத்துவது அசாத்தியம் என்று கருதுகிறார் விவசாயக் குடும்பத்தில் தோன்றி ஜனாதிபதியாக உயர்ந்த மகாரியாஸ். ''ஏன் முடியாது? மகாரியாஸ் அரசியல் நிர்ணயச் சட்டப்படி ஆட்சி நடத்த முயன்றுகூடப் பார்க்கவில்லை!'' என்று குற்றம் சாட்டுகிறார் உப ஜனாதிபதி கட்சுக். அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றினால் சிறுபான்மையினரான துருக்கியரின் செல்வாக்குக் குறையும் என்பதால் ஸைப்ரஸிலிருந்து நாற்பது மைல் தொலைவிலுள்ள துருக்கி ஒரு நாளும் அதற்கு இணங்காது. அதைவிடத் தீவை இரு பகுதிகளாகப் பிரித்துவிடுவதே மேல் எனக் கருதுகிறது துருக்கி.

இதற்கிடையில் தீவிலுள்ள இரு சாராரும் கத்தியைத் தீட்டத் தொடங்கினர். துப்பாக்கிகளுக்கும் குறைவில்லை. (ராணுவ ஒப்பந்தத்தின் கீழ் ஸைப்ரஸுக்கு வரும் கிரேக்க, துருக்கியத் துருப்புக்கள் துப்பாக்கிகளைக் கொணருகின்றன; நாடு திரும்பும்போது வெறுங்கையுடன் திரும்புகின்றன!)

துருக்கி, 'சிறுபான்மையினரான துருக்கிய ஸைப்ரஸ்வாசிகள் சித்திரவதைக்குள்ளாகின்றனர்; இதோ படையெடுப்பேன்' என்று பயமுறுத்தியது.

இதன் நடுவே பிரிட்டன், அமைதியை நிலைநாட்ட முயன்று வரும் தனது ஏழாயிரம் துருப்பினருக்கு உதவியாக 'நாட்டோ' நாடுகளின் ஒத்துழைப்பையும் நாடியது. இதன் விளைவு நாட்டைத் துண்டாட எண்ணும் துருக்கிக்குச் சாதகமாகத்தான் இருக்கும் என எதனாலோ அஞ்சிய மகாரியாஸ் (துருக்கி, கிரீஸ் இரண்டுமே நாட்டோ நாடுகள் தான்) ஸைப்ரஸ் சிக்கல் ஐ. நா.விடம் போக வேண்டுமென்றார். ஐ. நா.வின் தலையீட்டால் ஸைப்ரஸ் விவகாரங்களில் ருஷ்யாவின் நிழலும் படரலாமென்றும் கம்யூனிஸத் துருப்புக்கள் அந்தத் தீவில் வந்திறங்கலாமென்றும் முதலில் எண்ணிய பிரிட்டன் தன் நிலையைப் பின்னர் ஓரளவுக்கு மாற்றிக்கொண்டு ஐ. நா.வின் பாதுகாப்பு சபைக்குத் தானே ஸைப்ரஸ் விவகாரத்தை முதலில் கொணர்ந்தது. வெகு சீக்கிரத்தில் ஐ. நா. மேற்பார்வையில் பிரிட்டன் தலைமை தாங்கும் சமாதானத் துருப்புக்கள் பல நாடுகளிலிருந்தும் திரட்டி அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா.விடம் ஒப்படைக்கப்பட்ட ஸைப்ரஸ் பிரச்னை சுமுகமான முறையில் தீர்க்கப்படும் என்று உலகம் நம்பிக்கொண்டிருக்கிறது.



# இப்பொழுது...




**வாரம் 2 முறை போயிங் சர்வீஸ்**

## மதராஸிலிருந்து சிங்கப்பூருக்கும்

**அங்கிருந்து**

## ஜாகர்த்தாவுக்கும் மற்றும்

## ஸிட்னிக்கும்!



பிரதி செவ்வாய்க்கிழமை : மதராஸ்-சிங்கப்பூர்-பேர்த்-ஸிட்னி
பிரதி ஞாயிற்றுக்கிழமை : மதராஸ்-சிங்கப்பூர்-ஜாகர்த்தா

விமான சர்வீஸ் நடத்துவதில் 31 வருஷங்களுக்கு மேற்பட்ட அனுபவம்

**ஏயர்-இந்தியா** பி.ஓ.ஏ.ஸி. மற்றும் கன்டாஸ் ஒத்துழைப்புடன்

**தேசப்பாதுகாப்புக்கு சேமியுங்கள்!**

1892-ம் ஆண்டின் கடைசித் தினங்களில் ராமநாதபுரம் சம்ஸ்தானம் வழியாக யாத்திரை செய்து புதுச்சேரி வந்தடைந்தார் ஸ்வாமிஜி. அங்கு சிறிது காலம் ஓய்வெடுத்துக் கொண்டார்.

திருவனந்தபுரத்தில் மன்மதநாத பட்டாசாரியர் என்றொருவர் ஸ்வாமிஜியிடம் பரிசயம் கொண்டார். அவர் சென்னையில் அக்கவுண்டன்ட் ஜெனரலின் உதவியாளராக இருந்தார். இப்போது ஸ்வாமிஜியைத் தமிழ்நாட்டில் கண்டு அவரைத் தம்மோடு சென்னை மாநகரத்துக்கு அழைத்து வந்தார் மன்மதநாதர்.

ஸ்வாமிஜியின் சரிதத்தை எழுதியுள்ள சீடர்கள் சென்னையை ''சம்பிரதாயமான வித்யையும், பண்பாடும் நிறைந்த கேந்திர ஸ்தானம்'' என்று வர்ணிக்கிறார்கள். மேலும் அவர்கள் சென்னைக்குக் கொடுக்கும் நற்சான்றிதழ்களைப் படித்துப் பூரிப்போம்:

''சென்னையில்தான் ஏராளமான இளைஞர்கள் ஸ்வாமிஜியிடம் பக்தி பூண்டு சிஷ்யராயினர். சென்னைதான் அவர் அமெரிக்கா போவதற்கு முதன் முதலில் நிதியம் சேகரித்துக்கொடுத்தது. சென்னையில்தான் ஸ்வாமிஜியின் குருநாதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசம் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சென்னையில்தான் ஸ்வாமிஜி ஸ்தாபன ரீதியில் செயல்படத் தொடங்கினார். அங்குதான் அவரால் நூல் பிரகரமும் முதன் முதலில் தொடங்கப்பட்டது. ஸ்வாமிஜி மேல்நாடுகளிலிருந்து திரும்பு முன்னரே அவரது பணியை விரிவாகப் பரப்பியவர்களும் சென்னைவாசிகளே.''

தமிழர்களாகிய நமக்கு ஸ்வாமிஜியிடம் விசேஷ உரிமை உண்டு. அவரது பேர் அருமைகளைப் பார் அறியுமாறு செய்ததில் வங்காளத்துக்குக் கிடைக்காத பங்கு நம் தமிழகத்துக்கே கிடைத்தது.

பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு

என்று தேச மகாகவி பாடவில்லையா?

ஸ்வாமிஜி சென்னை நகரத்தில் வந்திறங்கியதிலிருந்தே பொது வாழ்வில் அவருடைய பிரவேசம் தொடங்கி விட்டது. எத்தனையோ இன்னலும் துன்பமும் சூழ்ந்த ஆண்டிப் பரதேசியாக அவர் வாழ்ந்த பரிவிராஜக காலம் இதோடு முடிவடைந்ததாகவே கருதலாம். ஆத்ம உணர்வும், பக்தியும், கல்வியும், கலாரஸனையும் மிகுந்த சென்னைவாசிகள் ஸ்வாமிஜியின் அநுபவக் கருக்கொண்ட கருத்துக்களையும், அவருடைய நுணுக்கரிய நுண்ணுணர்வுகளையும், அவற்றை அவர் வெளிப்படுத்தும் வளமான ஆங்கில மொழியின் அழகையும், அவரது சங்கீதக் குரலையும் கண்டு அவரிடம் வசமாகி விட்டார்கள். நாளுக்கு நாள் பட்டாசாரியரின் வீட்டில் கூட்டம் பெருகி வந்தது.

சென்னையிலிருந்தபோது ஸ்வாமிஜியின் சநாதன பக்தி மிக உயர்வாக இருந்ததாகத் தெரிகிறது. ஒரு நாள் ஒருவர், ''பொழுது கிடைக்கவில்லை என்பதால் ஸந்தியாவந்தனத்தைவிட்டு விடுவது தவறாகுமா?'' என்று கேட்டார்.

உடனே பொங்கி யெழுந்தார் ஸ்வாமிஜி. ''என்னது! என்ன சொன்னீர்! பொழுதா கிடைக்கவில்லை, பொழுது? பூர்வத்தில் மனித மலைகளாக வாழ்ந்த நம்முடைய ரிஷிகள், நம்மைப் போல மந்த நடை போடாமல் காலை எட்டிப் போட்டு நடந்த நமது ரிஷிகள், யாரை ஒரு க்ஷணம் எண்ணினாலும் நீர் புழு அளவுக்குச் சுருங்க வேண்டுமோ அப்படிப்பட்ட ரிஷிகள் ஸந்தியாவந்தனம் செய்ய அவகாசம் பெற்றிருந்தார்கள்! கேவலம் உமக்குப் பொழுதில்லாமல் போய் விட்டது... அப்படித்தானே?''

அந்த உறுமலைக் கேட்டு வெட்கினார் வினாப் போட்டவர்.

அன்றைக்கே, மேல்நாட்டு மோகம் மிகுந்த ஒருவர் வேதாகம ரிஷிகளின் ''அர்த்தமில்லாத உபதேசங்கள்'' பற்றி ஏதோ பேசலானார். இடியென வெகுண்டெழுந்த



ஸ்வாமிஜி, "உன்னுடைய பூஜைக்குரிய முந்தையரை இப்படிப் பேச உனக்கு எத்துணைத் துணிச்சல்? அரைகுறைப் படிப்பு உன் மூளையைக் கலக்கியிருக்கிறது. ரிஷிகள் கூறியிருப்பதன் விஞ்ஞான உண்மையை நீ பரிசோதித்துப் பார்த்ததுண்டா? பரிசோதிப்பது கிடக்கட்டும். நீ வேதங்களைப் படிக்கவாவது செய்திருக்கிறாயா? படித்தால் அதில் ரிஷிகள் விடும் அறைகூவல் தெரியும். தைரியமிருந்தால் அதை எதிர்க்கப் போ" என்றார்.

இன்று நம்முடைய சாஸ்திரங்களை இன்னவென்றே படித்துத் தெரிந்து கொள்ளாமல் பிதற்றும் கூட்டத்துக்கெல்லாம் சேர்த்து அன்றே ஸ்வாமிஜி சவுக்கடி கொடுத்திருக்கிறார்.

ஓயாமல் ஒழியாமல் காண வருபவர்களுடன் பேசிக் களைத்துப் போன ஸ்வாமிஜி பிரதி தினமும் மாலை வேளைகளில் வனப்புக்குக் கரை கட்டும் சென்னைக் கடற்கரையில் உலவுவார். லவண சமுத்திரத்துக்குப் பக்கத்தில் லாவண்ய சமுத்திரமாக உலவுவார். ஸ்வாமிஜியின் கவி உள்ளத்தைச் சென்னைக் கடற்கரை வெகுவாகக் கவர்ந்தது. ஸ்வாமிஜியுடன் ஒரு சில சீடர்களும் உலவச் செல்வார்கள்.

ஒருநாள் ஸ்வாமிஜி கடற்கரையில் உலவும்போது உடன் வந்த வி. சுப்பிரமணிய அய்யர் என்ற இளைஞரிடம் "நல்லது பையா, உனக்கு மல்யுத்தம் தெரியுமா?" என்று கேட்டார். "தெரியும்" என்றார் ஐயர். உடனே ஸ்வாமிஜி வேடிக்கையாக, "சரி, நாம் ஒரு போட்டி நடத்துவோம்" என்றார். மற்பயிற்சியில் ஸ்வாமிஜிக்கு இருந்த திறனைக் கண்டு அதிசயித்த அய்யர் அவரைப் 'பயில்வான் ஸ்வாமி' என்றே அழைக்கலானார்.

மற்றொரு நாள் கரையர் குலக் குழந்தைகள் தாய்மார்களுடன் இடுப்பளவு நீரில் நின்று மீன் பிடிப்பதைக் கண்டார் ஸ்வாமிஜி. அவரது கண்கள் கரைந்தன. "பிரபோ, இப்படிப்பட்ட அபாக்கியசாலிகளை எதற்காகப் படைக்கிறாய்? அவர்களைக் காணவே என்னால் தாள முடியவில்லையே! இன்னும் எத்துணைக் காலம், பிரபோ எத்துணைக் காலம்?" என்று அரற்றினார் அந்த அருளாளர்.

ஸ்வாமிஜிக்கு மரியாதை செலுத்த ஒரு கூட்டம் நடைபெற்றது. அப்போது ஸ்வாமிஜி தாம் ஓர் அத்வைதி எனக் கலக்கமறப் பிரகடனப்படுத்திக்கொண்டார். சிலர் அதை ஆட்சேபித்தார்கள். "ஆண்டவனும் நீங்களும் ஒன்றே என்கிறீர்கள். அப்படியானால் உங்களுக்கு ஒரு பொறுப்புமில்லாமல் போகிறது. நீங்கள் தவறான மார்க்கத்தில் சென்றால் உங்களைத் தடுப்பது யார்?" என்று அவர்கள் கேட்டார்கள். உடனே ஸ்வாமிஜி நெருப்புப் பொறி போலச் சொற்களை உதிர்த்தார்: "நானும் ஆண்டவனும் ஒன்று என்று உண்மையாக எண்ணுபவன் தவறான மார்க்கத்தில் செல்லவே முடியாது; அவனையுமறியாமலே அவன் பாபத்தை வெறுத்து ஒதுக்குவான். அவனுக்குத் தடை தேவையே இல்லை" என்றார்.

திருவல்லிக்கேணி இலக்கிய சங்கத்தில் (Literary Society) ஸ்வாமிஜி நிகழ்த்திய சம்பாஷணைகள் பிரசங்கங்களாகவே இருந்தன. இந்தச் சங்கத்தைச் சேர்ந்த இளைஞர்களில் பலர் சமூக சீர்திருத்தவாதிகளாவர். அவர்கள் பிராசீனமான மரபுகளை ஓயாமல் கண்டித்துப் பிரசாரம் செய்வதை ஸ்வாமிஜி விரும்பவில்லை. அதை அவர்களிடமே கூறினார். அந்நியக் கொள்கைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தே அநுசரிக்க வேண்டும் என்றும் சமய விரோதமான அம்சங்களை 'இரவல்' வாங்கி நம் பண்பாட்டைக் குலைக்கலாகாது என்றும் அறிவுறுத்தினார். நவபாரதத்தின் அஸ்திவாரம் புராதன பாரதம்தான் என்று கூறினார். 'நான் சமூக சீர்திருத்தங்களை எதிர்ப்பவன் அல்ல. ஆனால் சீர்திருத்தங்கள் வெளியிலிருந்து புகுத்தும் விஷயமல்ல; மக்களின் உள்ளத்தில் பிறக்க வேண்டியதே. அது அழிவுச் சக்தியாக இல்லாமல் ஆக்க சக்தியாக இருக்க வேண்டும்' என்றார்.

கிறிஸ்துவக் கல்லூரியில் விஞ்ஞான உதவிப் பேராசிரியராக இருந்த சிங்காரவேலு முதலியார் என்பவர் ஒரு நாஸ்திகர். நாஸ்திகராயினும் கிறிஸ்துவ மதத்தில் நடைமுறைக்கு உகந்த அம்சங்கள் இருப்பதாகக் கூறி, ஹிந்து மதத்தைப் பழிப்பார் அவர். ஸ்வாமிஜியுடன் வாதிப்பதற்காக வந்தார் சிங்காரவேலு முதலியார். ஆனால் 'வேட்டையாடப் போனவன் வேட்டையாடப்பட்டான்' என்பது போல ஸ்வாமிஜியை மாற்றப் போனவர் தாமே மாறிப் போனார். ஒரே ஒரு நாள் உரையாடலின் மூலம் கடவுள் கொள்கைக்குச் சிங்காரவேலு முதலியாரை ஸ்வாமிஜி திருப்பிவிட்டார். அவருக்குக் 'கிடி' என்று பேரிட்டு அன்பு செய்தார் ஸ்வாமிஜி. "வந்தேன்—கண்டேன் — வென்றேன் என்று ஸீஸர் சொல்வானாம். ஆனால் கிடியோ வந்தார்—கண்டார் — வெல்லப்பட்டார்" என்று ஸ்வாமிஜி சிரித்துக் கொண்டே கூறுவார்.

ஸ்வாமிஜி மேல்நாடு போக வேண்டியது எவ்வளவு அவசியமான பணி என்பதைச் சென்னைப் பெருமக்கள் உணர்ந்து கொண்டு ஸ்வாமிஜியை ஊக்கினர். வாயளவில் வெறுமனே நின்று விடாமல், உடனேயே ஸ்வாமிஜியின் பயணச் செலவுகளுக்காக நன்கொடைகள் திரட்டலாயினர். சுமார் ஐந்நூறு ரூபாய் சேர்ந்ததும் அதனை ஸ்வாமிஜியிடம் அளித்தனர். பொன்னையும் பொருளையும் உதறிவிட்டு வந்திருந்த ஸ்வாமிஜிக்கு அந்தப் பணத்தைக் கண்டதும் நரம்புகள் தளர்ந்தன. பரமஹம்ஸ ராமகிருஷ்ணருக்குப் பணத்தைக் கண்டால் ஏற்படும் கூச்சம் போலவே ஸ்வாமிஜிக்கும் ஏற்பட்டது.

பணத்தைத் தொடத்தான் வேண்டுமா? தாம் உலகப் பணி புரிய வேண்டுமென்பது அம்பிகையின் திருவுள்ளமானால் தமது சந்நியாச தர்மத்தையும் மீறிப் பணத்தைத் தீண்டத் தயார்தான். ஆனால் அம்பிகை அவ்வாறு அவரிடம் தெளிவாக ஆணையிடவில்லையே!

"குழந்தைகாள், அந்நிய தேசம் செல்வதென்பது இருளில் எடுத்து வைக்கும் ஓர் அடியாகும். இவ்வாறு நான் போயாக வேண்டும் என்பதை அம்பிகை நிச்சயப்படுத்த

வேண்டும்: அவருடைய விருப்பம் அதுவாயின் தானே பணமும் அப்போது கிடைக்கும். இந்தப் பணத்தை ஏழை எளியவர்களுக்குத் தானம் செய்துவிடுங்கள்'' என்றார் பக்தியின் மேருவாகவும், அன்பின் இமயமாகவும் இருந்த ஸ்வாமிஜி.

இதன்பின் ஸ்வாமிஜி தியானக் கடலில் குள்ளக் குளிரக் குடைந்து நீராடினார். ''அம்மாவை என்னுடன் பேச வைத்தே தீர வேண்டும்'' என்ற குழந்தைப் பிடிவாதம் ஒன்றே அவரிடம் அப்போது இருந்தது. அம்மா அதற்கு மேல் பிடிவாதமாக இருந்தாள். நினைந்துருகும் அடியாரையன்றி, வேறு யாரைத்தான் நைய வைப்பது?

ஹைதராபாத் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்வாமிஜி அந்நகருக்குச் சென்றார். அமோக வரவேற்புப் பெற்றார்.

நிஜாமின் மைத்துனரான குர்ஷித் ஜா ஸ்வாமிஜியைச் சந்தித்தார். நீண்ட நேரம் சம்பாஷித்தனர். உருப் படைத்த கடவுளை ஜாவினால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஸ்வாமிஜி உருவம் என்பது கண் — காது — மூக்கில் இல்லை என்றும் எந்தச் சின்னத்தின் மூலம் பரம்பொருளை நினைத்தாலும், அது உருவகமே என்றும், **இவ்வாறு எந்த ஓர் உருவகத்தாலும் கடவுளை வணங்காத மதமே கிடையாது** என்றும் நயம்பட நிரூபித்துக் காட்டினார். ஹிந்து மதத்தின் உச்சித் தத்துவமாக விளங்கும் அத்வைதம் குணம் குறி கடந்த கடவுளைக் கூறி அதுவாகவே நாமும் ஆவதற்கு வழி செய்வது பற்றிக் கூறி, வேதாந்தத்தின் சிறப்பினை மேற்கத்திய நாடுகளுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற தமது அபிலாஷையைத் தெரிவித்தார்.

''ஸ்வாமிஜி, இதோ தங்கள் பயணத்துக்கு எனது காணிக்கையாக ஓர் ஆயிரம் ரூபாய்'' என்று முன் வந்தார் குர்ஷித் ஜா.

''இப்போது வேண்டாம் ஸாஹேப்'' என்று கூறி விட்டார் ஸ்வாமிஜி.

ஹைதராபாத் மஹபூப் கல்லூரியில் ஸ்வாமிஜி முதன் முறையாக மேடைப் பிரசங்கம் புரிந்தார். அது சிறப்பாக அமைந்தபடியால் அவர் ஹைதராபாத்திலிருந்து சென்னைக்குத் திரும்பியபோது தன்னம்பிக்கை முன்னிலும் கூடியிருப்பதாகத் தோன்றியது. அற்புதமாக உபதேசிக்கத் தொடங்கினார்.

ஏழாண்டுகளுக்குமுன் மறைந்த ஸ்ரீ ராமகிருஷ்ணரை அவரது சிஷ்யரான விவேகானந்தர் மூலம் மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கினர். தக்ஷிணேசுவரத்துக் கிழவர் தாம் உலகுக்கு வந்து மௌனமாக விளைவித்துச் சென்ற மகிமைகளை விவேகானந்தர் என்ற மொழியில், மெல்ல மெல்ல மேதினிக்கு விளக்கி வைக்கலானார்.

குடத்து விளக்கைக் குன்றேற்றிய பெருமையில் தமிழகத்தின் பங்கு கொஞ்ச நஞ்சமல்ல.

1893ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஸ்வாமிஜியின் சிஷ்யர்கள் அவரது அமெரிக்க யாத்திரைக்காக நிதி திரட்டுவதில் தீவிரமாக முனைந்தனர். பள்ளி ஆசிரியரான அழகிய சிங்கப் பெருமாள் — 'அளசிங்கா' என்று ஸ்வாமிஜியால் உள்ளன்போடு அழைக்கப்பட்டவர் — இதில் காட்டிய சிரத்தை வார்த்தைகளில் வடிக்க முடியாததாகும்; பல இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு அவர் வீடு வீடாகச் சென்று யாசகம் செய்தார். கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய் சேர்ந்து விட்டது; ஸ்வாமிஜி மீண்டும் கலங்கினார்; சதா பிரார்த்

அட்டைப்பட விளக்கம்

## ஒவ்வொன்றும் ஒரு விதம்!

''நான் ஒன்றும் இப்போது கலியாணம் செய்துகொள்ளப்போவதில்லை'' என்றோ ''எனக்குக் கல்யாணமே வேண்டாம்'' என்றோ அவள் பெற்றோரிடம் போலியாக வாதாடவில்லை. கல்லூரிப் படிப்பின் கடைசிப் பரீட்சைக்குத் தன்னைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போதே பெற்றோர் அவளுக்கு வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். பரீட்சையும் முடிந்தது. கல்யாணப் பத்திரிகையும் தயாராகி வந்துவிட்டது. அதைப் பார்த்தபோது அவள் உள்ளம் எப்படித் துள்ளியது!

'உனக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் அனுப்பம்மா' என்று சொல்லி ஒரு கட்டுக் கலியாணப் பத்திரிகையை அவளிடம் கொடுத்து விட்டுப் போய்விட்டார் தந்தை. அது அத்தனை சுலபமல்ல என்பது அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. தன் தோழிகளின் பெயர்களையெல்லாம் நினைவுக்குக் கொண்டுவந்தாள். சிறு வயதில் தன்னோடு விளையாடியவர்கள், இன்று தாயாகிக் குடும்பம் நடத்துபவர்கள், கலியாணமே செய்துகொள்ளாமல் உத்தியோகம் பார்க்கும் குமாரிகள், இப்படிப் பலப் பல. தோழர்களுமிருந்தார்கள், அவளுக்கு. இவர்களுடன் ஏற்பட்ட அனுபவங்கள் மறக்க முடியாதவை. ஒவ்வொரு பத்திரிகைக்கும் விலாசமெழுதும்போது விதம் விதமான நினைவுகள்! அந்த இன்ப நினைவுகளில் மிதந்தபடி உட்கார்ந்திருக்கும் அழகையே ஓவியர் கல்பனா இவ்வாற அட்டையாக அழகுற வடித்துக் கொடுத்திருக்கிறார்.

தனை புரிந்தார்: நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தேய்ந்தன.

ஓர் இரவு ஸ்வாமிஜி அரைத் தூக்கமும் அரை விழிப்புமான நிலையில் படுத்துக் கொண்டிருந்தார்.

திடீரென்று அவர் கண் முன் வெண் மணற் பரப்பு விரிந்தது. அந்த மணற்பரப்பில்..... ஆஹா! குருமஹராஜ்! அம்பிகையான ஆசாரியர்தான் நடந்து கொண்டிருக்கிறார்! அது வெறும் மணல்வெளியல்ல. கடற்கரை. இதோ குருமஹராஜ் கரையிலிருந்து கடலுக்குள் பிரவேசிக்கிறார். திரும்பி விவேகாநந்தரைப் பார்க்கிறார். தம்மைத் தொடருமாறு சைகை காட்டுகிறார். கடலில் சரசரவென்று சென்று கொண்டே யிருக்கிறார்!

விவேகாநந்தரின் நெஞ்சில் ஆனந்தம் குமுகுமு என்று பாய்ந்து நிரம்பியது. ஸ்வப்னவஸ்தை என்று சொல்ல முடியாத அநுபவ நிலையிலிருந்து நன்றாக விழிப்புற்றார். 'போ' என்ற வார்த்தை - குருநாதனின் மதுரநாத உத்தரவு - அவர் செவிகளில் ரீங்காரமிட்டது.

'பிரத்யக்ஷமாகத் தமக்கு உத்தரவு கிடைத்து விட்டது! இனியும் தயங்குவதற்கில்லை!'

ஸ்வாமிஜி அமெரிக்கப் பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்யத் தொடங்கி விட்டார்.

பரிவிராஜக வாழ்வு தொடங்குமுன் தூய அன்னை சாரதையிடம் உத்தரவு பெற்றுக் கொண்டது போல் இப்போதும் அவளுக்குக் கடிதம் எழுதினார் ஸ்வாமிஜி.

கடிதத்தைக் கண்ட சாரதையின் கண் மலர்கள் அன்பு மகரந்தத்தைச் சிதறின. சாரதையின் தாய்மை, அவளுடைய அன்பு நரேனது அயல்நாட்டுப் பயணத்துக்குச் சம்மதம் அளிக்கவில்லை. தாயான பாவம் மாறி குருமஹராஜின் சிஷ்யையாகிப் பார்த்த போது இதெல்லாம் அவருடைய சங்கல்பமே என்று அவளுக்குத் தெரிந்தது. நரேன் எந்தக் கனியைத் தர வேண்டுமென்பதற்காக அவர் பார்த்துப் பார்த்து ஆதியில் அவனைப் பயிராக்கி, நீர் வார்த்து, களை பிடுங்கி, உரமிட்டு வளர்த்தாரோ அந்தக் கனியைத் தரும் தருவாக அவன் உயர்ந்து விட்டான் என்று புரிந்து கொண்டாள்.

ஸ்வாமிஜி வெளிநாடு செல்வதற்குத் தனது அநுமதியையும் ஆசியையும் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினாள் தூய அன்னை. அதனைப் படித்தபோது ஸ்வாமிஜியின் பரந்த மார்பு விம்மி விம்மித் தணிந்தது.

அமெரிக்கப் புறப்பாட்டுக்குச் சகல விதமான ஏற்பாடுகளும் ஆகிவிட்டன. மே மாதம் 31ந் தேதி ஸ்வாமிஜி கப்பலேற வேண்டுமென நிச்சயமாயிற்று.

இந்தச் சமயத்தில்தான் அவரைக் கேத்ரி சம்ஸ்தானத்துக்கு இட்டுச் செல்வதற்காக மஹாராஜாவின் அந்தரங்கக் காரியதரிசியாகிய ஜகன்மோகன் லால் முன்ஷி சென்னையில் வந்து குதித்தார்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு கேத்ரி மஹாராஜா ஸ்வாமிஜியை வணங்கித் தமக்குப் புத்திர சந்தானம் வாய்க்க வேண்டுமெனப் பிரார்த்தித்ததும், ஸ்வாமிஜி ஆசி கூறியதும் நினைவிருக்கிறதல்லவா?

இப்போது கேத்ரிமஹாராஜரின் குறை தீர்ந்து விட்டது. ஸ்வாமிஜியின் ஆசியினால்தான் தமக்குப் பிள்ளை வரம் கிட்டிற்று என்று மஹாராஜா நம்பினார். யுவராஜாவின் ஜனன உற்சவத்தைக் கேத்ரி கோலாகலமாகக்கொண்டாடும் போது ஸ்வாமிஜி நிச்சயம் உடன் இருக்க வேணும் என்று மஹாராஜா விரும்பினார். காரியதரிசியைச் சென்னைக்கு அனுப்பி வைத்திருந்தார்.

ஸ்வாமிஜி தமிழ்த் திருநாட்டை விட்டுப் புறப்பட்டுக் கேத்ரியைச் சென்றடைந்தார்: அங்கு ஸ்வாமிஜிக்குக் கோலாகலமான வரவேற்பளிக்கப்பட்டது. பல சம்ஸ்தானாதிபதிகள் ஞானவேந்தனைத் தொழுதார்கள்.

குட்டி ராஜா கொண்டு வரப்பட்டார். ஸ்வாமிஜி அகமகிழ்ந்து அநுக்கிரகம் செய்து குழந்தைக்குப் பெயர் சூட்டினார்.

குட்டி ராஜாவுக்கு மட்டுமல்ல; விவேகாநந்தருக்குமே நாமகரணமானது கேத்ரி மன்னரின் ராஜ சபையில்தான். விவிதிசாநந்தர், சச்சிதாநந்தர் முதலிய பல பேர்களில் சஞ்சரித்து வந்த ஸ்வாமிஜி கேத்ரியில்தான் மன்னரின் வேண்டுகோளுக்கிணங்கி விவேகாநந்தர் என்ற திருநாமத்தைத் தரித்துக் கொண்டார்.

அத்வைத சாதனையின் முதல்படி ஆத்மா—அநாத்ம விவேகம். எது ஆத்ம அநுபவத்துக்கு உகந்தது, எது உகாதது என்று பகுக்கும் திறனே அது. சநாதன சமயம் கண்ட வேதம், உபநிஷதம், புராணம் இவற்றோடு பிறமதக் கொள்கைகள், அரசியல், சமூக இயல், பொருளாதாரம் இவை எல்லாவற்றையும் விகிதாசாரப்படுத்திப் பகுத்தும் தொகுத்தும் உலக மதத்தைத் தரப்போகும் விவேகாநந்தருக்கு அந்தப் பெயர் எவ்வளவு சிறப்பாகப் பொருந்தி விட்டது?

அமெரிக்கப் பிரயாணத்துக்கு முன்னேற்பாடுகள் செய்ய மஹாராஜா, ஜக்மோஹன் லால் இருவருமே ஸ்வாமிஜியுடன் பம்பாய்க்குப் புறப்பட்டனர்.

ஜயப்பூரில் அவர்கள் தங்கியிருந்த போது ஒரு நாள் மாலை மஹாராஜாவுக்காக நாட்டியப் பெண் ஒருத்தியின் இசை ஏற்பாடாகியிருந்தது. நாட்டியப் பெண் ஒருத்தியின் கலை நிகழ்ச்சியில் சந்நியாசியான தாம் பங்கு கொள்வதற்கில்லை என்று ஸ்வாமிஜி சொல்லி அனுப்பி விட்டார்.

இது பாடகியின் உள்ளத்தைப் புண்ணாக்கி விட்டது. புண்ணுண்ட புறா கதறுவதுபோல் தீனமாக அவள் கானம் செய்தாள் :

**பாவத்தைப் பார்த்தென்னைத் தள்ளாதே**
**பரமா – சம**
**பாவம் என்பதே உந்தன் நாமமன்றோ பரமா?**
**காளிந்தி நதியின் கரிய திருநீரும்**
**கழிகாலில் வழிகின்ற இழிநீரும் ஒருபோல்**
**இன்னரு கங்கையில் இழைகின்றபோது**
**ஏற்றம் பெறுவதை நீ ஏற்றுக்கொள் ஐயா!**
**பாவத்தைப் பார்த்தென்னைத் தள்ளாதே**
**பரமா?—சம**
**பாவம் என்பதே உந்தன் நாமமன்றோ பரமா?**

கீதம் காற்றினிலே தவ்விக் கொண்டே சென்று ஸ்வாமிஜியின் காதுகளில் பிரவேசித்

**நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!**



# புதுமை பெறுக...
# இதம் பெறுக...
# நளினமாய் இருங்கள்
# நாள் முழுதும்!

இளமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு இதத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

# சார்மிஸ்

**உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்**

தது. செவி வழியே அவரது உள்ளத்தில் பாய்ந்தது. அவருடைய இதயம் கழன்றது. மாக படிந்தவன் என்று 'உலகமெல்லாம் கருதிய ஒரு பெண் அவருக்கு உயர்ந்ததொரு புத்திமதியைப் புகட்டி விட்டாள். மாகமும் தேகமும் ஆண்டவன் முன் ஏது? மாயைக்கு உட்பட்ட உலக மக்களுக்குத்தான் பேதங்களுண்டு. மாயைதனைக் கடந்து பிரம்மபூதனாக இருக்க வேண்டிய சந்நியாசிக்கு சமபாவமல்லவா இருக்க வேண்டும்?'

கானம் நடைபெற்றுக் கொண்டிருந்தஇடத்துக்கு விவேகாநந்தர் ஏகினார். ஒளிகாந்தும் கண்களில் நீர் தேங்கியதால் அவை மேலும் பளபளக்கப் பாடகியை வாத்ஸல்யத்துடன் நோக்கினார். அன்னை வத்ஸனைப் பார்க்கும் வாத்ஸல்யமல்ல அது. அன்னையை வத்ஸன் பார்க்கும் வாத்ஸல்யமே அது.

"தாயே, நான் குற்றவாளி. உன் சங்கீதம்தான் என்னைத் திருத்தியது" என்றார்.

கேத்ரி மன்னரிடமிருந்து பிரியாவிடை பெற்று பம்பாய்க்குப் புறப்பட்டார் ஸ்வாமி விவேகாநந்தர்.

ஆபு சாலை ரயில் நிலையத்தில் பிரம்மாநந்த ஸ்வாமியும், துரியாநந்தரும் விவேகாநந்தரைக் கண்டனர்.

"ஹரிபாயிக்களே! நாடு முழுவதும் இத்தனை நாளாகத் திரிந்ததில் என் இதயம் விசாலமாகி விட்டது. உணருவதற்குக் கற்று விட்டேன் குருபாயிக்களே, உணருவதற்குக் கற்று விட்டேன். என்னை நம்புங்கள், உண்மையாகவே நான் தீவிரமாக உணர அறிந்து விட்டேன்" என்று திக்கினார்.

மக்களுக்காக அவர் இதயம் எவ்வளவு கசிந்ததோ, அவ்வளவு கசிவை வார்த்தைகளில் வெளியிட முடியவில்லை. நீண்டபோது பேச மாட்டாமல் மௌனத்தில் ஆழ்ந்திருந்தார் ஸ்வாமிஜி. தாரை தாரையாக அவரது தாமரஸ நயனங்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. மன்பதையின் துன்ப வதை அவ்வளவையும் ஸ்வாமிஜி தமது ஒவ்வொரு நரம்பிலும் ஏற்றுத் துடிப்பதாகவே தோன்றியது.

விவேகாநந்த ஸ்வாமி பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். அழகியசிங்கப் பெருமாள் சென்னையிலிருந்து எழுநூறு மைல்கள் கடந்து பம்பாய்க்கு வந்திருந்தார் — ஸ்வாமிஜியைக் கப்பலேற்றுவதற்காக. அவரது அயல்நாட்டுப் பயணத்துக்கு சுதேச சம்ஸ்தான அதிபதிகள் மனமுவந்து பண வசதி செய்திருந்தார்கள். தமிழ்ப் பெருமக்கள் சேகரித்திருந்த நிதியமும் ஸ்வாமிஜியிடம் ஒப்பிக்கப் பட்டது.

ஜகன்மோஹன்லால் தமது மன்னரின் கட்டளைப்படி ஸ்வாமிஜிக்கு 'பெனின்ஸுலர்' (தீபகற்பம்) — என்ற ஓரியண்ட் கம்பெனிக் கப்பலில் முதல் வகுப்பு டிக்கெட் எடுத்தார். உலகாயத போகத்தின் உச்சாணியிலிருந்த அமெரிக்கர் ஸ்வாமிஜியை மதிக்க வேண்டுமானால் அவர் விலை உயர்ந்த ஆடைகள் உடுத்த வேண்டும் என்று பக்தர்கள் விரும்பினர். ஸ்வாமிஜி சிறிய விஷயங்களில் பிடிவாதமாக இருந்து பெரிய விஷயங்களைக் கோட்டை விடுபவர் அல்லவே! எனவே அவர் பக்தர்கள் கோரிக்கைக்கு இணங்கினார். பணத்தைத் தீண்டவே கூசிய ஸ்வாமிஜி இந்தத் தீராத நிலையில் பணப்பையை வாங்கிக் கொண்டார்.

1893-ம் ஆண்டு, மே மாதம், 31ந் தேதி. பம்பாய்த் துறைமுகத்தில் 'பெனின்ஸுலர்' நீராவிக் கப்பல் புறப்பட ஆயத்தமாக நின்று கொண்டிருந்தது. கப்பல் கருவிகளின் ஓசையும், ரத்னாகரமாகிய அரபுக் கடலின் ஓசையும், துறைமுகத்தில் கூடியிருந்தோரின் பேச்சொலியுமாக ஒன்றில் ஒன்று கரைந்து கொண்டிருந்தது. உடைமையேதும் இல்லாதிருந்த ஸ்வாமிஜி இன்று பெட்டி படுக்கை இத்தியாதிகளுடன் ஆரஞ்சு வர்ணத்தில் பட்டு ஜிப்பாவும், தலைப்பாகையும் அணிந்து அக்கினி சிகை போலவே நின்று கொண்டிருந்தார். அவர் பக்கலில் ரத்னாகரத்தைக் காணும்போது அறிவுக்கனலையும் அருட்புனலையும் ஒருங்கே சேர்த்துக் காண்பது போலிருந்தது.

கப்பல் படிக்கட்டுகளை ஒரு லக்ஷம் உணர்ச்சிகளுடன் அடைந்தார் விவேகாநந்த ஸ்வாமி. ஜகன்மோஹன் லாலும், அழகியசிங்கரும் அது வரை அவரைப் பின்தொடர்ந்தனர். அவர் பாதங்களில் விழுந்து அவற்றை அவர்கள் கண்ணீரால் கழுவிய அதே சமயத்தில் ஸ்வாமிஜியின் நேத்திரங்களிலிருந்து அவர்கள் சிரங்களில் மந்திராக்ஷதைகளாக முத்துக்கள் உதிர்ந்தன.

கப்பலின் பெரிய மணிகள் 'கணகண'வென்று ஒலித்தன.

இதோ, அந்தப் பெரும் கலம் கடல் அலைகளைச் "சள சள" என்று கலக்கிக் கொண்டு நீந்தத் தொடங்கி விட்டது.

இந்திய நாடெங்கும் சுற்றிய ஸ்வாமிஜி அந்த நாட்டின் மக்களுக்காகக் கண்காணாத தேசம் செல்கிறார்! அம்பிகையின் அருளையும், ஆசானின் ஆசியையும், ஆத்ம நம்பிக்கை



வீட்டுக்காரர்: இது மாதிரி விருந்தாளிகளை அழைத்து வந்தால், சட்டியில் ஒன்றுமில்லை என்று காண்பிக்கத்தான் என் தலையில் சட்டியைப் போட்டு உடைத்தாள். வேறொன்றுமில்லை. வித்தியாசமா நினைக்காதீர்கள்!

விருந்தாளி: பசி அதிகமா இருக்கு. வேறு ஒன்றிரண்டு சட்டிகளையும் 'டிரை' பண்ணச் சொல்லுங்களேன்!

யையும் கொண்டு சர்வமத மகா சபையில் கலந்து கொள்ளச் செல்கிறார்!

கப்பலின் மேல் தளத்தில் ஸ்வாமிஜி வந்து நின்றார். கடலின் நீலத்தையும், வானின் நீலத்தையும் அழுத்தமாகக் காட்டும் நீவண்ணத் திரு உடையில் 'ராஜ கம்பீர நாடாளு நாயகனாக' நின்று கொண்டிருந்தார். தம்மை வழியனுப்ப வந்தவர்களுக்கு இரு கைகளையும் தூக்கி ஆசீர்வதித்தபடி நின்றார் முப்பது வயதிலேயே மூத்த அந்த முனிவர்.

அவருக்கும் கரைக்கும் உள்ள தொலைவு சிறிது சிறிதாகப் பெருகிக் கொண்டேவந்தது. அவருடைய கண்கள் உருகின; பெருகின.

பவதாரிணியை நினைந்தார்; பரமஹம்ஸரை நினைந்தார்; தூய சாரதையை நினைந்தார்; தாம் கடல் கடந்து செல்வதைக்கூட இன்று அறியாத அருமை குருபாயிக்களை நினைந்தார்; தமக்கு உபகாரம் புரிந்த மன்னர்களையும், அறிஞர்களையும், சாமானிய மக்களையும் நினைந்தார். கடைசியாகத் தாம் உபகாரம் புரிய வேண்டிய பாரதத்தின் பாமர மக்கள் அனைவரையும் எண்ணி விசித்தார். அவர் பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருந்த பாரதத்தின் அத்தனை ஏழைகளும், அறியாதாரும் ஜல சமுத்திரத்துக்கும் மீதாக ஒரு ஜனசமுத்திரமாகி அவர் எதிரே வந்து நின்றார்கள். 'எங்களைக் காப்பாற்றுங்கள். ஏழைமையும், அறியாமையும், மேல் வருப்பினரின் கொடுங்கோன்மையும் எங்களைப் படுத்தும் பாட்டிலிருந்து எங்களை விடுவியுங்கள்' என்று அலறினர்.

மறுபுறம் திரும்பிப் பார்த்தார் ஸ்வாமிஜி. 'தியாக பூமியிலிருந்து போக பூமிக்குச் செல்கிறேன்; முனிவர்களும், ரிஷிகளும், யோகிகளும், சித்தர்களும், பக்தர்களும், முக்தர்களும் வாழ்ந்த திருநாட்டிலிருந்து தொழில் பிரமுகர்களும்; விஞ்ஞான வல்லுநர்களும், அரசியல் நிபுணர்களும், பொருளாதார அறிஞர்களும் வாழும் நாட்டுக்குச் செல்கிறேன். யுக யுகாந்தரமாக நாகரிகமறிந்த தெய்வத் திருநாட்டிலிருந்து பச்சைக் குழந்தையான ஐரோப்பிய நாகரிகம் பரவிய புது நாட்டுக்குச் செல்கிறேன். பாரதத்தின் பண்பை அதற்குத் தருவேன். பாரதத்துக்கு அதன் பொருளுதவியைப் பெற்று வருவேன். பாரதத்தின் நிரந்தரச் செல்வத்தை அதற்குத் தந்து, சென்று மறையும் செல்வத்தை அதனிடமிருந்து பாரதத்துக்குப் பெற்று வருவேன். இது எளிதில் நடக்கும் காரியமல்ல. இனி மேல் என் வாழ்நாள் முழுவதும் உழைப்பு, கடினமான உழைப்பு, அரை நொடியும் அயராத அசுர உழைப்புத்தான். இந்த உடம்பு மடிந்து விழும் வரையில், எலும்புகள் தெறும் வரையில், நரம்புகள் வெடிக்கும் வரையில் உழைப்பேன். பாரதத்தில் ஏழையரை வாழ்விக்கும் சமய—சமூக ஸ்தாபனங்களை நிறுவி அவற்றில் தளராது உழைப்பேன்.

'இவ்வளவு உழைப்பும் என் ஆற்றலால் நான் புரிய மாட்டேன். எனக்கு அவ்வளவு ஆற்றல் இருப்பதாக நான் எண்ணினால் அந்த **அகம்பாவமே என்னை விழுங்கி விடாதா? ஸர்வேச்வரியின் குழந்தையாக, குருமஹா**ராஜின் மாணாக்கனாக இருந்தே என் பணியைப் புரிவேன்.'

விவேகாநந்த மஹராஜின் உள்ளம் குழைந்தது. 'ஸர்வேச்வரி, ஸ்ரீ குருநாதா' என்று வாய் விட்டே அரற்றினார்.

அவர்களை நம்பித்தானே ஸ்வாமிஜி கப்பலின் கூட்டத்திலும் தன்னந்தனியாக அயல் நாடு செல்கிறார்!

தன்னந்தனியாகத்தானா?

நீலத் திரைக் கடலில் சென்று கொண்டிருக்கும் அவருக்கு யாரும் துணை போகத்தான் இல்லையா?

ஏன், அந்தக் கடலில் கலக்கும் கங்கையும் யமுனையும் சிந்துவும் தபதியும் மஹாநதியும் கோதாவரியும் காவிரியும் பாயும் பாரதத்தின் இனிய ஆத்மா அவருக்குத் துணை செல்லவில்லையா, என்ன?

கௌரி சிருங்கமும், காஞ்சன சிருங்கமும், தவளகிரியும், விந்தியமும், மேற்கிலும் கிழக்கிலும் அணி எடுத்து நிற்கும் மலைத் தொடர்களும் அழகு செய்யும் பாரதத்தின் கம்பீர ஆத்மா அவருக்குத் துணை சென்றதே!

இன்னமும், பாரதத்தின் வேதாந்த சத்தியம் வேறு அவருடன் துணை சென்றது.

அதன் புராண கவித்துவம் அவருக்குத் துணையாகச் சென்றது.

எல்லோராவிலும், அஜந்தாவிலும், தில்வாராவிலும், தஞ்சை புரியிலும் எழும்பி நிற்கும் ஆத்மிகக் கலை அவருடன் சென்றது.

துளஸீதாஸரும், மீராபாயும், சண்டிதாஸும், துகாராமும், ஆண்டாளும், மணிவாசகரும், தியாகையரும் இழைத்த சங்கீதம் அவருடன் துணை சென்றது.

சங்கரரும் ராமாநுஜரும் மத்வரும் புத்தரும் நானக்கும், மகாவீரரும், சைதன்யரும், திருமூலரும்ஒலித்த தத்துவம் அவருடன்சென்றது.

எல்லாத் தத்துவங்களுக்கும் உருவகமாக வாழ்ந்த ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் அவருடன் சென்றார்.

பரமஹம்ஸர் போற்றிய பல தெய்வ ரூபங்களின் தயை அவருடன் சென்றது.

அந்தத் தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமாகிய தேவி பராசக்தி அவருக்குத் துணை சென்றாள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, குபுகுபு என்று மண் புகை போலக் கிளம்பி அந்தப் புகைத் துகள் நகத்தில் புகுந்து கொள்ள, அதனை வெளியேற்றக் கூட அவகாசமின்றிப் பூமியைக் கிளறிக் கொண்டே ஏர்க்காலைப் பின்தொடரும் பாரதத்தின் கோடாநு கோடி ஏழைப் பிள்ளைகளின் இதயங்கள் —

கடும் வெயிலில் நெற்றி நிறைய வேர்வை வழிய, அதைத் துடைத்துக் கொள்ளக்கூடப் பொழுதில்லாமல் தலையிலுள்ள புல்லுக் கட்டை ஒரு கையாலும் இடையில் உள்ள குழந்தையை ஒரு கையாலும் அணைத்துக் கொண்டு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடிக் கொண்டிருக்கும் கோடாநு கோடி ஏழைப் பெண்களின் இதயங்கள் —

**அவைகளும் ஸ்வாமி விவேகாநந்தருடன் துணை சென்றன. (தொடரும்)**

# எல்.ஐ.சி
# அதிக போனசு அறிவிக்கிறது

முழு ஆயுள் அஷ்யூரன்சுகள்

**ரூ. 17–50**

ஆயிரத்திற்கு ஆண்டிற்கு

என்டௌமென்ட் அஷ்யூரன்சுகள்

**ரூ. 14—00**

ஆயிரத்திற்கு ஆண்டிற்கு

# 4வது
# மதிப்பீட்டின் முடிவுகள்.

கீழே குறிப்பிட்டுள்ள போனசு விகிதங்களை வெளியிடுவதில் அகமகிழ்வு கொள்கிறது ஆயுள் இன்சூரன்சுக் கார்ப்பொரேஷன். இந்தப் போனசு விகிதங்கள், 31, மார்ச் 1963 அன்றுவரை கார்ப்பொரேஷனின் இருப்புகள், பொறுப்புகள் மீது செய்யப்பட்ட நான்காவது மதிப்பீட்டின் விளைவாகக் கிடைத்தவை. கார்ப்பொரேஷனால் வழங்கப்பட்டு, மதிப்பீட்டுத் தேதியில் நடைமுறையிலிருந்த இலாபத்துடன் கூடிய பாலிசிகளின் முழுக் காப்புத் தொகைக்கு (FULL SUM ASSURED) இந்தப் போனசு விகிதங்கள் பொருந்தும்.

மதிப்பீட்டுத் தேதியில் நடைமுறையிலிருந்த 94,93,033 பாலிசிகளின் மீது இருந்த மொத்தக் காப்புத் தொகை போனசுகள் உள்பட ரூ. 3,166 கோடி ஆகும். மேலும் 10,303 ஆயுள் ஆன்யுட்டிகளின் கீழ் செலுத்தவேண்டிய மொத்தத் தொகை ஆண்டுக்கு ரூ. 1,05 13,117-ம் இருந்தது. பங்கீட்டிற்காகக் கிடைத்த மொத்த இலாபமான ரூ. 26.71 கோடியுள், அரசாங்கத்தின் பங்கிற்காக ரூ. 1.32 கோடி வகை செய்தது போக, பாலிசிதாரர்களுக்குப் போனசுகள் வழங்க ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 25.39 கோடியாகும்.

பழைய இன்சூரன்சுக் கம்பெனிகள் வழங்கிய இலாபத்துடன் கூடிய பாலிசிகளுக்கு, லைப் இன்சூரன்சுக் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா (தாரதரப் போனசுகளுக்காக வகைப்படுத்தப்பட்டுள்ள பாலிசிகள்) சட்டதிட்டங்கள் 1961-ன்படி போனசு விகிதங்கள் எங்கெங்கு உயர்த்தப்படவேண்டுமோ அங்கங்கு உயர்த்தப்பட்டுள்ளன

மதிப்பீட்டுத் தேதியில் இலாபத்தில் பங்குபெற உரிமையுள்ள எல்லாப் பாலிசிகளும் கீழ்காணும் விதத்தில் போனசுபெறத் தகுதியுடையனவாகும்.

- இரண்டாண்டுப் போனசு–1-1-1963 க்கு முன்பு எந்த ஆண்டிலாவது ஜனவரியிலிருந்து மார்ச் முடியவுள்ள மாதங்களில் பாலிசி எடுத்திருந்தால்
- ஓராண்டுப் போனசு–1-1-1963 க்கும் 31-3-1963 க்கும் இடையில் அல்லது 1-1-1963 க்கு முன்பு எந்த ஆண்டிலாவது ஏப்பிரலிலிருந்து டிசம்பர் முடியவுள்ள மாதங்களில் பாலிசி எடுத்திருந்தால்.

நான்காவது மதிப்பீட்டின் அறிவிப்புகள் பாலிசிதாரர்களுக்குக் கூடிய விரைவில் அனுப்பப்படும்.


லைப் இன்ஷ்யூரன்ஸ்
கார்ப்பொரேஷன்
ஆப் இந்தியா

ASP/LIC/SP-44A

# ரவீந்திரர் குழந்தை இலக்கியம்

தில்லி சாகித்திய அகாடமியின் தமிழ்ப் பிரசுரமாக, ''ரவீந்திரர் குழந்தை இலக்கியம்'' என்ற அழகிய நூல் நமது பெரியசாமிதூரன் அவர்களின் பல பணிகளில் ஒன்றாக வெளியாகி யிருக்கிறது. இதைத் தமிழ் மக்கள் வரவேற்பார்கள்—ஐயமில்லை. தூரன் அவர்களின் தமிழ்ப் புலமையும் சீலமும் பயபக்தியும் யாவரும் அறிந்த குணங்கள். கவி ரவீந்திர நாதரின் படைப்புக்களிலிருந்து குழந்தைகளுக்கென்று திரட்டியது இரண்டு வங்காள அறிஞர்கள். அந்தத் தொகுப்பைத் தூரன் அவர்களும், த. நா. ஸேனாபதி அவர்களும் தமிழாக்கித் தந்துள்ளனர்.

பரிகாசமும் பிரம ஞானமும் கலந்த ரவீந்திரர் எழுதியதொரு பாட்டு இந்தத் தொகுப்பில் சேர்ந்திருக்கிறது. அதை இந்தக் குழந்தை இலக்கியத் திரட்டில் சேர்த்திருக்கலாகாது. எவருக்கு எந்த உபதேசம் தரும், எந்த உபதேசத்துக்கு எவர் தகுந்த பாத்திரம் என்று வகுப்பது தேசிகர்களுடைய அதிகாரம். குழந்தைகளுக்கென்று எழுதுவதும் எழுதிய நூல்களிலிருந்து குழந்தைகளுக்கென்று எடுத்துத் தொகுப்பதும் எளிய வேலையல்ல. அரிய சாமர்த்தியமும் ஞானமும் வேண்டும்.


பெ. தூரன்

இந்த நூலில் சேர்த்துள்ள ஒரு பாட்டைப் பாருங்கள்:

**வழிபாடு**

அன்றோர் திருநாள் அணிதேர்த் திருநாள்
என்றும் காணாக் கூட்டமும் இரைச்சலும்.
இறைவனை வழிபட என்றே பக்தர்கள்
தரையினில் விழுந்து தாழ்ந்து
வணங்கினர்.
தேர்வரும் வீதியோ, 'தெய்வம் நானே;
சீரெலாம் எனக்'கெனச் செருக்கே
கொண்டது.
செப்பிய தேரும், 'தெய்வம் நானே:
தப்பிலை' என்றே தருக்குடன் நின்றது.
தேரினில் இருந்த திருவுரு வதுவும்
மார்பினை நிமிர்த்தி, 'மயக்கமேன் யானே
தெய்வம்' என்றது. இசையெலாம்
நிறைந்த
மெய்ம்மைப் பரம்பொருள் வெறுமனே
சிரித்ததே.'

இந்தப் பாட்டில் மூர்த்தி பூஜை பயனற்றது, அது கூடாது என்கிற பிரம்ம சமாஜத்தாரின் கொள்கை, பரிகாசத்தின் மூலம் வலியுறுத்தப்படுகிறது. பெரியோர், அதிலும் ஓரளவு நல்ல பக்தியும் அறிவும் அடைந்தவர்களுக்கு இந்தப் பாட்டின் பொருளும் பரிகாசமும் பயன் தரலாம். ஆனால் குழந்தைகளுக்கு இந்தப் பாட்டு ஒரு பயனும் தராது என்பது மட்டுமல்ல, நம்முடைய ஹிந்துக் குழந்தைகளின் ஆஸ்திகப் பண்பாட்டை அழிக்கும். இசை யெல்லாம் நிறைந்து நிற்கும் மெய்ம்மைப் பரம்பொருள் தரையிலும் தேர் வரும் வீதியிலும் இருக்கிறது. பக்தியோடு அலங்கரிக்கப்பட்ட தேரிலும் இருக்கிறது; தேரினில் தரிசனம் தரும் மூர்த்தியிலும் இருக்கிறது. இதுதான் ஞானத்தின் உயர் நிலையில் அடையும் அறிவு. இந்தப் பூதப் பொருளும் திருவுருவமும் வழிபாட்டுக்கு உரிய பொருள்களல்ல; கடவுள் எங்கேயோ மறைந்து நிற்கிறார்; இவையெல்லாம் அந்தப் பரம் பொருளினின்று வேறுபட்டு நிற்பவை என்று பரிகாசம் பேசுவது அஞ்ஞானம். ரவீந்திரர் பிரம்ம சமாஜ உயர் குடும்பத்தில் தோன்றியவர். அவர் இந்தப் பாட்டைக் குழந்தைகளுக்கு என்று எழுதவில்லை. அதைத் தமிழாக்கி நம்முடைய அருமைக் குழந்தைகளைப் படிக்கச் செய்து தேர்த் திருவிழாவைப் பரிகசிக்கப் பயிலச் செய்வது நற்பணியாகாது. அவரவர்கள் கொள்கையை அவரவர்கள் எடுத்துச் சொல்லும் உரிமையை நான் தடுக்கவில்லை. ஆனால் குழந்தைகளின் விஷயம் வேறு. நான் எடுத்துக் காட்டிய குற்றத்தை உணராமல்தான் அஜாக்கிரதையாக இந்தப் பாட்டு இந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன்.

நம்முடைய ஹிந்து பரம்பரையில் சங்கர, ராமாநுஜ, மத்வ, சைதன்ய ஆசாரியர்களுக்குப் பின் ராமகிருஷ்ண முனிவரைவிட ஞானம் பெற்றவர்கள்

யார்? யாருமில்லை. அந்த ராமகிருஷ்ண முனிவரே தக்ஷிணேசுவரக் கோயிலில் வீற்றிருக்கும் அம்மன் திருவுருவில் தெய்வத்தைக் கண்டு அவளுடைய பூஜையிலேயே மரணம் வரையில் ஈடுபட்டிருந்தது உலகப் பிரசித்தம்.

துவாபர யுகத்தில் அருச்சுனனுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை — பொங்கிய கருணையாலும் அடைந்த அறிவினாலும் மனம் கலங்கித் தோன்றிய சந்தேகங்களை — கண்ணன் தீர்த்தான். அந்த உபதேசத்தில் வழிபாட்டு முறைகள், யோக முறைகள் எல்லாவற்றையும் விளக்கி ஒன்றுபடுத்தினான் கண்ணன். அதை வியாசர் பகவத்கீதையில் சாசுவத நூலாகத் தந்தார். கருணையின் எழுச்சியாலும் அடைந்த அறிவாலுமே இந்தக் காலத்திலும் அதே விதமான ஐயங்கள் தோன்றிய காலத்தில் அவதரித்தார் ராமகிருஷ்ணர். கண்ணன் அருச்சுனனுக்குத் தந்த உபதேசமே— ராமகிருஷ்ண முனிவர் தம் வாக்காலும் வாழ்க்கையின் மூலமும் பாரத நாட்டுக்குத் தந்த உபதேசம். முறைகளையெல்லாம் ஒன்றாக்கி அடக்கமும் பக்தியும் உண்டாக்கினார்.

அத்வைதமே சத்தியம் என்ற ஸ்ரீ சங்கரர் கன்னியாகுமரி முதல் வடக்கே காசி வரையில் கோயிலில் தரிசனம் காட்டும் மூர்த்திகளை வணங்கிப் பாடிப் பூஜை செய்தவர். பரம ஞானிகளான ராமானுஜரும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவ்வாறே ஆலயங்களில் கோயிலிருக்கும் தெய்வமூர்த்திகளை வணங்கி வழிபாடு செய்து வந்தார்கள். புரந்தர தாஸரும் தியாகப் பிரம்மமும் கிருஷ்ணனையும் ராமசந்திரனையும் மூர்த்திகளில் கண்டு பாடி நம்முடைய பக்தியையும் சமயத்தையும் காப்பாற்றி வந்தார்கள். இதையெல்லாம் கண்டு பரம்பொருள் சிரித்ததாக வைத்துக் குழந்தைகளுக்கு உபதேசிக்கலாமா? அவ்விதம் அவர்களும் பாடக் கற்பிக்கவா?

"மெய்ம்மைப் பரம்பொருள் சிரிப்பு
சிரித்ததாகப்
பாடும் கவியைக் கண்டு நாமும் சிரிப்பதா
வாடுவதா
ஆடும் நடராஜா பரமேசா நீதான் சொல்."

என்று மாற்றி நாமும் பாடி முடிக்கத் தோன்றுகிறது. தாம் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவராயினும் ராமகிருஷ்ண பரமஹம்ஸரை மிகப் புகழ்ந்து வேறு பாட்டில் பாடியிருக்கிறார் ரவீந்திரர். இந்தத் தமிழ்த் தொகுதியில் புகுத்தியிருக்கும் இந்தப் பரிகாசப் பாட்டு ஒருவேளை ஞானிகளுக்குத் தகும்; அவர்கள் ஞானச் சிரிப்பு சிரிக்கலாம். குழந்தைகளுக்குச் சொல்லவே ஆகாது. அதிலும் ஸ்வாமி விவேகாநந்தரையும் அவருடைய பரமகுரு ராமகிருஷ்ண முனிவரையும் விசேஷமாகக் கொண்டாடி வணங்கும் இந்த ஆண்டில் இந்தப் பாட்டைக் குழந்தைகளுக்குத் தருவது அசம்பாவிதம்.

நூல் முழுதும் நான் இன்னும் படிக்கவில்லை. தற்செயலாக இப் பாட்டைப் படித்தேன். இந்த அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டும் என்று துணிந்தேன்.

விற்பனை உரிமை: கலைமகள் காரியாலயம் சென்னை-4 விலை ரூ. 5-50.

## ஆங்கிலத்தில் ராமாயணம்

வால்மீகி ராமாயணத்தின் அழகிய ஆங்கிலச் சுருக்கமே இந்நூல். நூறு கடிதங்களின் வடிவில் பெருமானின் புண்ணிய சரிதம் எழிலுறக் கூறப்படுகிறது. முனிகுமாரர்களும், கந்தர்வர்களும், ராஜஸ்தானிகர்களும், வேறு பலரும் தமக்குள் எழுதிக்கொள்ளும் கடிதங்களில் ராமாயண சம்பவங்களை விவரிப்பதாக அமைத்திருப்பது நல்ல உத்திதான். எனினும் இந்த உத்தி இன்னும் சிறப்புறக் கையாளப்பட்டிருக்கலாம். கடிதம் எழுதுபவர்களுக்கெனப் பிரத்தியேகமான செய்தி எதுவுமில்லாமல், ராமாயண நிகழ்ச்சிகளைக் கூறுவதற்காக மட்டுமே அவர்கள் எழுதுவதைக் காவிய ரீதியில் பார்த்தால் ரசமாகப்படவில்லை.

இன்னொரு விஷயம். சுவாமியை மோட்டார் காரில் வீதி வலம் எடுத்து வருவது போலிருக்கிறது பிரம்மாவுக்கு தேவர்கள் ஆங்கிலேய பாணியில் கடிதம் எழுதியிருப்பது. ஸாவீரன் என்ற திரேதாயுகத்து ஸ்தானிகன் (Man Proposes But God Disposes) என்ற ஆங்கிலப் பழமொழியைக் கையாள்வது 'அநாக்ரனிஸ'க் குற்றமாகும்.


தேடித் துருவிப் பார்த்தால் புத்தகத்தில் இப்படிச் சில குறைபாடுகள் காணப்பட்டாலும் மொத்தத்தில் ஏராளமான அழகிய ஓவியங்களுடன் கூடிய இப்புத்தகம் சிறுவர்களுக்கு உகந்த ஒரு நல்ல பரிசு.

The Ramayana in Hundred Letters. ஆசிரியர்கள்: எஸ். வி. கிருஷ்ணஸ்வாமி, டி. திருவேங்கடாச்சாரியார்; வெளியீடு: தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை — 17; விலை: ரூ. 7.75.

—ரா. க.

## ஸ்ரீ மீனாட்சி சுப்ரபாதம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமி அவர்களின் ஸ்ரீமுகத்துடன் கூடிய இந்நூல் ஸ்ரீ மீனாட்சி ஆலய கும்பாபிஷேக சமயத்தில் வெளியிடப்பட்டது. இந்நூலில் ஸ்ரீ மீனாட்சியின் மகிமை, திக் விஜயம், கலியாணம் முதலியவைகள் நன்றாக விளக்கப்பட்டுள்ளன. இதை இயற்றியவர் ஸ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகள் என்ற பெரியவர். ஸ்தோத்திரங்கள் தமிழிலும், நாகரத்திலும் உள்ளன. தமிழர்த்தத்துடன் கூடியது. கிடைக்குமிடம்: ஜி. வைத்தியநாதன், 103, மௌபரேஸ் ரோடு, சென்னை-18 விலை 80 பைசா.




நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்

# டாடா-ஃபின்லே

## தேயிலை

ஈடில்லாத தேயிலை!

## புத்தம் புது தேயிலை

•

## சுவையுள்ள தேயிலை

•

## சிறந்த தேயிலை

**டாடா-ஃபின்லே** தேயிலை பருகுவீர்;
உன்னதத் தேயிலை இன்பம் எய்துவீர்!



பின்வரும் ஐந்து
ரகங்களில்
கிடைக்கிறது:
ப்ரெஸ்டிஜ் டார்ஜி
லிங்-டின்களில்.
லலித்-பொன்னிற
அட்டைப்பெட்டியில்
மிலாப்-வெள்ளி நிற
அட்டைப்பெட்டியில்
பஹாதுர்-ஆரஞ்சு நிற
அட்டைப்பெட்டியில்
ஷான்-நீல நிற
அட்டைப்பெட்டியில்



BI-TFN-5-TAM



தருமகுணசீலரும் நல்ல தெய்வபக்தரும் தஞ்சை ஜில்லா, சீர்காழியில் பெரிய மிராசுதாரருமான கடைக்கண்விநாயக நல்லூர் கே. மருதநாயகம் பிள்ளை அவர்கள் 25-2-64 அன்று சென்னையில் தமது இல்லத்தில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார். சமூக அபிவிருத்தியில் கருத்துள்ள பிள்ளையவர்கள் பல பொதுநிறுவனங்களுக்கு நிதி வழங்கியிருக்கிருர். திடமான தேசபக்தியின் காரணமாக நாட்டு விடுதலைப் போருக்குப் பல விதத்திலும் உதவி வந்திருக்கிருர். அவரது ஆன்மா சாந்தி அடைவதாக!



**கோமதி சுப்பிரமணியம்**

கல்யாணியின் வீட்டு வாசல் முன் ரிக்ஷா வந்து நின்றது. கல்யாணியும் அவளது தாயாரும் கீழே இறங்கினார்கள். வாசற்புறத்தில் தன் நண்பர்களோடு பந்து விளையாடிக் கொண்டிருந்த ரங்கன், கடை வீதிக்குச் சென்ற அம்மாவும் அக்காவும் வந்திறங்குவதைக் கண்டதும் விளையாடுவதை நிறுத்தி விட்டு ரிக்ஷாவை நோக்கி ஓடி வந்தான். வந்தவன் ஜவுளி மூட்டையை வீட்டுக்குள் தூக்கி வந்து பரபரப்புடன் பிரிக்கத் தொடங்கி விட்டான்.

வெயிலில் களைத்து வந்த அலுப்புத் தீர மின்சார விசிறியைச் சுழல விட்டு, அதன் நேராகச் சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டுச் சாய்ந்து விட்டாள் கல்யாணி.

ரிக்ஷாக்காரனுக்கு உரிய கூலியைத் தந்து விட்டு வீட்டுக்குள் திரும்பிய பார்வதி, மகன் துணி மூட்டைகளைப் பிரித்து, அவனுடைய உடையைத் தேடும் பரபரப்பில் மற்றவர் உடைகளைச் சிதறவிட்டுக் கொண்டிருப்பதையும் கல்யாணி அதைக் கவனிக்காமலே ஈஸிசேரில் சாய்ந்திருப்பதையும் கண்டு ஆத்திரப்பட்டாள்.

''ஏண்டி கல்யாணி... அவன் அத்தனை துணிகளையும் பிரித்து உதறிக் கொண்டிருக்கிறானே, அதட்டக் கூடாது? பார்த்துக் கொண்டிருக்கிறாயே...'' என்று ஒரே சொல்லில் இரு குழந்தைகளையும் அதட்டியதை, அதட்டலுக்குள்ளான இரு குழந்தைகளுமே லட்சியம் செய்ததாகத் தோன்றவில்லை.

''அம்மா.... ரங்கனைச் சற்றுக் கடைக்கு அனுப்பேன். எனக்கு இந்த வெய்யிலில் சுற்றி வந்தது மயக்கம் வந்துவிடும்போல் இருக்கிறது... நிறைய ஐஸ் கலந்து கிரஷ் வாங்கி வரச் சொல்லு அம்மா...'' என்று கொஞ்சிக் குழைந்தாள் கல்யாணி.

ஒரு குடும்பத்தை நிர்வகிக்க வேண்டியவள், 'வயது'ப் பெண் கல்யாணி, சற்றுக் கடை வீதிக்குப் போய் வந்த களைப்படங்கக் கலரும் கிரஷும் கேட்கிறாளே... அவ்வளவுதான் அவளது மன பலமும் உடல் பலமும்... இதனால் இதே நிலையில் 'அவள்' மட்டும் இருந்தால்... அவள்....?

'சீ...' என வேண்டாத பொருளை உதறி எறிவதைப் போன்று தன் மனத்திலே வட்டமிடும் 'அவளது' நினைவுகளை உதறியெறிய முயன்றாள். அந்த 'அவள்' வேறு யாருமில்லை. இதே பார்வதி அம்மாளின் மணிவயிற்றுதித்த மற்றொரு மகளான சாவித்திரிதான்.

கல்யாணியை விட இரண்டொரு வயது சிறியவள் சாவித்திரி. ஆனால் பார்வைக்கும் சரி...வீட்டு வேலை நிர்வாகத் திறமை எல்லாவற்றிலும் சரி, கல்யாணிக்கு மூத்தவள்போல் பம்பரமாய்ச் சுழலுவாளே...

படிப்பிலும் சரி, பாட்டிலும் சரி, நாலுந் தெரிந்தவள். உலகத்து நாகரிகத்தோடு ஒட்டிப் பழகத் தெரிந்தவள். எல்லாவற்றிலுமே சுட்டிதான். அப்படிச் சுட்டியாக இருந்ததனால்தான் இப்படி.... சீ... குடும்பத்துக்கே கொள்ளி வைக்கும் அவளைப் போல் யாருமே இருக்க வேண்டாம். கல்யாணியைப் போல் குடும்பமே உலகமாக, குடும்ப வாழ்க்கையே சொர்க்கமாகப் பாவிக்கும் மனமே போதும். பெண், பெண்ணாகத்தான் வாழ வேண்டுமே தவிர, படிப்பு உத்தியோகம் என்று சலுகையைப் பெற்றுக் கொண்டு பெண்மையை உதறி எறிய முனையும் துணிச்சல் கொள்கை என் கல்யாணியை நெருங்கவே வேண்டாம்....

''கல்யாணி... நீ என்ன கேட்டே....'கூல் டிரிங்கா'... எலே ரங்கா ஓடிப் போய்...''

''முடியாதும்மா... என்னோட எப்ப பார்த்தாலும் சண்டை பிடிக்கிற இவளுக்காக

நான் போக முடியாது...'' என்று சண்டித்தனம் பிடித்த மகனைச் சமாதானம் செய்து அனுப்பி வைத்தாள்.

''என்ன இருந்தாலும் இவ சாவித்திரி அக்கா ஆக முடியாதம்மா...'' மனத்திலே பொருமலைக் கொட்டிவிட்ட ரங்கன் எதையோ நினைத்துக் கொண்டவனைப்போல, ''அம்மா! சாவித்திரி அக்கா கடிதாக போட்டிருக்கா, டைப் மிஷின் மேலே இருக்கு... எடுத்துப் படித்துப் பார்த்துக்கோ....'' என்று கூறி விட்டுக் கடைக்கு ஓடி விட்டான்.

'சாவித்திரி' என்ற பெயரைக் கேட்டதும் துள்ளித் துடித்தாள் கல்யாணி.

''அந்தப் பீடை எதுக்கம்மா கடிதாக போட்டிருக்கு... கையாலே கூடத் தொடாதேம்மா....தொட்டாலே பாவம். வஞ்சனைக் காரி...'' கைகளை நெறித்தாள்.

பெற்ற மனம் இரு பக்கமும் அலைபட்டது.

எத்தனைதான் தவறு செய்துவிட்ட போதும் எத்தனைதான் பெற்ற மனத்தில் கோபம் குமுறிக்கொண்டிருந்தாலும் கூட 'அம்மா' என்று அழைப்புக் குரல் விடுத்திருக்கும் தன் மகளின் எழுத்திலே அவளைக் காணத் தாய்மை துடித்தது.

'என்னதான் எழுதியிருப்பாளோ பார்க்கலாமே' என்ற அற்ப சபலம்.

''தொடக் கூடாது... தொட்டால் என்னைக் கொன்ற பாவம் உனக்கு'' என்று ஆணை வைத்தாள் கல்யாணி.

மகன் பிரித்துக் கலைத்திருந்த புதுத் துணிகளை வரிசைப்படி அடுக்கிக் கொண்டிருந்தாள் பார்வதி. அவள் மனம்...அவளது மணி வயிற்றில் பிறந்து, மதலைமொழி பேசித் தளர் நடை பயின்று, துள்ளி விளையாடிப் படித்துப் பட்டம் பெற்று உத்தியோகம் பார்க்கப் புறப்பட்டுப் போன சாவித்திரியின் நினைவால் அலை மோதியது. ஒரு பெண்ணை உத்தியோகம் பார்க்க அனுப்பியாகி விட்டது. மற்றொரு பெண்ணுன கல்யாணிக்கு வரன் தேடினர் தந்தை.

உடலைப் போலவே மனமும் கோழையாகிப் படிப்பைக் கூட முழு மனத்தோடு ஊன்றிப் படிக்கும் துணிவில்லாது பாதியில் நிறுத்திக் கொண்டாள் கல்யாணி. படிப்புத்தான் இல்லையே, வீட்டுக் காரியத்திலாவது தாய்க்கு வலது கையாக முன் நிற்கும் தெம்பாவது உண்டா? கிடையவே கிடையாது. எதிலும் ஊன்றி நிலைக்க முடியாது. நிறைவுபடுத்த முடியாத கோழை மனம் படைத்தவளை வீட்டோடு வைத்திருந்து என்ன பயன் என்று தந்தை எங்கெங்கோ அலைந்து திரிந்து ஒரு வரனையும் நிச்சயித்து விட்டார்.

அவர் பார்த்து வந்த வரன் பெரிய இடத்துப் பிள்ளை. கல்லூரிப் படிப்பு. கட்டழகு எல்லாம் நிறைந்தவன் என்று சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போனுர்.

பிள்ளை வீட்டிலிருந்தும் முறைப்படி பெண்ணைப் பார்த்துச் சென்றவர்கள் ஊருக்குப் போய்க் கடிதம் எழுதுகிறேன் என்று சொன்ன சொல்லைச் சம்பிரதாயச் சொல்லாக மாற்றி விடாமல் மெய்யாகவே கடிதம் எழுதினர்.

'பெண்ணைப் பிடித்து விட்டது. முகூர்த்தத் தேதி நிச்சயித்துவிடலாம்' என்று கடிதம் வந்தது. பின்னர் இரு குடும்பத்தாரும் கலந்து பேசி நாளையும் குறித்துவிட்டார்கள்.

**நா**ட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

கல்யாணத்துக்கு இன்னும் ஒரு வாரம் இருந்தது. வீடு கலியாணக் களை கட்டிக் கலகலத்துக் கொண்டிருந்த அந்த வேளையிலே தான் வெடிகுண்டைத் தூக்கிப் போட்டாற் போன்ற செய்தியைத் தாங்கி வந்தது மண மகன் எழுதிய கடிதம்.

படித்த நாகரிகம் தெரிந்த பெண் ஒருத்தி உள்ளூரிலேயே கிடைத்துவிட்டதால் அதிகப் படிப்பில்லாத கல்யாணியை அவன் விரும்பவில்லையென்றும் வற்புறுத்தியோ வழக்குத் தொடர்ந்தோ திருமணத்தை நடத்த முயன்றால் திருமணத்துக்குப் பிறகு திருமணப் பெண்ணின் வாழ்வு சீர்குலைவதைத் தான் காண முடியும் என்றும் அழுத்தம் திருத்தமாக எழுதி விட்டான்.

பெண்ணைப் பெற்றவர்கள் கொதியாய்க் கொதித்தார்கள். அவர்கள் நினைத்திருந்தால் அதே பிள்ளைக்கே திருமணத்தை நடத்திவிட முடிந்திருக்கும். ஆனால் அதற்குப் பின் அவளது வாழ்வு.... அவன்தான் குறிப்பிட்டுக் கோடி காட்டி விட்டானே!

திருமணம் நின்றுவிட்டது என்ற சொல்லைக் கேட்ட அந்த நிமிஷமே அதிர்ச்சியுற்று மயக்கமடைந்த கல்யாணி மூன்று நாட்களுக்குக் கண்ணை திறக்கவில்லை.

மாப்பிள்ளைப் பையன் இருந்த அதே ஊரில் உத்தியோகம் பார்க்கும் சாவித்திரிக்கு எழுதி விசாரித்துக்கொள்ள நினைத்துக் கல்யாணம் நின்று போன விவரமும், நிற்கக் காரணமான விவரத்தையும் எழுதி 'நம் குடும்பத்தைத் தலை குனிய வைக்கும் வலிமை மிக்க அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்து வை. அவளைக் கவனித்துக் கொள்ளலாம்' என்று கடிதம் எழுதிவிட்டுத் தந்தை தினமும் சாவித்திரியின் கடிதத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்.

கடிதம் வரவேயில்லை; அதைப் பற்றி நினைப்பதற்கும் நேரமில்லை சாவித்திரியின் தந்தைக்கு.

அவர் அங்கும் இங்கும் ஓடியாடி வேறொரு வரனை நிச்சயித்துக் குறிப்பிட்ட நாளில் திருமணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டார். போட்ட கடிதத்துக்குப் பதிலே போடாதிருந்த சாவித்திரி, அக்காளின் கலியாணத்துக்கும் வரவேயில்லை.

தாலி கழுத்தில் முடியும்போது கூட நம்பிக்கை அற்ற மன நிலையிலேயே தடுமாறிக் கொண்டிருந்தாள் கல்யாணி.

'சாவித்திரி ஏன் வரவில்லை' என்று கேட்டவர்களுக்கெல்லாம் லீவு கிடைக்கவில்லை யென்று மனதாரப் பொய்யைக் கூறி வைத்தார்களே தவிர உண்மையை அறியத் துடித்த உள் மனம் ஒன்றும் புரியாது ஓலம் எழுப்பிக் கொண்டேதான் இருந்தது.

திருமணம் முடிந்த கையோடு கல்யாணியின் தந்தை சாவித்திரி உத்தியோகம் பார்க்கும் ஊருக்குப் புறப்பட்டுப் போனுர்.

போனவருக்கு அங்கே பேரதிர்ச்சி காத்திருந்தது. சாவித்திரி அந்த ஊரிலேயே

இல்லை; உத்தியோகம் பார்த்த இடங்களில் விசாரித்த போது, உத்தியோகத்தை உதறி விட்டாள் என்னும் உண்மை புலனாயிற்று.

கல்யாணிக்கு முதலில் குறித்த வரன் மனம் மாறிப் போனதற்குக் காரணமே சாவித்திரிதான் என்ற உண்மையைக் கேட்ட போது அடைந்த அதிர்ச்சியைவிட, உடன் பிறந்தவள் வாழ்வுக்கே நச்சுப் பாம்பாய் மாறி விட்டவள் என்ற உண்மையை விட, பெற்ற தாயும் தந்தையும் கல்லுப் போல் உயிரோடிருக்கையிலே யாருடைய அனுமதியுமின்றி முன்பின் அறிமுகமில்லாத அவனைத் திருமணம் செய்து கொண்டு 'தேன் நிலவு' சென்றிருக்கும் மகளை மன்னிக்கக் கூடிய நிலையிலா திரும்பி வந்திருப்பார்!

ஊருக்குள் நுழையும் பொழுதே ஊர்க் குளத்தில் பெற்ற பெண்ணின் நினைவுக்குத் தலை முழுக்குப் போட்டு விட்டு வாசற்படியில் கால் மிதித்தார்.

பெற்றோரையும் உடன் பிறந்தவளையும் மாளாத அவமானத்தில் மாய்த்து விட்டுத் தான்தோன்றியாய் ஊர் சுற்றப் புறப்பட்டுப் போனவள் திரும்பி வந்து துணிவாகக் கடிதமும் எழுதியிருக்கிறாளே.....

கடிதத்தில் என்னதான் எழுதியிருக்கும் என்பதைப் பத்து மாதம் சுமந்து பெற்ற பாச மனம் காண விழைந்தது. சாய்வு நாற்காலியில் சாய்ந்த நிலையிலே குறுந்தூக்கம் போட்டுக் கொண்டிருந்தாள் கல்யாணி.

மெதுவாக நடந்து வந்து டைப் மிஷின் மீது வைத்திருக்கும் கவரை எடுத்துக் கொண்டு அடுப்படிப் பகுதிக்குள் சரணடைந்து ஆவலுடன் கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்.

''அன்புள்ள அப்பா அம்மா இருவரது பாதங்களிலும் பணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு கடிதத்தைத் தொடங்குகிறேன்.

அப்பா.... உங்களுக்கு எனது போக்குப் புரியாதிருந்திருக்கலாம். பெண்ணுக்குக் கல்வியைக் கொடுத்து ஆண் மகனுக்குள்ள துணிவோடு உத்தியோகம் பார்க்கும் தெம்பையும் தேடித் தந்த உங்கள் முற்போக்குக் கொள்கையையே வெறுக்கின்ற நிலையிலேயே உங்கள் மனம் மாறியிருந்தாலும் இருக்கலாம் அப்பா. நீங்கள் இப்படியெல்லாம் நினைக்கும் படியாக நான் நடந்துகொண்டதென்னவோ தவறுதான். ஆனால் நடக்கத் தூண்டிய சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் புரிந்து கொண்டால் என்னை மனதார மன்னிப்பீர்கள்.

அப்பா...... அக்காவுக்காக வரன் பார்த்து முடிவு செய்தீர்களே, அவரைப் பற்றி ஒரே நாளில் உங்களால் என்ன புரிந்துகொள்ள முடிந்தது? ஒரு நாளென்ன ஒரு வாரம்.... ஒரு மாதமானாலும்கூட உங்களால் அவரைப் புரிந்து கொள்ளவே முடியாது. (மன்னிக்கவும். இப்பொழுது அவர் என் கணவர். அவரைப் பற்றிய சில உண்மைகளை எழுத வேண்டியிருக்கிறதே என்ற வருத்தத்தோடுதான் இதை எழுதுகிறேன்.) அவரை மணந்து கொண்டிருந்தால் அக்காவின் வாழ்வு நிச்சயமாக நிறைவுபெற்றதாக இருக்கவே முடியாது. அக்காவைப் பொறுத்த வரை அவளுக்குக் கணவன், குடும்பம் என்ற அன்பு வட்டத்துக்குள் அடங்கியதுதான் உலகம். அந்த அன்பான வாழ்க்கையில் சிறு சலசலப்பு நேர்ந்தாலும் தாங்கவோ சமாளிக்கவோ திறனற்ற கோழை மனத்தவள் என் அக்கா. ஆனால் என் நிலை அவ்வாறு குறுகியதல்ல. நீங்கள் கொடுத்த படிப்பும், — படிப்பால் கிடைத்த உத்தியோக வாழ்வும் — உத்தியோக வாழ்வால் நான் கண்ட பல உண்மை அநுபவங்களும், உலகம் என்பது என்ன என்பதை ஓரளவு எனக்குக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றன. அந்தத் தெம்பிலே எதையும் தாங்கும் தென்பும், எதையும் சீர்திருத்தும் திடமும் என்னிடம் உண்டு என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. அந்த நம்பிக்கையைப் பாலமாகக் கொண்டுதான் நீங்கள் அக்காவுக்காக நிச்சயித்த வரனைத் தேடி, நானே உறவு கொண்டாடி அவருக்கு உரிமையாகவும் மாறி விட்டேன். அவரைச் சீர்திருத்திச் சமூகத்தின் கண்களுக்கு நாணயமுள்ள மனிதனாக மாற்ற நான் செய்து வரும் முயற்சிகள் பலிதமளிக்கும் என்ற நம்பிக்கையோடு போராடிக் கொண்டிருக்கும் எனக்கு, ஆதரவு தாருங்கள் அப்பா..... உங்கள் எல்லோரது மன்னிப்பையும் எதிர்பார்க்கும்,

சாவித்திரி.



''இவன்தான் என் மூத்த பயல். பத்தாந்தேதி உபநயனம் பண்ணலாமென்று யோசனை. அவசியம் தாங்கள் வர வேண்டும்!''

''பூணூலுக்கு இப்ப என்ன அவனுக்கு அவசரம்? முதல்லே காது குத்திக் கல்யாணத்தைச் செய்துடுங்க!''

அன்றைய சாவித்திரி தனது அறிவுத் திறமையால் கணவனது உயிரை எமனிடமிருந்து மீட்டு வந்தாள். இன்றைய சாவித்திரியும், தனது அறிவைப் பயன்படுத்தித் தனது கணவனைத் தீமையினின்றும் திருத்தி மீட்டு வரப் பாடுபடுகிறாள்.

முந்திய சாவித்திரியைப் போலவே தனது மகளும் முயற்சியில் வெற்றி பெற வேண்டுமென்று மனமுருகி வாழ்த்தினாள் பார்வதி.

அரு.ராமநாதன்

# குண்டுமல்லிகை




அத்தியாயம் முப்பத்தேழு

## திடீர் யாத்திரை

மேஜர் ராமதுரை தம் பேரன் பிச்சுமணியோடு மேஜையின் முன் அமர்ந்து சம்பிரதாயமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். பிச்சுமணி கெட்டியான தயிர் சாதத்தை ஒரு முகத்தைப் போல் உருட்டி வைத்து அதில் காரட் துண்டுகளைக் கண்களாகவும் மூக்காகவும் பதித்து, கொத்தவரங்காய் வத்தலைக் கூந்தலாக அமைத்துக் குறும்புத்தனமாகச் சிறு பையனைப் போலவே விளையாடிக் கொண்டிருந்தான். தன் காதலை உமா புறக்கணித்து விட்டாள் என்றாலும், என்றாவது ஒரு நாள் அவள் மனம் மாறித் தன் எண்ணம்

நிறைவேறும் என்ற தன்னம்பிக்கையால் பிச்சுமணி உற்சாகமாகவே விளங்கினான்.

பேரனின் அந்த உற்சாகத்தை மேஜர் ராமதுரையால் பொறுக்க முடியவில்லை. ''டேய், பிச்சுமணி! உன்னைக் கொஞ்சம் சுதந்திரமாகத் திரிய விட்டால் நாலு விஷயங்கள் தெரிந்து புத்திசாலியாக மாறுவாய், நம் குடும்பப் பெருமையை உணர்ந்து அதை நிர்வகிக்கும் பொறுப்புள்ளவனாக உருப்படுவாய் என்று நினைத்தேன். ஆனால் அப்படி எதிர்பார்த்த நான்தான் முட்டாளாகி விட்டேன்! இனிமேல் உன்னைச் சங்கிலியால்தான் கட்டி வைக்க வேண்டும்!'' என்று அவர் உறுமினார்.

''தாத்தா! என்னைச் சங்கிலியால் கட்டி வைக்க நான் ஒன்றும் நாய்க்குட்டி இல்லை!'' என்று பிச்சுமணி சிரித்தான்.

''உன்னை அப்படிக் கட்டிப் போட்டால் என்னடா செய்வாய்?''

''சங்கிலியோடு அறுத்துக் கொண்டு ஓடி விடுவேன்! அப்புறம் திரும்பி வரவே மாட்டேன்!''

கிழவரின் முகம் குபீரென்று வெளுத்தது. தம் பேரன்தான் இப்படிப் பேசுகிறானா? இல்லை, அவனுடைய பிஞ்சு உள்ளத்தை மயக்கி இழுக்கும் மகா சாகஸக்காரியான வாத்தியாரம்மாதான் அவனுடைய நாவில் குடியிருந்து அவனை இப்படியெல்லாம் பேச வைக்கிறாள்!

மேஜரின் முறுக்குமீசைகளின் முனைகளிரண்டும் ஆத்திரத்தால் துடிதுடித்தன. இனி தம் பேரனை இந்தச் சென்னைப் பட்டணத்திலே வைத்திருக்கக் கூடாது; அந்த வாத்தியாரம்மாவிடமிருந்து இவனைப் பிரித்து எங்காவது வெளியூருக்கு அழைத்துச் சென்று சிறிது காலம் தங்க வைத்தால்தான் அவளை இவன் மறப்பான்! அவளுடைய சூழ்ச்சி ஆட்டங்களும் அடங்கும்! இந்த இடைக்காலப் பிரிவுக்குள் அந்தச் சாகஸக்காரிக்கு எப்படியாவது கலியாணம் செய்து வைக்க ஏற்பாடு செய்து விட்டால் விஷயம் வெகு சுலபமாகத் தீர்ந்து விடும்!

''டேய், பிச்சுமணி! நான் வெளியூருக்குப் போய்ச் சில காலம் தங்கியிருக்கப் போகிறேன்!''

பிச்சுமணி குழம்பினான். அந்திம காலம் வரை ராஜ தர்பார் போன்ற தம் மாளிகையைவிட்டே அசையக் கூடாதென்று விரதம் பூண்டிருந்த தன் தாத்தா திடீரென்று ஏன் வெளியூருக்குப் பிரயாணத் திட்டத்தை மேற்கொள்ளுகிறார்.....?

''எந்த ஊருக்குத் தாத்தா?''

''திருச்செந்தூர், கன்யாகுமரி முதலிய க்ஷேத்திரங்களுக்கெல்லாம் தீர்த்த யாத்திரை செய்யப் போகிறேன்!''

''ஏன் தாத்தா? நீங்கள் ஒரு காரியம் செய்தால் அதற்கு ஒரு காரணமும் நிச்சயமாக இருக்குமே!''

''நான் புண்ணியம் சம்பாதிக்கப் போகிறேன்!''

''ஓ, புண்ணியமா? நிறைய சம்பாதித்துக் கொண்டு வாருங்கள்!''


''டேய்! நீயும் என் கூடத்தான் வரப் போகிறாய்!''

பிச்சுமணி முகத்தைச் சுளித்தான்.

''நான் எதுக்குத் தாத்தா? நானும் உங்களோடு வந்தால் ஏதாவது சிறு பிள்ளைத்தனமாகச் செய்து உங்கள் அமைதியைக் கெடுத்து விடுவேன்!''

''டேய்! உன்னை விட்டு விட்டு நான் மட்டும் போனால் நீ இங்கே ரொம்பக் கெட்டுக் குட்டிச்சுவராகப் போய் விடுவாய்! ஆகவே உன் மூட்டை முடிச்சுக்களையெல்லாம் கட்டி வைத்துக்கொண்டு தயாராக இரு!''

பிச்சுமணி யோசித்தான். உமாவைப் பிரிந்து சில காலம் வெளியூர்களில் தங்கியிருப்பது உசிதம் என்றே அவனுக்குத் தோன்றியது. உமாவின் உள்ளத்தில் அவன் ஒரு புயலைக் கிளப்பி விட்டு விட்டான். அது தானாகவே ஒரு வடிவம் எடுக்கும்வரை அவள் கண்ணில் தட்டுப்படாமல் சிறிது காலம் விலகி யிருப்பது



நல்லதுதான்! இந்த இடைக்காலப் பிரிவில் உமா எப்போதாவது அவனைப் பற்றி நினைப்பாள். அந்த நினைப்பே ஏக்கமாக மாறி அதுவே ஆழ்ந்த காதலாகவும் வடிவெடுக்கலாம்! சிறு பிரிவு என்பது காதலுணர்ச்சிக்குப் பெரும் வேகமும் வலுவும் தருவதும் உண்டு!

''சரி, தாத்தா! நாளையே நாம் புறப்படலாம்!'' என்று பிச்சமணி உற்சாகமாகக் குதித்தான்.

மேஜர் தம் முகத்தைச் சுளித்தபடி அவனை ஊடுருவிப் பார்த்தார். தம் பேரனின் போக்கு இப்போதெல்லாம் அவருக்குப் புரிவதே யில்லை. வாத்தியாரம்மாவைப் பிரிந்து பிச்சமணி தம்மோடு வரவேண்டுமென்றால் அவன் எளிதில் சம்மதிக்க மாட்டான். அவனோடு போராட வேண்டியிருக்கும் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால், போராட்டத்துக்கு இடமின்றி எளிதில் அவன் சம்மதித்தது கிழவருக்குப் பெரும் வியப்பையும் குழப்பத்தையும் மூட்டியது. ஒரு வேளை அந்த வாத்தியாரம்மா அவனைப் புறக்கணித்து விட்டிருப்பாளோ? ஊஹூம், அப்படி இராது ! பெண்களின் தந்திரமெல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும்!

''டேய்! முதலில் என்னோடு வர மறுத்தாய்! இப்போது நாளையே புறப்படுவோம் என்று ஒரேயடியாகக் குதிக்கிறாய்! காரணம் என்ன?'' என்று மேஜர் குறுக்கு விசாரணை நடத்தினார்.

''அதுவா தாத்தா! அதிலே நான் ஒரு பெரிய திட்டம் போட்டிருக்கிறேன்! அது என்னவென்று கேட்காதீர்கள் !'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்ன பிச்சமணி சிரித்துக் கொண்டே, ''தாத்தா! இந்த வெளியூர்ப் பயணம் உங்களுக்கும் நல்லதுதான்! ஏனென்றால் டாக்டர் ஜகந்நாதன் கழுகு மாதிரி இங்கு அடிக்கடி வந்து வட்டமிட்டுப் பெரிய மேதாவி போல் உங்களுக்கு ஆலோசனைகள் வழங்கி வருகிறாரே, அந்தத் தொந்தரவிலிருந்தும் நீங்கள் மீளலாம்!'' என்றான்.

''டாக்டர் ஜகந்நாதனைக் கண்டால் உனக்கேன் ஆக வில்லை? உனக்கும் அவருக்குமிடையே என்ன பகைமை?''

''கீரிக்கும், பாம்புக்கும் என்ன பகைமை, நாய்க்கும் பூனைக்கும் என்ன சண்டை என்று கேட்டால் பதில் சொல்ல முடியுமா தாத்தா? அதுபோல் தான் நானும் டாக்டர் ஜகந்நாதனும் ஒருவருக்கொருவர் எதிரியாக முளைத்து விட்டோம்!'' என்று தமாஷாகவே சொன்ன பிச்சமணி, ''அதிருக்கட்டும், தாத்தா! நம் வெளியூர்ப் பயணத்துக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்த வாய் வள்ளலும் அந்த டாக்டர் ஜகந்நாதன்தானே?'' என்று கேட்டான்.

''ஆமாம்! இந்த யாத்திரை ரொம்ப நல்லதாம்!''

''யாருக்கு? உங்களுக்கா? எனக்கா? அல்லது அவருக்கா?''

''பொடிப் பயல் பொடி வைத்துப் பேசுகிறான்!'' என்று மேஜர் ராமதுரை உறுமினார்.

பிச்சமணி சிரித்துக் கொண்டே, ''தாத்தா! நம் வெளியூர் யாத்திரைகளை முடித்துக் கொண்டு எப்போது நாம் திரும்பி வருவோம்?'' என்று மெல்லக் கேட்டான்.

'' அதை எப்படியடா இப்போது சொல்ல முடியும்? சௌகரியம் போல் தான் திரும்பி வருவேன்!''

''தாத்தா! அந்த டாக்டர் ஜகந்நாதனின் சௌகரியம் போல்தான் திரும்பி வரவேண்டுமென்றால் அதுவரை நான் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டேன்!''

''என்னடா, உளறுகிறாய்?''

''தாத்தா! இப்போது அது உங்களுக்குப் புரியாது! சமயம் வரும் போது நானே எல்லாவற்றையும் தெளிவாக உங்களுக்குச் சொல்லுகிறேன்!'' என்று கூறிவிட்டுப் பிச்சமணி குடுகுடு வென்று தன் மாடியறைக்கு ஓடினான்.

கிழவர் ராமதுரை ஒன்றும் புரியாமல் திருதிருவென விழித்தார்.

பிச்சமணி தன் அறைக்கு வந்து கட்டிலில் படுத்ததும் அவனுக்குத் தூக்கம் பிடிக்க வில்லை. உமாவைப் பற்றிய சிந்தனைகளிலேயே ஆழ்ந்திருந்தான்.

உமாவிடமிருந்து தன்னைப் பிரித்துத் தன் தாத்தாவோடு வெளியூருக்குச் சில காலம் அனுப்பி வைக்க டாக்டர் ஜகந்நாதன் திட்டமிட்டிருக்கிறார் என்றால் அதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்க வேண்டும்! அது என்ன சூழ்ச்சி.....?

ஆமாம்; இந்த இடைக்காலப் பிரிவுக்குள் உமாவைத் தன்னிடமிருந்து அபகரித்துக் கொள்ளவே அந்தச் சகுனி டாக்டர் திட்டமிட்டிருக்கிறார்!

இந்த எண்ணம் ஒவ்வொரு நிமிஷமும் மேலோங்கி முள் போல் பிச்சமணியின் உள்ளத்தைக் குத்திக் குத்தித் துளைத்துக் கொண்டே யிருந்தது.

வெளியூர்ப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னும் அதற்கு ஒரு முடிவு கட்டிவிட வேண்டும்; அது எவ்வளவு பயங்கரமான முடிவாக இருந்தாலும் சரிதான் என்று பிச்சமணி தீர்மானித்துக் கொண்டான்.

### அத்தியாயம் முப்பத்தெட்டு

# பொறுமை வளரட்டும்!

அன்றிரவு.

டாக்டர் ஜகந்நாதன் தம் நர்ஸிங் ஹோமில் சுற்றுலாக் கிளம்பி விதவித மான நோயாளிகளை ஒரு முறை கவ னித்துவிட்டு அங்கு ஒரு புறமுள்ள தம் தனி ஜாகைக்கு வந்து சேர்ந்தார்.

படுக்கை அறைக்குள் அவர் நுழைந் ததும் சுவர்க் கடிகாரத்தைப் பார்த் தார். இரவு மணி ஒன்றே கால்! அந்த நேரத்தில் அவர் ஏதாவது ஒரு புத்த கத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிப்பதோ அல்லது ஏதாவது நாவல் எழுதுவதோ வழக்கம். சில சமயங் களில் நான்கு மணி ஐந்து மணி வரை கூடத் தூங்காமல் மெய்மறந்து இலக்கிய உலகில் சஞ்சரித்துக் கொண் டிருப்பதும் உண்டு. அந்தச் சமயங் களில் தூக்கத்தைப் பற்றி டாக்டர்கள் கூறக் கூடிய ஆரோக்கிய விதிகளை யெல்லாம் தள்ளியும் வைத்து விடுவார்.

அன்றிரவு அவருடைய கண்களைத் தூக்கம் ஏனோ அழுத்தியது. நித்திரா தேவியின் அணைப்பில் அக்கண்கள் சொக்கிச் சோர்ந்து கிடக்க ஏங்கின. ஆனாலும் கண்களுக்குத் தன் ஆத் மாவை அடிமையாக்கி விடக் கூடாது என்று நினைத்தவராய் டாக்டர் ஜகந் நாதன் ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு மனோதத்து வம் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிக் குறிப்பு களைக் கிறுக்கத் தொடங்கினார். அச் சிந்தனைச் சிதறல்கள் என்றாவது ஒரு நாள் ஏதாவது ஒரு நாவல் எழுதுவதற்கோ அல்லது பிறரிடம் பொன்மொழி களாக அள்ளிச் சொரிவதற்கோ உப யோகப்படும்!

வெளியே 'காலிங் பெல்' வீறிட்டு அலறியது.

டாக்டர் ஜகந்நாதன் தம் தோள் களைக் குலுக்கிக் கொண்டு மெல்ல எழுந்து நடந்தார், ஆனால் அவர் வாசற்கதவை அடைவதற்குள் 'கூப் பிடு மணி' மறுபடியும் அதி ஆவேச மாகக் கூப்பாடு போட்டது. அது போதாதென்று கதவையும் யாரோ படபடவென்று அதி பலமாகத் தட்டும் ஓசையும் கேட்டது.

ஜகந்நாதன் முகம் சுளித்தார். பட படப்பைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. நோயாளிகள் சம்பந்த மான ஏதாவது அவசரக் கேஸ் என் றால்தான் யாராவது வந்து டாக்டரின் வீட்டுக் கதவைப் படபடவென்று இடிப்பார்கள். ஆனால் என்ன அவசர நெருக்கடி என்றாலும் நிதானம்தான் அதி முக்கியம் என்பது அவரது அபிப் பிராயம். அதனால் அவர் மெது வாகவே கதவின் உட்புறத் தாழ்ப் பாளை அகற்றிக் கதவை இன்னும் மெதுவாகத் திறந்து கறாரான குர லில் ''யாரது?'' என்று கேட்டபடி தலையை வெளியே நீட்டிப் பார்த்தார்.

வெளியே பிச்சுமணிதான் தன் சட்டைக் காலரை நிமிர்த்தி விட்டுக் கொண்டு படபடப்போடு நின்றான்!

''ஓ! நீயா தம்பி? வேறு எவனோ ஓர் அவசரக் குடுக்கை என்னை எம தூதர்களோடு போராடுவதற்கு அழைத்துப் போக வந்திருக்கிறான் என்று நினைத்தேன்'' என்று டாக்டர் ஜகந்நாதன் சிரிக்க முயன்றவராகப் பிச்சுமணியின் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு, ''தம்பி; ஏதாவது ஆபத்தா?'' என்று மெல்லக் கேட்டார்.

பிச்சுமணியோ குரோதம் கொழுந்து விட்டெரியும் விழிகளால் அவரை வெறித்துப் பார்த்து விட்டு, ''நீர் கொஞ்சம் வெளியே வருகிறீரா?'' என்று அவரைப் பிடித்திழுக்காத குறையாகக் கேட்டான்.

''உங்கள் பங்களாவுக்கு வரவேண் டுமா? உன் தாத்தாவுக்கு ஏதாவது..''

''அவருக்கு ஒன்றுமில்லை!'' என்று கத்திய பிச்சுமணி ''உம்மிடம் நான் ஒரு விஷயம் பேச வேண்டும்.! நான் உள்ளே வரட்டுமா அல்லது நீர் என் னோடு வெளியே வருகிறீரா? என்னு டைய காரையும் கொண்டு வந்திருக் கிறேன்'' என்று நறுக்குத் தெறித்தாற் போல் சொன்னான்.

''என்ன விஷயம்?'' என்று டாக்டர் ஜகந்நாதன் வெகு அலட்சியமாகக் கேட்டார்.

''அந்தரங்க விஷயம்!''

''ஓ! அப்படியானால் உள்ளே வா! நாம் கன்ஸல்டிங் ரூமில் உட்கார்ந்து கதவை மூடிக் கொண்டு நிதான மாகவே பேசலாம்!''

உடனே பிச்சுமணி புயல் போல் புகுந்து கன்ஸல்டிங் ரூமில் ஒரு பேரி டிக்கு அறிகுறி போல் உட்கார்ந்தான்.

ஜகந்நாதன் தம்முடைய படுக்கை யறைக்குச் சென்று ஒரு சட்டையை மாட்டிக் கொண்டு கண்களில் ஒரு

## அக்கப்போர்



சிறிய ஜனதா மோட்டார் கார்கள் உற்பத்தி செய்யப் படுமா படாதா என்பதைப் பட்டும் படாமலும் மாதக் கணக்கில் ஏதேதோ சொல்லிச் சமாளித்து வரும் திரு சி. சுப்பிரமணியத்தின் திறமையைப் பாராட்டி அவருக்கு ஒரு கப்பல் மாடல் கார் பரிசளிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

''ஹாங்காங்கில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட அறுபத்தொரு வயதுக் கிழவி 'பிழைத்தெழு'ந்து திரும்பி வந்தது என்ன அதிசயம்? நாங்கள் போடுகிற கூட்டுப் பண்ணை, கட்டாயக் கொள்முதல், அரிசி மில்களைத் தேசியமாக்குதல் போன்ற மந்திரங்களால் செத்துப்போன ரேஷன் அரக்கனே மீண்டும் உயிர்பெற்று எழுந்து வரப் போகிறான் பாருங்கள்'' என்கின்றனர் காங்கிரஸ்காரர்கள்.

ஃ ஃ ஃ

ஐரோப்பிய பொதுச் சந்தை (ஈ. ஸி. எம்.) ஏற்பட்டதன் விளைவாகத் தாங்கள் உற்பத்தி செய்துள்ள ஏராளமான வெங்காயங்களை விற்பனை செய்ய முடியாமல் போக, இலவசமாகவே வாரி வழங்கும் நூதன ஸ்டிரைக்கைத் தொடங்கியுள்ள இத்தாலிய விவசாயிகள் அதில் நாலு டன்னைப் பெரியார் ஈ. வெ. ரா.வுக்குக் கப்பலில் ஏற்றி அனுப்பியுள்ளார்கள்!



கறுப்பு நிற மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டு பிச்சுமணியிடம் திரும்பி வந்து, ''தம்பி! நான் இரவு நேரத்தில் கூலிங் கிளாஸ் அணிவது உனக்கு வேடிக்கையாகத் தோன்றுகிறது இல்லையா? என் உணர்ச்சிகளை என் கண்கள் வழியாக மற்றவர்கள் பார்த்து விடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இப்படி ஒரு கறுப்புக் கண்ணாடி அணிந்து கொள்வது வழக்கம்!'' என்று விஷமமாகச் சிரித்தார்.

பிச்சுமணி 'உம்'மென்று உட்கார்ந்திருந்தான். மின்சார விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் அவனுடைய முகம் வெளுத்திருப்பது தெரிந்தது. உடும்புப் பிடி போன்ற ஒரு தீர்மானமும் அந்த முக பாவத்தில் தொனித்தது. விழிகள் மூர்க்கமான ஒரு சிம்மத்தின் கண்களைப் போல மின்னின! தன் ஒருவனுக்காகத் தான் உமா அன்புத் தேவதையாகத் தோன்றியிருக்கிறாள் என்று அவன் எண்ணி யிருக்கும் சமயத்தில் அவனுக்குப் போட்டியாக டாக்டர் ஜகந்நாதன் முளைத்து விட்டார். தன்னை விட அவருக்குத்தான் வாய்ப்புகளும் வசதியும், வயசுப் பொருத்தமும் அமைந்திருக்கின்றன என்று எண்ணியதால் அவனுடைய ஆண் உள்ளத்தில் பொறாமைக் கனல் மூண்டு எரிமலையாக வெடித்து உடலெங்கும் வெறித்தனமாக ரத்தப் பிரவாகத்தை ஓடச் செய்திருந்தது. தன்னைத் தன் தாத்தாவுடன் வெளியூருக்கு அனுப்பி விட்டு உமாவை அபகரித்துக் கொள்ளத்தான் டாக்டர் ஜகந்நாதன் ஏதோ தந்திரமாகத் திட்டமிட்டிருக்கிறார் என்கிற சந்தேகத்தை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அந்தச் சந்தேகம் அவன் மூளைக்குள் சைத்தானாகக் குடி புகுந்து கொண்டு ஆவேசம் கொண்டவனைப் போலவே அவனை ஆக்கியிருந்தது.

''என்ன தம்பி, மௌன நாடகம் நடத்துகிறாய்?'' என்று டாக்டர் ஜகந்நாதன் மீண்டும் விஷமச் சிரிப்புடன் கேட்டார்.

''நான் எதற்காக இங்கே வந்திருக்கிறேன் என்பது உமக்குத் தெரியுமா?'' என்று பிச்சுமணி அழுத்தலாகக் கேட்டான்.

''என் மூளைக்கு அநாவசியமாகச் சிரமம் கொடுக்காதே! நீயே சொல்லி விடு!'' என்றார் ஜகந்நாதன்.

''உம்மோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள வந்திருக்கிறேன்!''

''உடன்படிக்கையா? இந்த அகால நேரத்திலா? அப்படி என்ன தலை போகிற காரியம்?''

''என் விஷயத்தில் நீர் தலையிடக் கூடாதென்று முன்பே ஒரு தடவை உம்மிடம் எச்சரித்திருக்கிறேன். நீர் எவ்வளவு தூரம் தலையிட்டிருக்கிறீர் என்பது எனக்கு அப்போது தெரியாது. ஆனால் இப்போது... தெளிவாகப் புரிகிறது. என் தாத்தாவை உடனே தீர்த்த யாத்திரை போகும்படியும், என்னையும் அழைத்துக் கிளம்பும்படியும் நீர்தானே ஆலோசனை வழங்கினீர்?''

''ஆமாம். அதனால் என்ன?''

''அதை நீர் மறுக்கவில்லை! மறுக்கவில்லை!'' என்று பிச்சுமணி குமுறினான்.

''நான் ஏன் மறுக்க வேண்டும்? அந்த ஆலோசனை நல்லதுதானே?''

''யாருக்கு நல்லது?'' என்றான் பிச்சுமணி ஆக்ரோஷத்தோடு. (தொடரும்)

# பொன் விலங்கு

### 62வது அத்தியாயம்



மனிதனை வலுப்படுத்துகிற சக்திகளில் பிறர் அவன் மேல் செலுத்துகிற மெய்யான அன்பும் ஒன்று. பிறர் நம்மேல் அன்பும் அக்கறையும் உள்ளவராக இருக்கிறார்கள் என்பதை உணர்வது எத்தனை சுகமாக இருக்கிறதோ அத்தனை வேதனையும் ஏமாற்றமும் அந்த அன்பு பொய் என்று புரிந்துகொள்ளும்போது வாழ்வில் உண்டாகிறது. சத்தியமூர்த்தி இளமையிலிருந்தே எதற்கும் எங்கும் தயங்கி நிற்காத தீரன். கீழே விழும்போதெல்லாம் அதை விட வேகமாக மேலே எழுந்திருக்க வேண்டும் என்ற உணர்ச்சியைத் தன் வாழ்வில் பலமுறை அடைந்திருக்கிறான் அவன். அவனுடைய வலது கால்

## மணிவண்ணன்

முன்னால் அடியெடுத்து வைப்பதற்கு எப்போதும் தயாராயிருந்திருக்கிறது. 'இது இப்படித்தான் முடியும்' என்று எதைப் பற்றியும் ஒரே விதமாகச் சிந்தித்து அது அப்படி முடியாததனால் ஏமாறித் தவித்ததில்லை அவன். இப்போது மோகினியின் செய்கையால் அவன் மனம் புண்பட்டிருந்தது ஒன்று மட்டுமே எல்லா உறுதியையும் மீறி அவனை ஆழமாக வருத்திக் கொண்டிருந்தது. அந்த வேதனையோடு வேதனையாக அவன் தன்னுள் நினைக்கலானான்: 'இனிமேல் என்னைப் போல் எந்த இலட்சியவாதியின் வாழ்க்கையிலும் காதல் என்ற மேகம் மூடாமல் இருக்கட்டும்! அவனுடைய தீவிரமான எண்ணங்களை எல்லாம் ஏதாவது ஒரு பெண்ணின் ஞாபகம் தவிக்கச் செய்யாமல் இருக்கட்டும்! எந்த ஒரு பெண்ணுக்காகவும் அவனுடைய கண்களோ, இதயமோ, இரகசியமாகவோ பகிரங்கமாகவோ, கண்ணீர் சிந்தாமல் இருக்கட்டும்!' என்று எண்ணியபோது அவன் இதயம் குமுறிக் கொண்டிருந்தது. ஏற்பாடுகள் எல்லாம் வேகமாகவும் சாதகமாகவும் நடந்து கொண்டிருந்தன. டெல்லியிலிருந்து அவன் தேர்ந்தெடுக்கப்பட்ட தந்தி கிடைத்துவிட்டது. பாஸ்போர்ட், எக்ஸேஞ்ச் கண்ட்ரோல் அநுமதி, எல்லாம் கிடைத்துவிட்டன. குத்துவிளக்கிலிருந்து வெளியேறியபோது குமரப்பனிடம் கொஞ்சம் பணம் இருந்தது. மல்லிகைப் பந்தலில் கடை வைத்தபின் இன்னும் கொஞ்சம் சேர்ந்திருந்தது. கண்ணாயிரத்தின் கடனை அடைப்பதற்கும், வெளிநாடு செல்ல உடை முதலியனவற்றுக்கும், கையில் கொண்டு போவதற்கும் சத்தியமூர்த்திக்கு மனம் விரும்பி உதவினான் அவன். கல்லூரி முதல்வரிடம் உரிய காலத்தில் சத்தியமூர்த்தி தன்னுடைய இராஜிநாமாக் கடிதத்தைக் கொடுத்து விட்டான். அப்படிக் கொடுக்கும்போது 'நீங்கள் இந்தக் கல்லூரிக்கு ஆசிரியராக வந்து மாணவர்களுக்குப் பாடங்கள் கற்பிப்பது தவிர இந்தக் கல்லூரியின் எதிர்கால அநுபவங்கள் உங்களுடைய இளமை வேகத்துக்கு ஒரு பாடமாகவும் ஆகலாமல்லவா?' என்று எப்போதோ காலஞ்சென்ற பூபதி தன்னிடம் கூறியிருந்ததை இப்போது ஒரு கணம் நினைத்துச் சிரித்துக்கொண்டான் அவன். ஒரு மனிதனுடைய நேர்மையான சமுதாயத் தேவைகள் கூட அவன் நினைத்தபடி நிறைவேறாது. 'ஒவ்வொரு நல்ல மனிதனும் தன்னுடைய தேவைக்காக மட்டுமே போராட முடியாது. தன்னுடைய தேவைக்காகவும் பிறருடைய நியாயத்துக்காகவும் சேர்ந்தே போராடியாகவேண்டும்' என்பதுதான் அன்றும் இன்றும், என்றும் சத்தியமூர்த்தியின் வாழ்க்கை நோக்கமாயிருந்தது. அதனால்தான் மிகக் குறுகிய கால ஆசிரிய வாழ்க்கையிலேயே மல்லிகைப்பந்தல் கல்லூரியில் இவ்வளவு சோதனைகளும் அவனுக்கு ஏற்பட்டு விட்டன. மனித மனத்தின் எல்லையற்ற சோகத்தையோ எல்லையற்ற சந்தோஷத்தையோ அப்படியே சொல்லி முடிப்பதற்குப் பாஷையும் சில சமயங்களில் பரிபூரணமாகத் துணை செய்வதில்லை. தெரிந்தோ தெரியாமலோ மனித உணர்ச்சிகளின் சங்கமம் தான் வாழ்க்கையாயிருக்கிறது. ஆனால் உணர்ச்சிக்குப் பாஷை எப்போதுமே கருவியாக இருந்து ஒத்துழைப்பதில்லை. அந்தச் சில நாட்களில் குமரப்பனோடுகூடச் சத்தியமூர்த்தி அதிகமாகப் பேசவில்லை. வெளி நாட்டுப் பயணத்துக்



கான உடுப்புக்களைத் தைக்கக் கொடுப்பதற்காக மல்லிகைப் பந்தல் கடைத் தெருவில் உள்ள பிரசித்தி பெற்ற தையற்கடை ஒன்றிற்குச் சத்தியமூர்த்தியைக் குமரப்பன், அழைத்துக் கொண்டு போயிருந்தான். அன்று தையற் கடையில் அளவு எடுத்துக்கொண்ட பிறகு மாலை வேளையாக இருந்ததனால் அப்படியே நண்பர்கள் உலாவப் போயிருந்தார்கள். அன்று கூட நண்பனிடம் மோகினியைப் பற்றியோ தன் வேதனைகளைப் பற்றியோ அவன் அதிகமாகக் கூறவில்லை. 'ஹிடல்பர்க்' யூனிவர்ஸிடியைப் பற்றியும், அது ஜெர்மனியின் ஜீவநதியான ரைன், நெக்கார் நதிக்ளின் கரையில் திராட்சைத் தோட்டங்கள் நிறைந்த சூழலில் இயற்கை யழகுடன் அமைந்திருப்பதையும் 'ஆஃப் ஹ்யூமன் பாண்டேஜ்' என்ற தன் நாவலில் ஸாமர்ஸெட் மாம் அந்தப் புராதனமான ஜெர்மன் யூனிவர்ஸிடியைப்பற்றி எழுதி யிருப்பதைக் குறித்தும் குமரப்பன் ஏதேதோ கூறிக்கொண்டு வந்தான். நோபல் பரிசைத் தியாகம் செய்த டாக்டர் ஷிவாகோவின் ஆசிரியர் பாஸ்டர்நாக் சிலகாலம் தங்கிப் படித்த மார்பர்க் பல்கலைக் கழகத்தைப் பற்றியும் குமரப்பன் சில விவரங்களைக் கூறினான்.

மறு நாள் மாலை லேக் வியூ ஹோட்டலில் மாணவர்கள் சத்தியமூர்த்திக்கு ஒரு பிரிவுபசார விருந்து கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த விருந்துக்கு பிரின்ஸிபாலோ, வார்டனோ, வேறு விரிவுரையாளர்களோ, பேராசிரியர்களோ யாருமே வரவில்லை. தமிழ்த் துறையைச் சேர்ந்த காசிலிங்கனார் கூட வரவில்லை. தாவர இயல் விரிவுரையாளர் சுந்தரேசன் மட்டும் தயங்கித் தயங்கி வந்து நின்றார். கல்லூரி லைப்ரேரியன் ஜார்ஜ் மிகவும் தைரியமாகவும் மனம் விரும்பியும் அந்த விருந்தில் கலந்து கொண்டார். விருந்து முடிந்ததும் சத்தியமூர்த்தியைப் பாராட்டி மேடையில் பேசும்போதே சில மாணவர்கள் கண் கலங்கி விட்டார்கள். மாணவர் யூனியன் தலைவி என்ற முறையில் பாரதியும் அந்த விருந்துக்கு வந்திருந்தாள். அவள் ஜமீன்தாருக்கும் பிரின்ஸிபாலுக்கும் பயப்படாமல் துணிவாக அந்த விருந்துக்கு வந்து கலந்து கொண்டதோடு மாணவர்கள் சத்தியமூர்த்தியைப் பாராட்டிப் பேசியபோதெல்லாம் மற்றவர்களோடு சேர்ந்து தானும் கைதட்டி மகிழ்ந்து கொண்டிருந்தாள். படிக்கிற மாணவர்கள் பதவியை விட்டுப் போகும் ஆசிரியருக்குக் கொடுக்கும் விருந்துபசாரம் என்ற முறையில் சத்தியமூர்த்தியின் மாணவியாகிய பாரதி அங்கு வந்திருந்தாலும், நிர்வாகத்தோடு பகைத்துக் கொண்ட ஓர் ஆசிரியரைக் கௌரவிக்கத் தன் தந்தை இறந்து அதிக நாளாகாத அந்த நிலையிலும் அவள் வந்திருக்கிறாள் என்பதே பலருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளோ, பிரிவுபசார விருந்துக்கு வருவதுபோல வந்திருந்தாலும் சத்தியமூர்த்தியைச் சந்தித்துப் பேச வேண்டிய அவசரமான காரியமும் அவளுக்கு இருந்தது. அவள் இந்தப் பிரிவுபசார விருந்துக்காக வீட்டிலிருந்து புறப்படும்போது ஜமீன்தார் பேச்சுவாக்கில் அவளிடம் ''நாங்க இன்னும் ஒரு வாரம் பத்து நாளைக்குள்ளாரப் புது வீட்டுக்குப் போயிடறோம் அம்மா! நீ அந்தப் படத்தை எடுத்தெறிஞ்ச மாதிரி ஆளையே எடுத்தெறிஞ்சாலும் எறிஞ்சிடுவே, உங்கிட்ட எனக்கு ரொம்பப் பயமாக இருக்கு'' என்று வேடிக்கையாகத் தொடங்குவது போல் தொடங்கிக் குத்தலாகச் சொல்லிக் காண்பித்திருந்தார். படத்தைத் தான் எடுத்தெறிந்தது பற்றிக் கண்ணாயிரம் ஜமீன்தாரிடம் கோள் மூட்டி யிருக்க வேண்டும் என்று அப்



போதுதான் பாரதிக்குப் புரிந்தது: வெளிப்படையாக மோகினியின்மேல் தான் அநுதாபப்படுவதாகக் காண் பித்துக் கொண்டால், ''எனக்கில்லாத அக்கறை உனக்கென்ன வந்தது? அவ ளுக்குப் பரிந்து பேச நீ யார்?'' என்று ஜமீன்தார் முரட்டுத்தனமாகத் தன்னை எதிர்த்துக்கேட்பாரே என்பதை நினைத்து அவரிடம் மோகினி விஷயமாக எடுத்துச் சொல்லத் தயங்கினள் பாரதி. அதே சமயத்தில் மோகினியை நிராதரவாக விட்டுவிடவும் அவளுக்கு மனமில்லை. இதையெல்லாம் நன்ருகச் சிந்தித்தபின் அன்று நடக்கும் பிரிவுபசாரக் கூட் டத்தின் முடிவில் எப்படியும் சத்திய மூர்த்தியைச் சந்தித்து ''மோகினியைக் கைவிட்டு விடாதீர்கள்! அவள் புனித மானவள். அவளைக் காப்பாற்றுங்கள்'' என்று வேண்டிக்கொள்ள எண்ணியே அங்கு வந்திருந்தாள் பாரதி. ஆனுல் அது முடியாமல் போய்விட்டது. மாலை ஆறரை மணிக்குத் தொடங்கிய விருந்து முடியவே ஏழரை மணி ஆகிவிட்டது. அப்புறம் மாலையிட்டுப் பாராட் டுரைகள் வழங்கிக் கூட்டம் முடிய ஒன்பதரை மணிக்கு மேல் ஆகிவிட்டது. கூட்டம் முடிந்த பின்னும் மாண வர்கள் பலாப்பழத்தைச் சுற்றிய ஈக் களைப் போல் சத்தியமூர்த்தியை மொய்த்து நெருங்கிப் பேசிக்கொண் டிருந்தார்கள். அவரிடம் பேசுவதற்குரிய தனிமை அப்போது கிடைக்குமென்று தோன்றவில்லை பாரதிக்கு. மறுநாள் அதிகாலையில் அவரை அவருடைய அறையிலேயே போய்ப் பார்ப்பதென்ற முடிவுடன் திரும்பிவிட்டாள் அவள்.

மாலை ஆறு மணியிலிருந்து இரவு ஒன்பதரை மணிவரை பாரதி வீட்டி லிருந்து வேக்வியூ ஹோட்டலில் நடை பெற்ற விருந்துக்குப் போயிருந்த அந்த மூன்றரை மணி நேரத்துக்குள் இங்கே வீட்டில் கண்ணுயிரமும் ஜமீன்தாரும் ஒரு பிரளயமே நடத்தி யிருந்தார்கள். மல்லிகைப் பந்தலுக்கு வந்த முதல் தினத்திலிருந்து அன்றுவரை ஒரு நாள் கூட மோகினி அவ்வளவு நேரம் தனி யாக அந்தக் கிராதகர்களோடு வீட்டில் இருக்க நேர்ந்ததே இல்லை. கல்லூரி மாணவர்கள் நடத்தும் அந்தப் பிரிவுப சார விருந்துக்குத் தான் எந்தத் தொடர் பைக் கொண்டும் போக முடியாத காரணத்தால் அன்று மோகினி வீட்டி லேயே இருக்க வேண்டியதாயிற்று. என்ன பிரிவுபசார விருந்து — யாருக்கு என்பதைப் பாரதியும் அவளிடம் சொல்லவில்லை. கண்ணுயிரமும், ஜமீன் தாரும் தன்னிடம் ஏதாவது வம்புக்கு வரலாம் என்று பயந்து பாரதி புறப் பட்டதும் மோகினியே தன் அறைக் கதவை உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டு ஏதோ புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கி யிருந்தாள். பத்து நிமிடங்கள்கூட ஆகியிருக்காது. அதற் குள் யாரோ வந்து கதவைத் தட்டி னூர்கள். 'புறப்பட்டுப் போன பாரதியே எதையாவது மறந்து போய்விட்டு மறு படி வந்து கதவைத் தட்டுகிறுளோ' என்றெண்ணிக் கதவைத் திறந்தாள் மோகினி. அசடு வழியச் சிரித்துக் கொண்டே ஜமீன்தார் கதவருகே நிற்ப தைப் பார்த்து அவளுக்குச் சர்வ நாடி யும் ஒடுங்கிப் போய்விட்டது. அவ்வளவு பெரிய பங்களாவில் அப்போது வேறு யாருமே இல்லை. சுற்றிலும் மெல்ல இருட்டத் தொடங்குகிற நேரம். கண்ணு யிரமும் வெளியே போவது போல் எங்கோ நழுவி யிருந்தார். டிரைவர் முத்தையாவோ பாரதியைக் காரில் அழைத்துக் கொண்டு 'லேக் வியூ' ஹோட்டலுக்குப் போயிருந்தான். சமையற்காரர் பின்கட்டில் எங்கோ இருந்தார். 'மோசம் போய்விடக் கூடாதே' என்ற பயமும் பதற்றமும் நடுக்கிடக் குழறும் சொற்களால் ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று குனிந்த தலை நிமிராமல் ஜமீன்தாரைக் கேட்டாள் அவள்.

''இதென்ன கேள்வி? நீதான் வேண்டு மென்று வைத்துக் கொள்ளேன்'' என்று கைகளை நீட்டிப் பல்லிளித்தார் ஜமீன் தார். கொடிய மிருகமாக எதிரில் வந்து நிற்கும் அந்தக் கயமையை அரு வருப்போடு துச்சமாகப் பார்த்தாள் அவள்.

''ஏன் அப்படிப் பார்க்கிறே மோகி? கொஞ்சம் என்னோடை வந்து தோட் டத்துப் புல்வெளியிலே சிரிச்சுப் பேசிக் கிட்டிருந்தா என்ன கொறைஞ்சு போவு தாம்?''

''..........''

''இரு! இரு! இந்த வீட்டிலே சேர்ந்து இருக்கிற வரைதானே நீ அந் தப் பொண்ணு பாரதியோடேயே இருக்க முடியும்? ஜமீன் வீட்டுக்குப் போனப்புறம் என்னதான் செய்யப் போறியோ?'' என்று சொல்லி வய துக்குப் பொருந்தாமல் சின்னத்தன மாகக் கண் சிமிட்டினூர் ஜமீன்தார். 'தூ' வென்று காறித் துப்பிவிட்டு எதிரே வந்து நிற்கும் அந்த மிரு கத்தை இலட்சியம் செய்யாமல் கத வைப் படீரென்று அடைத்து உட் புறமாகத் தாழிட்டாள் மோகினி. மீண்டும் கதவு உடைபடுவது போல் தட்டப்பட்டது. தானுகக் கை ஓய்ந்து

போய்க் கதவைத் தட்டுவதை நிறுத் தட்டும் என்று உள்ளே புலிக்குப் பயந்து புதரில் பதுங்கிய புள்ளி மானாய் நடுங்கிக் கொண்டிருந்தாள் மோகினி. கதவு தட்டப்படுவது நிற்கவேயில்லை. சிறிது நேரத்துக்குப் பின் ஜமீன் தாரின் குரலோடு கண்ணாயிரத்தின் குரலும் வெளியே கேட்டது. உள்ளே தாழ்ப்பாள் போட்டாலும் வெளியே இருந்து சாவியால் திறக்கிற மாதிரிப் பூட்டு அது. அவர்கள் சாவியினாலேயே தாழ்ப்பாளைத் திறந்து விடுவார்களோ என்று அவள் பயந்தாள். பயந்தபடியே நடந்தது. கதவைத் திறந்து கொண்டு உள்ளே பாய்ந்த கண்ணாயிரம் எரிமலை யாகச் சீறி இரைந்தார்.

''நீ உன் மனசிலே என்னதான் நினைச்சிருக்கே? ஜமீன்தாரு.... எவ் வளவு பெரிய மனுஷன்... தனியா ரெண்டு வார்த்தை பேச வந்தார்னா சந்தோஷமாப் பேசி அனுப்பாமே.... காறித் துப்பினியாமே? ஆடறது கூத் துன்னாலும் போடறது பத்தினி வேஷம் னாம்.....''

அவ்வளவுதான். இதைக் கேட்டு அதுவரை பொறுமையாக இருந்த மோகினி பத்திரகாளியானாள். ''கண் ணாயிரம்!'' என்று அவள் உரக்க ஒலித்த சீற்றக் குரலில் அந்த வீடே அதிர்ந் தது. பாதிக் கோழைத்தனமும், பாதிப் பயமும் உள்ள அந்தச் சாதுப் பெண் தன்னைப் பதிலுக்கு இரைந்து கோபிக்க மாட்டாள் என்றெண்ணியிருந்த கண் ணாயிரம் அவள் எதிர்பாராமல் போட்ட கூப்பாட்டினால் அப்படியே திகைத்துப் போய் நின்றார். ''வேலைக்கு ஒருத்தியைப் பெண்டாள வலை வீசும் உங்களையும் ஜமீன்தாரையும் போன்ற சண்டாளர் களைப் பெற்ற குலமே பத்தினிக் குலமா னால் பிறந்த குலத்தைத் தவிர வேறு பிழை செய்தறியாத நானும் பத்தினி தான். இந்த நாசகாரச் சமூகத்தில் நீங்கள் எல்லாம் பெரிய மனிதர்கள். நானே கூத்தாடுகிறவள். குலத்தில் பிறக் காதவள். மானம் கெட்டவரே! என்னைக் குறை சொன்னால் உம் நாக்கு அழுகிப் புழு நெளியும்...'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் குமுறி மண்டை வெடித்துவிடும் போல இரைந்து கத்திய அவளை ஆத்திரத்தில் என்ன செய் கிறோம் என்ற உணர்வே இன்றிக் கன் னத்தில் ஓங்கி அறையப் பாய்ந்து விட்டார் கண்ணாயிரம். மோகினி அவர் தன்னை அறையப் பாய்ந்து வருவதைப் பார்த்துச் சிறிதும் நகரவோ ஓடவோ விலகவோ இல்லை. தன் னுடைய நினைவின் புனிதத்துவம் தன்னைக் காக்கும் என்ற நம்பிக்கை யோடு கம்பீரமாக நிமிர்ந்து பார்த்து நெருப்பாய் ஜொலித்துக் கொண்டு நின்றாள். அவள் நின்ற கம்பீரத்தில் ஒடுங்கி மிரண்டு நெருப்பருகே நெருங்க அஞ்சுகிறவரைப் போல ஓங்கிய கையோடு பின்வாங்கித் தயங் கினார் கண்ணாயிரம். அவளைக் கை நீட்டி அடிக்காத குறையைச் சத்திய மூர்த்தியை வாயில் வந்தபடி திட்டித் தீர்ப்பதன் மூலம் கண்ணாயிரம் அப் போது தணித்துக் கொண்டார். ''அந் தத் தமிழ் வாத்தியார்ப் பயல் மேலி ருக்கும் மயக்கத்தில்தான் நீ இப்படி ஜமீன்தாரை அலட்சியம் செய்யறே! உங்கம்மா இருக்கறப்பவே நீ ஜமீன் தாருக்குத்தான்னு உன்னை அவரிட்ட ஒப்படைக்க முடிவு செஞ்சிருந்தாள். நீயானா இன்னிக்கு இப்படித் திமிர் பிடிச்சுத் திரியறே'' என்று கண்ணா யிரம் இரைந்தபோது, —

''அவர் தெய்வம்! தெய்வத்தைக் குறை சொல்ல மனிதர்களுக்கு யோக்

**பொன் விளங்க**

மனித மனத்தின் எல்லையற்ற சோகத்தையோ எல்லையற்ற சந்தோஷத்தையோ அப்படி அப் படியே சொல்லி முடிப்பதற்குப் பாஷையும் பரிபூரணமாகத் துணை செய்வதில்லை.

கியதை இல்லை. நீங்களோ மனிதர் களிலும் கேடுகெட்ட இராட்சதர்கள். உங்களுக்கு அவர் பேரைச் சொல்லக் கூடத் தகுதி கிடையாது'' என்று பதி லுக்குச் சொல்லிச் சத்தியமூர்த்தியை அவர்கள் குறைத்துக் கூறுவதைப் பொறுக்காமல் சீறினாள் மோகினி.

''இரு! இரு! சீரழியத்தான் நீ இவ் வளவும் பேசறே'' என்று கறுவிக் கொண்டு போனார் கண்ணாயிரம்.

''சும்மாப் பேசி இரசாபாசம் பண் ணாதே கண்ணாயிரம்! இதோட சேர்ந்து நம்ம பூபதி மகளும் கெட்டுப்போச்சு. நம்ம மேலே ஏதோ மட்டு மருவாதி வச்சிருந்த அந்தப் பொண்ணு பாரதி யும் இதுனாலே நம்ம படத்தையே தூக்கி எறியிற அளவுக்கு வெறுக்குது. இந்த வீட்டிலே இருக்கிறவரை இது வழிக்கு வராது. நம்ம வீட்டுக்குப் போய்ப் படுத்தற விதமாப் படுத்தினா வழிக்கு வரும். சும்மா மயிலே மயி லேன்னா இறகு போடாது. பேசாமே வா.... அப்புறம் பார்த்துக்கலாம்''

என்று ஒத்துப் பாடினுர் ஜமீன்தார். அவர்கள் போனதும் மறுபடியும் கதவைத் தாழிட்டுக் கொண்டு ஆற்ருமையோடு குமுறிக் குமுறி அழுதாள் மோகினி. அப்படி அழுதபோது ''இந்தக் கைகள் உன் கண்ணீரைத் துடைப்பதற்கு எப்போதும் தயாராயிருக்கும்'' என்று முன்பு ஒரு சமயம் சத்தியமூர்த்தி கூறியிருந்த வாக்கியம் அவளுக்கு நினைவு வந்தது. நாட்டரசன் கோட்டைக்குப் பக்கத்தில் ஏதோ கலியாணத்திலே சதிராடப் போய் விட்டுத் திரும்புகிற வழியில் சொகவாசம் கிராமத்தில் சந்தித்த அந்தப் பட்டிக்காட்டுத் தம்பதிகளும் இப்போது அவளுக்கு நினைவு வந்தனர். அன்றிலிருந்து இன்று வரை அந்த எளிய இன்ப வாழ்க்கை அவளுள் ஒரு பொருமையான முன் மாதிரியாய் உறைந்து கிடக்கிறது. தான் வாழ முடியாமல் தவிக்கும் போதுகளில் எல்லாம் அந்த வாழ்வின் அமைதி அவள் நினைவில் மேலெழுந்து உறுத்தியிருக்கிறது. புகழ், பணம், கலை, ஆடம்பரம் எல்லாவற்றையும் கழற்றி எறிந்து விட்டுச் சத்தியமூர்த்தியோடு அந்த மாதிரிச் சிறிய குடிசையில் போய் வாழ்ந்தாலும் அந்த வாழ்வில் நிறைவிருக்கும் என்று அவள் கனவு கண்ட நாட்கள் பல. மீண்டும் மதுரை மீனுட்சி கோவில் கிளிக் கூண்டு மண்டபத்தில் பார்த்த அந்தச் சிறைப்பட்ட கிளி நினைவு வந்தது அவளுக்கு. நினைக்க நினைக்க அவளுடைய இதயம் கனத்தது. அழுகையும் பெருகி வளர்ந்தது.

''கூட்டிலிருந்து விடுபட்டால் சுதந்திரம்தான்! ஆனுல் சுதந்திரமாகப் பறந்து போக விடமாட்டார்களே பாவிகள்!'' என்று அழுகைக்கிடையே தனக்குள் மெல்லச் சொல்லி முணுமுணுத்துக் கொண்டாள் மோகினி.

**வி**ருந்துபசாரக் கூட்டம் முடிந்து பாரதி வந்து கதவைத் தட்டியபோது எழுந்து போய்க் கதவைத் திறந்த மோகினியைப் பார்த்தால் அழுது அழுது கண்கள் சிவந்திருந்தன. அவளிருந்த கோலத்தைப் பார்த்து ''என்னக்கா இது? என்ன நடந்தது?'' என்று பதறிப் போய் விசாரித்த பாரதியிடம்,


''இந்த அழுகைதான் நான் என் பிறவியோடு கொண்டு வந்த சீதனம் அம்மா! எல்லாம் என் தலைவிதி'' என்ருள் மோகினி. பாரதி அவளை மேலும் தூண்டித் தூண்டிக் கேட்டாள்.

''கண்ணுயிரம் ஜமீன்தார் யாராவது உங்களைக் கோபிச்சுக்கிட்டாங்களா?''


மோகினி பதில் சொல்லாமல் தலை குனிந்து கண்ணீர் சிந்தினுள். ஜமீன்தாரும் கண்ணுயிரமும் கூச்சமின்றியும், பச்சையாகவும் தன்னைப் பேசிய வசைப்பேச்சுக்களையெல்லாம் அப்படியே கூட்டியோ குறைத்தோ பாரதியிடம் சொன்னுல் அவள் மனம் கூட வேறுபடும் என்பதால் மோகினி அவற்றை அவளிடம் சொல்லவேயில்லை.

''நாமெல்லாம் இப்படி அஞ்சி அழுது பயனில்லை அக்கா! தைரியமாக நம்மைத் துன்புறுத்துகிறவர்களைப் பதிலுக்கு அழ வைக்க வேண்டும்...''

''அதையும் ஒரு நாள் செய்யத்தான் போகிறேன்'' என்று எந்த அர்த்தத்திலோ பதில் கூறினுள் மோகினி. ஆனுல் அந்த அர்த்தம் பாரதிக்குச் சரியாகப் புரிந்திருக்க முடியாது. மறுநாள் சத்தியமூர்த்தி மல்லிகைப்பந்தலை விட்டுப் புறப்படுவதாக இருந்தது. மனத்தில் தனக்குத்தானே பெருந்தன்மையாக ஒரு திட்டம் வகுத்துக் கொண்டிருந்த பாரதி சத்தியமூர்த்தியை மறுநாள் அதிகாலையில் சந்தித்து, மதுரைக்கு அனுப்பிய கடிதத்தைப் பற்றி விசாரித்த பின், ''என் வார்த்தைக்குத் தயவு செய்து செவி சாயுங்கள் சார்! மோகினியைப் போன்ற அழகிய அநாதைகளைச் சமூகம் எந்த நிலையில் வைத்திருக்கிறதென்று உங்களுக்குத் தெரியும். வீண் சந்தேகங்களுக்கு இரையாகி அவளைக் கைவிட்டு விடாதீர்கள். அவளைப் போல் புனிதமான பெண் வேருெருத்தி இந்த உலகில் இருக்க மாட்டாள். நீங்கள் மேற்கு ஜெர்மனிக்குப் புறப்படு முன் கடவுள் சாட்சியாக ஒரு காரியம் செய்யுங்கள். நீங்கள் தைரியமுள்ளவர். முற்போக்குவாதி. இதற்குத் தயங்க வேண்டிய அவசியமே யில்லை! எங்கள் வீட்டுக் காரில் நானே நம்பிக்கையான டிரைவருடன் உங்களையும் மோகினியையும் மதுரைக்கு ஏற்றி அனுப்புகிறேன். மதுரைக்குப் போய் ரிஜிஸ்தர் ஆபீஸில் பதிவுத் திருமணம் செய்து கொண்டு திருப்பரங்குன்றம் கோவிலில் ஓர் அர்ச்சனை செய்துவிட்டு உங்கள் மனைவி என்ற சட்டபூர்வமான அங்கீகாரத்தோடு மோகினியை மறுபடி என்னிடம் கொண்டு வந்து விட்டு விட்டு நீங்கள் அப்புறம் எங்கு வேண்டுமானுலும் புறப்படுங்கள். மறுபடி நீங்கள் திரும்பி வருவதற்கு யுகக் கணக்கில் ஆனுலும் நான் அவளைக் காக்கிறேன். வாழ்க்கையில் உங்களுக்காகவும் அவளுக்காகவும் இந்தத் தியாகத்தைச் செய்யவாவது என்னை அநுமதியுங்கள். உங்கள் மனைவி என்ற சட்டபூர்வமான அங்கீகாரத்




# பிரிட்டானியா
# கோல்டன் பவ்ப்






பிரிட்டானியாவினுல் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கோல்டன் பவ்ப் பிஸ்கட்டுகள், புத்தம் புதியவை, முறுகலானவை, புஷ்டிச் சத்தும் உள்ளவை. டீ அல்லது காபி அருந்தும்போது, ஜாம், வெண்ணெ, அல்லது பாற்கட்டியுடனே தின்பதற்கு மிகச் சிறந்தவை. அவற்றை பரீட்சை செய்து பாருங்கள்—வாயில் போட்டதும் கரைந்து போகின்றன. இன்றே கொஞ்சம்வாங்கி, பிரிட்டானியா கோல்டன் பவ்ப் பிஸ்கட்டுகளின் புத்தம் புதிய சுவையின்பத்தை அனுபவியுங்கள்.

## பிரிட்டானியா
## பிஸ்கட்டுகள்

JWT BC5910A

# உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



**பொடுகு**

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.



**கேசம் உதிருதல்**

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.



**இளமையில் வழுக்கை**

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1



**ப்யூர் சில்விக்ரீன்**

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

**சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்**

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



# Silvikrin


சில்விக்ரீன் – கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/6/64

தோடு நான் அவளை வைத்துக் காக்கிற போது, ஜமீன்தாரோ, கண்ணாயிரமோ என்னிடம் தொல்லை கொடுக்க முடியாது. தயை செய்யுங்கள். நீங்கள் வெளி நாட்டுக்கு விமானம் ஏறும் போது வெறும் புரொபஸர் சத்திய மூர்த்தியாக மட்டும் புறப்படாதீர்கள். மோகினியின் கணவர் சத்தியமூர்த்தியாகப் புறப்படுங்கள்'' என்று உள்ள முருகி வேண்டிக்கொள்ள நினைத்திருந்தாள். இப்படிச் செய்தாலொழிய, 'நீங்கள் பாக்கியசாலி! அதனால்தான் காதலில் ஜெயித்திருக்கிறீர்கள்! அந்த ஜயத்தை இறுதிவரை நிரூபிக்க நான் துணையாயிருக்கிறேன்' என்று மோகினியிடம் தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாதென்று பாரதிக்குத் தோன்றியது. 'மோகினி சட்ட பூர்வமாகச் சத்தியமூர்த்தியின் தர்மபத்தினியாகிவிட்டால் அப்புறம் கொடியவர்களான ஜமீன்தாரோ, கண்ணாயிரமோ அவளுக்குத் தொல்லை கொடுக்க முடியாது! நானும் தாராளமாகவும் உரிமையுடனும் இவளைப் பாதுகாத்துக் கொண்டு அவர்களைத் துணிந்து எதிர்க்கலாம்! என்னுடைய காதல் எந்த இடத்தில் தோற்றதோ அங்கேயே மோகினியின் காதல் வென்றது. அந்த வெற்றியையாவது நான் காத்துக் காப்பாற்றிக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிக் காப்பாற்றிவிட்டால் ஜமீன்தார் தம்மோடு தமது மஞ்சள்பட்டி மாளிகையில் வந்து இருக்கச் சொல்லி மோகினியை வற்புறுத்த முடியாது. எப்படியும் இதை நான் செய்தே ஆகவேண்டும்' என்று கங்கணம் கட்டிக் கொண்டாற்போல உறுதியாயிருந்தாள் பாரதி. அப்படிச் சத்தியமூர்த்தி அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொள்ள அழைத்துப் போவதற்கு இணங்கி விடுவாரென்னும் அந்த நற்செய்தியோடு சேர்த்தே அவர் வெளி நாடு சென்று இரண்டாண்டுகளுக்கு மேல் தங்கப் போகிற துயரச் செய்தியையும் மோகினியிடம் சொல்ல வேண்டுமென்றும் அதை அந்த விநாடி வரை இரகசியமாக வைத்திருந்தாள் பாரதி. ஆனால் அதே நாளில் அதே இரவில் மோகினியும் அந்தச் செய்தியைத் தெரிந்து கொண்டு விட்டாளென்றும், அப்படித் தெரிந்துகொண்டதால் ஏற்கெனவே நலிந்துதளர்ந்திருந்த அவள் மனம் இன்னும் தளர்ந்து நம்பிக்கையற்று வீழ்ந்து விட்டதென்றும் பாரதி அறிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. பாரதி எந்தப் பிரிவுபசாரக் கூட்டத்திற்குப் போய்விட்டுத் திரும்பி வந்திருந்தாளோ அந்தப் பிரிவுபசாரக்

## சென்னையில் சோவியத் சர்க்கஸ்

சோவியத் யூனியனில் சர்க்கஸுக்காக ஒரு கலைப் பள்ளி நடத்தி அதில் ஐந்நூறு மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். சர்க்கஸ் கலைஞர்கள், நாடக, சினிமாக் கலைஞர்களைவிட அதிகச் சம்பளம் பெறுகிறார்களாம். இருபது ஆண்டுகள் வேலைக்குப் பிறகு அவர்களுக்குப் பென்ஷன் உண்டாம். 'நித்திய கண்டம்' என்ற சர்க்கஸையும் ஓர் அரிய பிழைப்பாக்கி யிருக்கிறார்கள் ருஷ்யாவிலே.




சென்னையில் கலாசாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் சோவியத் சர்க்கஸ் நிகழ்ச்சிகள் பிப்ரவரி 24ந் தேதியிலிருந்து 29ந் தேதி வரை விமரிசையாக நடந்ததைக் கண்டோம்.

இந்தச் சோவியத் கலைக் குழுவில் அறுபது கலைஞர்களைத் தவிர, ஐம்பது பிராணிகளும் பறவைகளும் உள்ளன. இந்தக் குழுவைத் திறம்பட நிர்வகிப்பவர் மாஸ்கோ சர்க்கஸ் கலைப்பள்ளியின் தலைவர் அலெக்ஸாண்டர் வோலோஷின்.

இந்தச் சர்க்கஸில் புகழ் பெற்ற பெடடோவ் அலெக்ஸாண்ட்ரோவ் பழக்கிய ஆறு புலிகள் தீவளையங்களுள் பாய்ந்தன; ஏற்ற இறக்கக் கட்டையிலும் (சீசா) ஆடின. ஆடம்கள் சகோதரிகள் இருவரும் நீண்ட கழிகளின் மீது மயிர்க்கூச்செரியும் வித்தைகளைச் செய்து திகைக்க வைத்தனர். சர்க்கஸ் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

கூட்டத்தில் வெவ்வேறு வகுப்பு மாணவர்கள் சத்தியமூர்த்தி மேற்கு ஜெர்மனிக்குப் பயணமாவதைப் பாராட்டி விடை கொடுத்து அனுப்பும் பாராட்டிதழ்களின் அச்சுப் பிரதிகள் சிலவற்றைக் கூட்டத்தில் வழங்கியதால் பாரதியும் கையோடு காரில் அவற்றைக் கொணர்ந்திருந்தாள். அவள் வீட்டுக்குள் வரும்போது அவற்றை மறந்து காரிலேயே விட்டு வந்ததனால் டிரைவர் முத்தையா அவற்றை உள்ளே கொண்டு வந்து அவளுடைய மேஜையில் வைத்துவிட்டுப் போயிருந்தான். இரவில் மேஜைமீதிருந்த தண்ணீர்க் கூஜாவிலிருந்து தாகத்துக்காக நீர் பருக வந்தபோது பாரதி அறியாமலே தற்செயலாகத் தான் அதைப் பார்க்க நேர்ந்தபோது மோகினி பரபரப்படைந்தாள். உடனே அதைப் படித்தும் விட்டாள். என்றாவது ஒரு நாள் இந்தக் கூண்டிலிருந்து விடுபட்டுப் போய் அவருடைய பாதங்களின் நிழலில் வாழலாம் என்றெண்ணியிருந்த நம்பிக்கையும் அவள் மனத்தில் இப்போது சரிந்தது. அவள் படித்த பாராட்டிதழ்களில் ஒன்றில் "இன்று நீங்கள் எங்களிடமிருந்தும், இந்தக் கல்லூரி ஆசிரியப் பதவியிலிருந்தும் வெகு தொலைவு விலகிப் போகிறீர்கள். மாணவர்கள் பலரைக் கண்கலங்கச் செய்யும் இந்த நிகழ்ச்சியை நாங்கள் பொறுத்துக் கொள்கிறோம். உங்களுடைய எதிர்காலம் நாட்டுக்குப் பயன்படுமென்ற நல்லெண்ணத்தால் நாங்கள் எங்களுடைய நஷ்டத்தை மறந்து விடுகிறோம்...." என்று எழுதியிருந்தது. 'தன்னுடைய நஷ்டத்தை எப்படி மறப்பது?' என்றெண்ணி உறக்கமிழந்து உணர்வில் ஊக்கமிழந்து நிம்மதியாகப் படுக்கையில் உறங்கிக் கொண்டிருக்கும் பாரதியைப் பார்த்தாள் மோகினி. சிறிது நேரம் அவள் கண்களில் கண்ணீர் பெருகியது. முடிவாக ஏதோ தீர்மானத்துக்கு வந்தவள் போல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் எழுந்தாள். பெருமூச்சு விட்டபடி பக்கத்திலிருந்த அறையில் நுழைந்தாள். 'வாழ்க்கையில் நான் தனி! இந்தப் பரந்த உலகத்தில் எனக்கு யாருடைய ஆதரவும் இல்லை. யாராவது ஆதரவாக வந்தாலும் எனக்காக அவர்கள் துன்பப்படுகிறார்கள்!' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டபடி பலகணிக்கு அப்பால் ஆகாயத்தில் பூத்திருந்த நிலாவையும், தோட்டத்தில் பூத்திருந்த பவழ மல்லிகைப் பூக்களையும் மனத்தில் கனமாகச் சேர்ந்து விட்ட தாங்க முடியாத துயரங்களையும் உணர்ந்து, "நானும் வாழ வேண்டுமா இந்த நாசகார உலகத்தில்?" என்ற மனக் குரல் உள்ளே பெரிதாய் ஒலிக்க உடல் ஓய்ந்து மனம் ஓய்ந்து நடைப் பிணமாய்த் தயங்கித் தளர்ந்து நின்றாள் அந்த நடன ராணி.

இரவு பன்னிரண்டரை மணி சுமாருக்குத் தூக்கத்திலிருந்து தற்செயலாகக் கண்விழித்த பாரதி உள்ளே அறைக்குள் விளக்கு எரிவதையும், ஒரு நாளுமில்லாத அபூர்வமாக அன்று அந்த நேரத்துக்கு மோகினி உறக்கம் விழித்து உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருப்பதையும் பார்த்து ஆச்சரியப்பட்டாள். அந்த அகாலத்தில் கலைந்து சரிந்து சோர்ந்த கருங் குழலும் அழுத கண்களும் துயரம் தோய்ந்த வதனமுமாகச் சோகச் சித்திரமாய்க் காட்சியளித்தாள் மோகினி. அந்த அவலத்திலும் அவள் மிகவும் அழகாகத்தான் இருந்தாள். "இந்த அகாலத்தில் தூக்கத்தையும் கெடுத்துக் கொண்டு என்ன எழுதுகிறீர்கள் அக்கா?" என்று படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டு வினவிய பாரதிக்கு முதலில் சிறிது தயக்கமும் தடுமாற்றமும் அடைந்த பின், "சின்ன வயசிலே அபிநயம் பிடிச்ச பழைய பாட்டு ஒன்று ரொம்ப நாளா மறந்து போயிருந்தது. இப்போ திடீரென்று ஞாபகம் வந்தது. அப்படியே எழுதி வைத்துக் கொள்ளலாமென்று உட்கார்ந்தேன். தூக்கமும் வரவில்லை. படுக்கையில் சும்மா கிடந்து புரள்வதற்கு 'இதையாவது செய்யலாமே' என்று எழுத ஆரம்பித்தேன்" என்று பதில் வந்தது மோகினியிடமிருந்து. அந்தப் பதில் குரலின் தளர்ச்சியிலேயே அவள் நீண்ட நேரம் குமுறிக் குமுறி அழுதிருப்பது தெரிந்தது. "அதிக நேரம் கண் விழிக்காதீங்க..... நேற்றும் நீங்க இராத் தூக்கம் இல்லாமல் தவித்தீர்கள். முந்தா நாளும் தூங்கலை. உடம்பு என்னத்துக்காகும்? அலமாரியிலே தூக்க மாத்திரை இருக்கு. அதையாவது ரெண்டை எடுத்து முழுங்கிப்பிட்டுப் படுத்துக்குங்க" என்று பரிவுடன் கூறி விட்டுச் சிறிது நேரத்துக்குள் மறுபடியும் ஆழ்ந்த உறக்கத்தில் ஈடுபட்டு விட்டாள் பாரதி. 'மல்லிகைப் பந்தல் கல்லூரி வேலையை விட்டு விட்டுச் சத்தியமூர்த்தி வெளிநாடு செல்லப் போகிறார் என்பதையும் அதற்காகத்தான் அன்று மாலையில் லேக்வியூ ஹோட்டலில் பிரிவுபசார விருந்து நடந்தது என்பதையும் எதற்காகப் பாரதி தன்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டாள் என்பது புரியாமல் மோகினியின் மனம் குழம்பியது. (தொடரும்)


குடும்பத்தினர் அனைவரும் வசதியான,
தரமான, பார்வையான ஆடைகளையணிய . . .
கேட்டு வாங்குவது
ரோஹித்
ஷர்ட்டிங்குகள்*
கோடுகளுடனோ, இல்லாமலோ
ரோஹித்
புடவைகள்
...ஆடையணிப்
பொருள்கள்
உன்னத நெசவு
உயரிய அமைப்பு
ரோஹித்
மில்ஸ்
லிமிடெட்
கோக்ரா
மெஹ்மெதாபாத்
அகமதாபாத்-8
ரோஹித் க்ருப் நிறுவனங்களில் ஒன்று
RPY-5 TAM.

# சடகோபன் போகின்றான்

வை. சுப்பிரமணியன்





கோபுர வாசலில் அந்தப் பையன்கள் குழு கூடி யிருந்தது. எப்போதும் கூடும் நாலைந்து பையன்களின் கூட்டம்தான் அது. படிக்கிற பையன்கள், படிக்காத பையன்கள், பெற்றவர்களோ ஊராரோ விளித்துச் சொல்கிறபடி 'உருப்படாத பையன்'கள் எல்லோரும் கலந்த கலவை அந்தக் கூட்டம்.

கோபுர வாசலையும் ஒற்றைத் தெருவையும் இணைக்கிற சந்தில் அவர்கள் பார்வை சென்றுகொண்டிருந்தது.

''சடகோபன்அதோ வராண்டா!'' என்று ஒருவன் பெரிய குரல் எடுத்துக் கத்தினான்.

எல்லோருடைய முகங்களிலும் விஷமக் களை கட்டியது.

''சடகோபா, எங்கேடா, கிளம்பினே?''

''சித்தியா கோவில்லே விநியோகம் வாங்கிண்டு வரச் சொன்னா. வழியை விடுங்கோ'' என்று தலையைக் குனிந்தபடி முண்டிக் கொண்டு போகப் பார்த்தான் சடகோபன்.

பையன்கள் வரிசையாய் நின்றுகொண்டு எல்லாருமே இருபுறமும் கை நீட்டிவிட்டதால் உட்புக வழியில்லை.

''விநியோகம் முடிஞ்சு போயிடும். சீச்சுவும் மடைப்பள்ளியைப் பூட்டிண்டு போய்விடுவான். வழியை விடுங்கடா!'' என்று சொன்னபோதே சடகோபன் கண்களில் கண்ணீர் கட்டி விட்டது.

சடகோபன் பிறவியே தனியா யிருந்தது. சதை போட்ட சரீரம்.

விநியோகத்துக்குச் சென்றிருந்த சடகோபன் பதறியடித்துக்கொண்டு ஓடி வந்தான். தடுக்கிய வேஷ்டியை இடது கையில் பிடித்துக் கொண்டு வலது கையில் ஒரு சிறிய கூடையையும் ஏந்திக் கொண்டு வந்தான். வீடு நெருங்கிய பிறகுதான் அவன் நடையும் உள்ளத்தில் பொங்கிய ஆத்திரமும் வேகம் கொண்டன. படியேறுமிடத்தில் தடுக்கி விழுந்தான். கூடை உருண்டு நடுத்தெருவில் போய் விழுந்தது. அதனுள்ளிருந்த எண்ணெய்ப் பிசுக்குக் கூடிய துணி மஞ்சள் பொட்டுகளுடன் வெளிச்சத்தில் தன் முழு அவலமும் அம்பலமான சோகத்தைக் காட்டிக் கொண்டு கிடந்தது.

உள்ளிருந்து அவன் சித்தப்பா ஓடி வந்தார். அவனைத் தூக்கி நிறுத்தி, ''பிரஸாதமெல்லாம் எங்கேடா? கோவிலுக்குப் போனியா, இல்லியா?'' என்று கேட்டார். அவரைத் தொடர்ந்து வந்த அவரது மனைவி தெருவில் இறங்கிக் கூடையையும் துணியையும் கையில் எடுத்துக் கொண்டாள்.

''பிரசாதம் வாங்கிண்டு வெளியிலே வந்தேன், சித்தியா! வழியில் காத்தவராயனும் காபாலியும் சேர்ந்துண்டு என்னை அடிச்சுச் சாதத்தை யெல்லாம் பிடுங்கிண்டு போயிட்டானுங்க.....'' என்று அழுதுகொண்டு கூறினான் சடகோபன்.

இப்படி ஓர் விளைவை எதிர்பார்த்த அவர் அவனை இரண்டு கைகளாலும் மாறி மாறி அறைந்தார். அவர் மனைவி ஓடி வந்து இடை நின்று தடுத்தாள். இன்னும் நாலு அறைகள் விழுமுன் சடகோபன் தப்பினான்.


''கடிராமா! பிராரப்த கர்மம்! அவன்களுடன் சேராதே சேராதே என்று எத்தனை தரம் சொல்லியிருக்கேன். இப்போ பிண்டத்துக்கு என்ன பண்றது? ஒரு கூடைச் சோறு முழுங்குவியே!'' என்று, அவர்களிடையே இடைவெளி கண்டு இன்னொரு அறை

அறையப் போனார் அவர். அந்த அம்மாள் நகர்ந்து அவனை ஆட்கொண்டாள்.

"நீ நாசமாய்ப் போனே! உன்னைக் கட்டிண்டு அனுபவிக்கணும்னு பெருமாள் என் தலையிலே எழுதி யிருக்கார், பார்!" என்று சொல்லிக் கொண்டே அப்பால் நகர்ந்தார்.

அதற்குப் பிறகு அன்று சடகோபனின் சித்தி, வீட்டில் அடுப்பு மூட்ட வேண்டி யிருந்தது. சாதம் வடித்துச் சாத்தமுதம் பண்ண வேண்டி யிருந்தது. கோயில் கட்டளைச் சாதமும், விசேஷ நாட்களில் சுண்டல், புளியோதரை, வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், ததியன்னம் என்று அன்னக் குவியல்கள்





நிறையும் அவர்கள் வீட்டில்." அவனுடைய சித்தப்பா கோயிலில் இரண்டாம் தீர்த்தக்காரர். அவருக்கு விசேஷ மரியாதைகளும் இந்தக் கட்டளைகளும் உண்டு. பெரும்பாலும் தினம் கோயிலுக்குப் போகும்போது அவர் சடகோபனையும் அழைத்துப் போவார்.

அன்று அவருக்கு உடம்பு சரியில்லாததால் சடகோபனை மட்டும் அனுப்பிச் சாதங்களை வாங்கி வரச் சொல்லி யிருந்தார். எத்தனையோ நாட்கள் இந்தப் பணியைச் சரியாகச் செய்து முடித்திருக்கிறான் அவன். அன்றைக்கென்று கோபுர வாசலில் கூடியிருந்த பையன்கள் அவனிடம் வஞ்சம் தீர்த்துக் கொண்டு விட்டார்கள்.

சடகோபனை அவன் சித்தப்பா சுவீகாரம் எடுத்துக் கொண்டிருந்தார். அவனுடைய தகப்பனாரும் தாயாரும் இருந்தபோதே அவனுடைய பராமரிப்பைச் சித்தியா ஏற்றுக் கொண்டு விட்டதில் அவர்களுக்குப் பரம திருப்தி. உடல் வளர்ச்சி தவிர வேறு உணர்வுகளின் வளர்ச்சியற்ற மனிதப் பொம்மையாக விளங்கிய அவனைப் பற்றிய கவலையின்றி அவர்கள் பெருமாளின் திருவடிகளில் சேர்ந்து விட்டார்கள். தமது பரம்பரைப் பட்டத்துக்கு வாரிசாகத்தான் சடகோபனை அவன் சித்தப்பா சுவீகாரம் எடுத்துக் கொண்டார். சாப்பாட்டைக் கூட வலுக் கட்டாயமாகத் திணிக்க வேண்டிய நிலையில் 'வளர்ந்திருந்த' அந்தப் பட்டதாரியை மனிதனுக்க அவர் படாதபாடு பட வேண்டி யிருந்தது.

பத்து ஆண்டுகளில் எவ்வளவோ மாறுதல்கள் அங்கங்கே அடையாள மிட்டிருந்தன. சடகோபனைச் சூழ்ந்திருந்த பையன்களின் கூட்டம் கலைந்து, காற்றில் பல திசைகளிலும் பறக்கும் பஞ்சுத் திப்பிகள் போல் அவர்கள் பல இடங்களில் நிலை கொண்டு விட்டனர்.

ஊரை யொட்டி மௌனப் பள்ளி கொண்டிருந்த வீராணத்தேரியும், வடவாறும், கொள்ளிடமும் அப்படியேதான் இருந்தன. அவைகள் திசை மாறவில்லை. கோயில் கோபுரம் எடுத்து நிறுத்திய சித்திரம் போல் அப்படியேதான் நின்று கொண் டிருந்தது. புது வண்ணப்பூச்சைக் கண்டு பல ஆண்டுகள் ஆகி விட்டதில், வெல்வெட்டில் பச்சை ஒட்டுக்கள் போட்டாற் போல் அந்தக் கோபுரம் பழைமையை மௌனமாய் எதிரொலித்துக் கொண்டிருந்தது. சடகோபனும் இவைகளைப் போல் ஒரு மாறாத நிலை படைத்த மனிதப் பொம்மையாகத் தோற்றமளித்து, நடந்த பாட்டையிலேயே நடந்து, சுமந்த சோற்றுப் பாத்திரங்களையே சுமந்து கொண்டிருந்தான்.

கோயிலில் இராப் பத்து — பகல் பத்து உற்சவம் நடந்து கொண்டிருந்தது. திருவாய்மொழிக் கோஷ்டிக்குத் தலைமை கொண்டு செல்ல முடியாத நிலையில் சடகோபனின் சித்தப்பா வீட்டோடு இருந்தார். சடகோபனும் கோயிலுக்குள் செல்ல முடியாது.

இந்தப் பதினைந்து நாட்களாக உச்சி காலப் பூஜை முடிந்து சிச்சுதான் பிரஸாதங்களைக் கொணர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் சடகோபனின் சித்தியாவிடம் கேட்டார்: ''உடம்பிலே சர்க்கரை இருந்திருக்குன்னு சிதம்பரத்துக்கு அழைச்சிண்டு போய் யாராவது நல்ல டாக்டர்கிட்டே காண்பிச்சிருக்கலாமே? இப்படி அநியாயமா.....''

''டாக்டராவது, ஒண்ணுவது சிச்சு! அவனுக்குப் போட்டிருந்தது அவ்வளவுதான்; அவன்தான் அடிக்கடி சொல்லிண்டிருப்பானே தனக்கு இந்தத் தாது வருஷம் தாண்டாதுன்னு!''

''இந்தப் பிள்ளையாண்டானுக்காகவாவது அந்த அம்மாள் இன்னும் கொஞ்ச காலம் இருந்திருக்கலாம். இன்னும் நாலஞ்சு வருஷங்கள் போனாலும் அவன் புத்தியிலே தேறிக் கொண்டாலும் தேறிப்பான்!''

''தேர்றது எங்கே? இருபத்திரண்டு வயசுக் கடா! சித்தி போயிட்டாளேன்னு ஒரு பொட்டுத் தண்ணி சிந்தத் தெரியலே. அன்னிக்கு ஒரு ஓரமா உட்கார்ந்திண்டு கொடுக்காப்புளிப் பழம் தின்னுண்டிருக்கான்!''

வீட்டில் ஏற்கனவே களை கட்டியிராது; முற்றத்தில் காயும் வெயில்தான் வீட்டில் நிறைகிற அம்சம். சடகோபனின் சித்தப்பா வாசலில் சின்னத் திண்டில் சாய்ந்தபடி இருப்பார்; இருந்த வரை அவன் சித்தி தட்டியடைப்பில் இருள் தேங்கிக் கிடந்த கூடத்தில் அடைந்து கிடப்பாள்; சடகோபன் தெருக் கோடியில் இருந்த தோப்பில் பெரும்பாலும் பொழுதுபோக்குவான்.

இப்போது சித்தி இறந்து போன பிறகு வீட்டுக்குள் வெயிலும் காற்றும் இருளும்தான் இணை கூடி வாழத் தொடங்கின.

திண்ணைகளுக்கிடையில் நீண்டு விழுந்த நிழலைக் கண்டு தலை நிமிர்ந்தார் சடகோபனின் சித்தப்பா.

''வரது ஸ்வாமியா? ஏனணும்!'' என்று வந்தவரை அவர் வரவேற்றார்.

வரது அவர் மனைவியைப் பற்றி மெதுவாக விசாரித்தார்.

''பெருமாள் திருவுள்ளப்படி நடந்திருக்கு!'' என்றதோடு நிறுத்திக் கொண்டார் சடகோபனின் சித்தப்பா.

வெளியில் இருந்தபடியே உள்ளே எட்டிப் பார்த்து விட்டு வரது கூறினார்: ''சடகோபனுக்குன்னு ரொம்பக் கஷ்டமா யிருக்கும். அவனுக்குப் பார்த்துப் பார்த்து எல்லாம் செய்து கொண்டிருந்தாளே, ஸ்வாமி! சடகோபன் இல்லையா? வீடே வெறிச்சின்னு கிடக்கே!''

''அவனுக்குப் பூலோகம் சொர்க்கம் எல்லாம் ஒண்ணுதான். அவன் பங்கும் இப்போ என் தலையிலே விழுந்திருக்கு!''

வரது ஒரு நிமிஷம் யோசித்து விட்டுக் கூறினார்: ''பட்டண்ணு, நான் ஒரு காரியம் பண்ணறேன். என் பெண் எதிராஜத்தைக் கொஞ்ச நாளைக்கு இங்கே அனுப்பி வைக்கிறேன். ஒரு தளிகை பண்ண, வீட்டைப் பெருக்கி மெழுக..... ஏதோ வீட்டிலே சூனியம் அண்டாதபடி ஒரு மாத்தா இருக்கட்டும்'' என்றார்.

''எப்பவுமே உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசு, வரது! எதுக்கு இந்தச் சிரமமெல்லாம்?........''

ஆனால் வரது கேட்கவில்லை. நீண்ட காலப் பழக்கத்தின் அடையாளமாக இந்த மனித ஒத்துழைப்பை அளிப்பதில் அவருக்கு மனப்பூர்வமான விருப்பமிருந்தது. இதைச் சொல்லவே அவர் இங்கே வந்தார் என்பது பட்டண்ணுவுக்குத் தெரியாது.

எதிராஜமும் தினம் விடியற்காலையில் வந்து வாசலைச் சுத்தம் செய்வதில் தொடங்குவாள். இரவு இரண்டாம் காலப் பூஜை முடிந்து கோயில் பரிசாரகர் கட்டளைச் சாதம்கொண்டு வந்து தருகிறவரை இருந்து பட்டண்ணுவுக்கும் சடகோபனுக்கும் சாப்பாடு போட்டு விட்டுப் போவாள்.

அந்த வீட்டிலேயே பிறந்து வளர்ந்த பெண் போல் பழகிக் கொண்டு விட்டாள் எதிராஜம். முன்பு இல்லாத முறையில் இப்போது வீட்டில் கலகலப்பு கூடியது. காலையில் ஸ்நானம் செய்து விட்டு, ஈரம் படிந்த கேசம் நுனி முடி தெரியாமல் முதுகில் செல்லமாய்ப் படிய ஆண்டாள் பாசுரங்களைப் பாடிக் கொண்டே வேலைகளில் ஆழ்ந்திருப்பாள் எதிராஜம். அவள் பாடல்களுக்குப் பாத்திரங்களின் ஒலியே ஓர் இயல்பான ஏற்ற சுருதியாக அமையும்.

நடு நெற்றியில் ஸ்ரீ சூர்ணம் அணிந்து கொண்ட நிலையில் அவள் முகத் தோற்றம் ஒரு சிலையினுடையது போல் துல்லியமாகத் துலங்கும்.

சடகோபனுக்கு அவன் சித்தி செய்து கொண்டிருந்த உபசாரங்களை எதிராஜமும் அணுக் குறையாமல் மேற்கொண்டிருந்தாலும், அவைகளில் சிறுகச் சிறுக மாறுதலை ஏற்படுத்திக் கொண்டு வந்தாள் அவள். கிணற்றடியில் நின்று கொண்டு அவன் துணிகளைத் தோய்க்கச் சொல்லிக் கொடுத்தாள்.

அவன் சாப்பிட உட்கார்ந்தால், பரிமாறி விட்டு வெகு நேரம் கதவைப் பிடித்து நிற்பாள். அவனும் சாதத்தை உருட்டிக் கொண்டு விழித்துக் கொண்டிருப்பான்.

''இந்தா, ஏ, சடகோபா! இது என்ன பந்து உருட்டற கண்ருவி! உருண்டைக் கட்டி விழுங்கினது போதும். இனிமேல் குழம்பும் சாத்தமுதும்தான் தினமும் பண்ணப் போறேன். பிசைஞ்சு கொண்டு சாப்பிடத் தெரிஞ்சுக்கோ. இங்கே யார் உனக்கு வாயிலே 'லபக் லபக்'குனு விட்டெறிய முடியும்? சித்தியாவை இதுக்கெல்லாம் தொந்தரவு பண்ணக் கூடாது!'' என்பாள்.

கேட்டுக் கொண்டே வரும் பட்டண்ணு, ''பாத்துக்கோடா, மண்டூகம்! உன்னைவிட இரண்டு வயசு சின்னவள்; உனக்கு உபதேசம் பண்ணும்படியா யிருக்கு!'' என்று இடித்துச் சொல்வார்.

புதிய இடம் அவளுக்குப் புதிய திசையைக் காட்டியிருந்தது போலும் வாழ்க்கையில். எதிலும் ஓர் உற்சாகம் கொண்டு எப்போதும் முகம் மலரக் காணப்பட்டாள். திருமண் பெட்டியின் செருகுமூடியை இழுத்து அதன் மேல் பதித்திருக்கும் கண்ணாடியில் அவள் தன் முகத்தை அசைத்து அசைத்துப் பார்த்துக்

கொள்வாள். வறுமையில் முளைத்தெழுந்துள்ளதை உடைக் கோலம் காட்டினாலும், உடற்கோலம் செம்மையைப் பறைசாற்றியது. சிவந்த மேனியில்லை; அரசந் தளிர் போன்று பழுப்புச் சுடரும் உடல்; கொழு கொழுவென்ற வளர்ச்சி பருவ நிலைக்கு விவரம் கூற அமைந்தது போல் ஏற்பட்டிருந்தது. விளக்கேற்றியபின் வேலைகளினின்றும் ஓய்ந்த நிலையில் அவள் வாசல் கதவருகில் ஓரமாக நின்றிருப்பாள். அந்தி வேளையில் குன்றி வரும் வெளிச்சத்தில் அந்தத் தோற்றம் நெடுங் காலமாய் நிற்கும் ஒரு புராதனச் சிற்பம் போல் இருக்கும்.

அப்போதுதான் பட்டண்ணு சந்தி காலப் பூஜை முடிந்து கோயிலிலிருந்து திரும்புவார். அவருக்கு ஜபம் செய்யப் பஞ்சபாத்திரமும் தீர்த்தமும் எடுத்து வர உள்ளே விரைவாள் எதிராஜம்.

அன்று வெள்ளிக்கிழமை. வரது வெயிலையும் பொருட்படுத்தாமல் பட்டண்ணுவின் வீட்டை நோக்கி நடந்தார். வாசலில் திண்டில் சாய்ந்தபடி பிரபந்தம் வாசித்துக் கொண்டிருந்தார் பட்டண்ணு.

''ஸ்வாமி, சேவிக்கறேன்'' என்று படியேறி வந்தார் வரது, அங்கவஸ்திரத்தை முழங் கைகளில் சரிய விட்டுக் கொண்டு.

''வாருங்கோ'' என்று மலர்ச்சியுடன் வரவேற்றார் பட்டண்ணு.

''ஸ்வாமிகளிடத்திலே ஒரு சுப காரியம் பேச வந்தேன்.''

''தாராளமாய்ப் பேசுங்கோ. பெருமான் அருள் ஸாதிக்கட்டும்.''

''எனக்கும் வயசாயிடுத்து. எதிராஜத்துக்கு நான் பண்ண வேண்டிய கடமையைப் பண்ணி விடலாம்னு தீர்மானம்.''


''பண்ண வேண்டியதுதான்.''

''பத்திரம் விக்கறதிலும் எழுதறதிலும் நானும் குழந்தைகளும் அரை வயத்துக்குச் சாப்பிடறதே சிரமமாயிருக்கு. இந்த லட்சணத்தில் அவள் கலியாணத்துக்கு ஆயிரம் இரண்டாயிரம்னு எங்கேபோறது! சுவாமிகள் கிட்டே சரணம் அடையறதுன்னு தீர்மானம் பண்ணினேன். அதுவும் அன்னிக்குச் சடகோபன் அப்படிக் கருடாழ்வார் மறைவிலே அழுதுண்டிருந்ததைப் பார்த்ததும் இப்படி ஓர் எண்ணம்.......''

''நீங்களும் நன்னு யோசிச்சிண்டு முடிவு பண்ணுங்கோ.''

''நான் நூறு தடவை யோசிச்சப்புறம் தான் இன்னிக்கு வெள்ளிக்கிழமையும் அதுவுமா பிரஸ்தாபிக்கணும்னு வந்தேன். ஆறு மாசமா அவள் இங்கே விளக்கேற்றி வைச்சுண்டு இருக்கிறதை என் கண்ணுலே காணும்போதே இந்தப் பொருத்தம் பெருமாளால் விதிக்கப்பட்டிருக்குன்னு நினைச்சேன். உங்கள் சம்பந்தம் எனக்குக் கௌரவமாயுமிருக்கும். உங்க கஷ்டங்களும் விடியும் ; பையன் இன்னும் விருத்தியடைய வழியும் ஏற்படும்!''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது எதிராஜம் இரண்டு வெள்ளித் தம்ளர்களில் மோரும் ஒரு விசிறியும் கொண்டு வைத்து விட்டு உள்ளே போனாள். சில விநாடிகளாக



**பாட்டி:** எல்லாருக்கும் சொல்றேன். அடிக்கடி பழத்தையும், பாலையும் சாப்பிட்டுக் கொண்டு வாரத்திலே ஒரு நாளைக்கு என்மாதிரி உபவாசம் இருந்துக்குங்கோ.

**மற்றவர்:** ஆமாம்! சொச்ச வாரம் முழுதும் சாப்பிட வேண்டாம்.

நெற்றியை விரல்களால் நெருடிக் கொண்டு யோசித்தபடி இருந்த பட்டண்ணுவின் குரல் ஒரே சமயத்தில் எதிராஜத்தையும் வரதுவையும் நிமிர வைத்தது.

''எதற்கும் உங்க பெண்ணையும் கேட்டுக்குங்கோ. என் வயசில் பாதிதான் இருப்பாள் அவள். அவளுக்குச் சம்மதம் இருக்கணுமே!''

எதிராஜத்துக்குத் தன் உடல் திடீரென்று இரண்டாய் முறிந்து வளைவது போல் தோன்றியது. உள்ளத்தில் பஞ்சு பற்றிக் கொண்டாற்போல் எரிந்தது.

வரதுவும் இடியைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பதுபோல் உணர்ந்தார். வெளியில் எப்படிச் சொல்லுவது என்று தெரியாமல் நாவும் உள்ளமும் குழற, மனத்தில் சொல்லிச் சொல்லிப் பார்த்துக் கொண்டார்: 'உங்களைக் குறிச்சுப் பேச வில்லையே.....? சடகோபனை..... சடகோபனுக்கு......'

''சரி, பார்ப்போம்'' என்று எழுந்து நடந்தார் வரது.

சடகோபன் வீட்டுக்கு வருவது கிடையாது. கோயிலில்தான் குடியிருப்பு. பட்டண்ணு கோயிலுக்கு வந்து போகும் சமயங்கள் அவனுக்குத் தெரியும். அப்போதெல்லாம் அவன் மடப்பள்ளியிலோ நந்தவனத்திலோ போய் ஒளிந்து கொண்டு விடுவான்.

அன்று மாலை கூரத்தாழ்வானுடன் இருந்து கொண்டு அவன் வேலைகளில் உதவி வந்தான். கருட வாகனத்தின் படிச் சட்டத்தின் மேல் ஏறி நின்று கொண்டு கருடாழ்வாரின் மேல் கவசத்தைப் புளியும் எலுமிச்சைச் சாறும் கொண்டு துலக்கிப் பளபளப்பாக்குவதில் இருவரும் முனைந்திருந்தனர்.

கையில் தீபத்துக்கு எண்ணெயுடன் எதிராஜம் வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் அவனுக்குத் திக்கென்றது.

''சித்தியா என்னை ரொம்பக் கோவிச்சுகிறளா, எதிராஜம்?'' என்று கேட்டான் சடகோபன்.

''எனக்குத் தெரியாதே. இப்போ நான் உங்காத்துக்குப் போறதில்லே. மூணு மாச மாகப் போகவில்லே!'' என்றான் அவன்.

''அதுதான் நல்லது. போகாதே. எனக்கே சித்தியாவைப் பார்க்க என்னமோ போல் இருக்கு. அதுக்காகவே நான் வீட்டுக்குப் போறதில்லே.''

''வீட்டுக்கே போறதில்லேயா? உங்க சித்தியாவுக்கு உன்னே விட்டு விட்டு இருக்க முடியாதே. உனக்காகத்தானே அவர் ரொம் பக் கஷ்டப்பட்டார்!''

''அதெல்லாம் சும்மா எதிராஜம்! அவர் தமக்காகத்தான் கஷ்டப்பட்டுக் கொண்டார். எனக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு அவர் நினேச்சிண்டிருக்கார்......'' என்று கூறி விட்டு அவன் கூரத்தாழ்வானே ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து விட்டு, ''அன்னிக்கு உங்கப்பாகிட்டே 'ஒண்ணு' சொன்னரே, நான் உள்ளேயிருந்து கேட்டுண்டுதான் இருந்தேன். ரொம்ப மோசமில்லேயா?'' என்றான். எதிராஜத்தின் புருவங்கள் உயர்ந்தன. கண்கள் வியப்பால் அகன்றன.

''நீ கெட்டிக்காரனுப் போயிட்டாயே! நீ பிழைச்சுக்குவே!'' என்றாள் அவள்.

''அப்படியானு... அது உன்னுலேதான், எதிராஜம்! நீ எங்காத்துக்கு வந்ததிலே யிருந்தே எனக்கு எல்லாம் புது மாதிரியாகத் தோணித்து. இப்படி ஆகணும்னு ஆசைப் பட்டேன். பலிச்சுட்டுது! என்னேப் பார்த்ததா சித்தியாகிட்டே சொல்லிவிடாதே. இங்கேயும் எல்லார்கிட்டேயும் சொல்லி வச்சிருக்கேன்...''

''சரி'' என்று சிரித்துக் கொண்டே நகர்ந்தாள் அவள்.

சிறிது தூரம் போவதற்குள் அவளேத் தொடர்ந்து வந்தான் சடகோபன். ''எதிராஜம்'' என்று ரகசியமான குரலில் அவளே அழைத்தான்.

அவள் திரும்பிப் பார்த்தாள், சிறிதே மருண்ட கண்களுடன்.

''நீ சித்தியாவைக் கல்யாணம் பண்ணிக் காதே!'' என்றான் சடகோபன். ''சரி'' என்று உதட்டோரச் சிரிப்புடன் சொல்லிக்கொண்டு நடந்தாள் எதிராஜம்.

அவள் போவதையே வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பிய சடகோபனின் கண்களிலிருந்து இரண்டு பொட்டுக் கண்ணீர் உதிர்ந்தது.

**ம**கத் திருநாளன்று சுவாமியைக் கொள்ளிடக் கரைக்கு எழுந்தருளச் செய்தனர். நான்கு மைல்களும் சுவாமியைத் தூக்கிக் கொண்டு போகும் காட்சி சிலிர்ப்பை ஏற்படுத்தும். வழி நெடுகிலும் ஊர்களில் வாரைகளைச் சுமந்து வரும் ஆட்களின் கால்களிலும், மற்றவர்களின் கால்களிலும் வெயில் சூடு ஆறக் குடம் குடமாய்த் தண்ணீரை ஊற்றுவார்கள். பருகுவதற்குப் பானகம், நீர் மோர் கொடுப்பார்கள்.

கொள்ளிடத்தை நெருங்குவதற்கு முன்னால் ஓரிடத்தில் அசதி மேலிட்டுவிட்டதன் காரணமாக ஓர் ஆல மர நிழலில் அந்தக் கோஷ்டி நின்றது. வாரைகளை ஆயக் கோல்களில் இருத்திவிட்டுச் சிறிது ஓய்வெடுத்தனர் ஆட்கள்.

''உனக்கேனடா இந்தத் தலேயெழுத்து?'' என்றார் பட்டாச்சாரியார், சடகோபனேப் பார்த்து.

அவன் முன் பக்க வாரையில் இரண்டாவது ஆளாகத் தோள் கொடுத்துக்கொண்டிருந்தான்.

''அப்படிச் சொல்லாதீங்கோ மாமா. பெருமாள் எனக்குக் கண் திறந்து வழியையும் காண்பிச்சிட்டார். அவர் காட்டும் திசையிலே கிளம்பி யிருக்கேன். சும்மா போவானேன்னு பெருமாள் திருவடிகளைச் சுமந்துண்டு போறேன். சோறு தூக்கிக் காய்ச்சுப் போன தோள் பெருமாளேயும் சுமக்கட்டுமே!'' என்றான் சடகோபன்.

''பெருமாள் என்ன வழி காண்பிச்சிருக்கார்? நீ எங்கே போகப் போறே?''

''இப்போதைக்குக் கொள்ளிடக் கரை வரையிலே போறேன். அப்புறம் பெருமாள் என் மனசிலே புகுந்து எங்கெல்லாம் போகச் சொல்றாரோ அங்கெல்லாம் போவேன். இனிமேல் கொள்ளிடக் கரையைத் தாண்டி இந்தண்டை வரமாட்டேன்!''

சடகோபன் கண்கள் கூட ஒளிர்வதைக் கண்டு வியந்தார் பட்டாச்சாரியார்.

''கணிகண்ணன் போகின்றான்
காமரு பூங்கச்சி மணிவண்ணா!,...
..............''




தலைப்பைப் பார்த்து ஏமாற வேண்டாம். காதலையும் அதன் விளைவான சிரிப்பையும் தவிர படத்தில் வேறொன்றும் இல்லை. சித்ராலயாவின் இந்தப் படத்தில் ஒரு சௌகரியம். பல பாத்திரங்கள் வந்தும் கதை என்ற ஒன்றை உருவாக்கிக் கொள்ளாமலே முழு நீள ஹாஸ்யப் படம் ஒன்றைத் தயாரித்திருக்கின்றனர்!

ஒரே ஒரு ஊரில் மூன்று காதல் ஜோடிகள்—நான்கு தகப்பனர்கள் — காதல் ஜோடிகள் திருமணம் செய்து கொள்ளப் படும்பாடுதான் கதையாய் வளர்ந்திருக்கிறது.

வெகு நாட்களுக்குப் பிறகு வில்லன் டி. எஸ். பாலையாவை ஹாஸ்யப் பாத்திரத்தில் பார்க்கிறோம். அவரது பணத்தாசையும், அதற்காக அவர் பல்லைக் காட்டிப் பல விதங்களில் அபிநயம் பிடிப்பதையும் பார்க்கிறோம். அதையெல்லாம் பார்த்துவிட்டுத் தியேட்டரே சிரிப்பதையும் பார்க்கிறோம். நல்ல மெருகேறிய நடிப்பு.

படத்தின் எல்லாக் குறைகளையும் சரிக்கட்ட நாகேஷ் இருக்கிறார். அவரும் அவருடைய ·ஓஹோ புரொடக்ஷனும், அவர் அள்ளி வீசும் ஹாஸ்ய வெடிகளும், சுறு சுறுப்பான நடிப்பும் சிந்திக்க வைப்பதோடு, ரஸிக்க வைப்பதையும் பார்க்கிறோம். இதில் நாகேஷ் சகாப்தம் தொடங்கியிருக்கிறது.




மெல்லிசை மன்னர்களான விசுவநாதன் ராமமூர்த்தி இசை அமைத்துங்கூட ஒரு பாட்டுக்கூடக் கேட்கும்படியாக அமையவில்லை. அது போனால் போகட்டும் என்றால் பாடல்கள் நம்மை வேதனைப்படுத்தாமலாவது இருக்கக் கூடாதா?

முதலாளியின் பெண்களை வம்புக்கு இழுத்து விளையாடி அதன் காரணமாக வேலையிழந்த ஒருவன் அவர் வீட்டுக்கு அருகில் கூடாரம் போட்டுக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்வதும், அதன் மூலமாகவே காதலில் வெற்றி பெறுவதும் என்னவோ சுத்த அசட்டுத்தனம் தான். என்றாலும் புது நடிகர் ரவிசந்தருக்கு மேற்படி காட்சிகளில் ஆடிப் பாடிக் குதிக்கவும், குதித்த அலுப்புத் தீர மாடியிலிருந்து வாளி வாளியாகக் கொட்டப்படும் தண்ணீரில் குளித்துக் களிக்கவும் சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றனவே! ரவி சந்தர் இப்பொழுதுதான் வெள்ளித் திரையில் தலை காட்டுகிறார். முக பாவங்களையும் நடிப்பின் பக்குவங்களையும் பயின்று முன்னுக்கு வரவேண்டும்.

வண்ண மலராகக் காட்சி தரும் ராஜஸ்ரீ வண்ணப் படத்துக்கு எழில் ஊட்டுகிறார்.

அடுத்த புது நடிகை காஞ்சனா. நல்ல முக வெட்டு இருக்கிறது. அழகிய தோற்றமும் இருக்கிறது. இந்தப் படத்தில் காதல் களியாட்டத்தைத் தவிர அவருக்கு வேறு சந்தர்ப்பமே இல்லாததால் அவருக்கு உருகி நடிக்க நேரமில்லை!

தாடி, மீசையோடு மாறு வேடத்திலிருக்கும் முத்துராமனுக்கு இருக்கும் கவர்ச்சியும், நடிப்பும் சாதாரண முத்துராமனுக்கு இல்லையே! ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் செய்யும் கோடீசுவரன் எப்படியிருப்பார் என்பதை அவரது மாறு வேடத்தில் இருக்கும் துடுக்கும் மிடுக்கும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

பூவோடு சேர்ந்த நாராகக் குமாரி சச்சு விளங்குகிறார். 'ஓஹோ புரொடக்ஷன்ஸ்' அதிபரான செல்லப்பாவின் இஷ்டத்துக்கு ஆடி, கடைசியில் அவரையே தம் இஷ்டத்துக்கு இசைய வைக்கிறார். ஒரு கவர்ச்சி நடனமும் ஆடுகிறார்.

ஈஸ்ட்மன் கலரும், வெளிப்புறக் காட்சிகளும் மிகவும் நன்றாயிருக்கின்றன. கதையைப் பற்றிய கவலையை மறந்து, கொஞ்சம் அசடு வழியும் சம்பவங்களை மன்னித்து விட்டு, பாடல்கள் படுத்தும் பாட்டை உதறிவிட்டுப் படத்தை மட்டும் பார்த்து ரஸித்துச் சிரிக்க முடிந்தால் அவர்கள் பாக்கியசாலிகள்! எப்படியிருந்தாலும் ஸ்ரீதரின் துணிச்சலைப் பாராட்ட வேண்டியதுதான். வழக்கமான சம்பிரதாயத்தைத் தகர்த்து, பார்த்துச் சிரித்து மகிழவென்றே ஒரு படம் தயாரித்து வெளியிட்டிருக்கிறாரே!


— **காந்தன்**

# லேடி டாக்டர்கள் எதற்காக?

"அட, கல்யாணியா? வாருங்கள்!" என்று ஜானகி தன் வீட்டு ஹாலுக்குள் வந்த தன் சிநேகிதியை வரவேற்றாள்.

"அடடே, மரகதமா, வாருங்கள்!" என்று பின்னால் வந்தவளைப் பார்த்து முகமன் கூறினாள்.

பிறகு அவள் வாசற்பக்கம் எட்டிப் பார்த்த போது, "வேறொருத்தருமில்லை. நாங்கள் மூன்று பேர்கள் மட்டும்தான் வந்தோம்" என்று கல்யாணி தெரிவித்தாள்.




"நாங்கள் எங்களுக்குப் பரிச்சயமான அம்புஜத்தின் வீட்டின் கலியாணத்துக்குப் போகவில்லை. அங்கேயிருந்து வண்டியில் கிளம்பியபோது அது நடுவில் தகராறு செய்யவில்லை. நாங்கள் அதைப் பிடித்துத் தள்ளவுமில்லை. பிறகு இந்தப் பக்கம் உங்கள் வீடு இருக்கிறது ஞாபகத்துக்கு வந்ததும், இங்கே வரவில்லை" என்று பார்வதி நடந்த விஷயங்களைப் பற்றி வேடிக்கையாகத் தெரிவித்தாள்.

"கை எல்லாம் சிவந்து போச்சு" என்று மரகதம் தன் இரண்டு கைகளையும் சுட்டிக் காண்பித்தாள்.

"சர்க்கார் விடும் பஸ்ஸை நாம் தள்ள வேண்டி வரும் போது, தமது சொந்த வண்டியையே தள்ளினால் என்ன?", என்றாள் கல்யாணி.

"கற்பகத்தின் வீட்டு வண்டி எப்போதும் தகராறு செய்து கொண்டிருக்கும். டிரைவரும் கிடையாது. அதற்காக அவள் புருஷன் அவளை வண்டி தள்ள நன்றாகப் பழக்கியிருக்கிறார். தினமும் காலையில் அவள் புடவைத் தலைப்பை விரித்துக் கட்டிக் கொண்டு ஒரு பெரிய கல்லுரலைத் தள்ளிப் பயிற்சி செய்து வருகிறாள். பெரிய இரும்பு பீரோவையும் தள்ளப் பழக்கப்படுத்திக் கொள்கிறாள்" என்றாள் மரகதம்.

"இருக்கட்டும். அவளையே கேட்கிறேன்" என்று கல்யாணி பயமுறுத்தினாள்.



ஜானகி ஜமே விரித்துப் போட்ட ஒரு பாயில் எல்லாரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

"பேரன், பேத்தி எல்லாரும் சௌக்கியமா?" என்று ஜானகி பார்வதியை விசாரித்தாள்.

"சௌக்கியந்தான்!" என்றாள் பார்வதி.

"கல்யாணத்துக்கு அழைத்துக்கொண்டுவரவில்லையா?"

"கல்யாணங்களில் குழந்தைகள் ரொம்பவும் சிரமப்பட்டுப் போய் விடுகின்றன. நாம் அவற்றை அங்கே சரியாகக் கவனிக்கமுடிகிறதில்லை......" என்றாள் மரகதம்.

"சில பேர் நேரே அடுப்பங்கரைக்குப் போய்ப் பரிசாரகனை 'அண்ணா', 'மாமா' என்று தாஜா பண்ணிக் குழந்தைகளைச் சாப்பிடச் செய்வார்கள். அதெல்லாம் நமக்குப் பிடிக்கிறதா?" என்று பார்வதி கூறினாள்.

"இப்படிச் சாதம் போடுகிற சமயம் பார்த்துத்தான் தாலி கட்டுவார்கள்" என்றாள் மரகதம்.

"அநேகமாகக் குழந்தைகள் கல்யாண வீட்டுக்குப் போய்ச் சில நிமிஷங்களுக்கெல்லாம், 'அம்மா! வீட்டுக்குப் போகலாம், அம்மா போகலாம் வீட்டுக்கு.......' என்று முனக ஆரம்பித்து விடும்."

"அங்கே நமக்குக் கோபம் வந்தால் அதுகளை விரட்ட முடிகிறதில்லை. கோபித்துக் கொண்டால் ஒரேயடியாய் அழக் கிளம்பி விடும். அழைத்துக்கொண்டு போகிறதில் நமக்குத் தொந்தரவு, குழந்தைகளுக்கும் தொந்தரவு, கல்யாண வீட்டுக்காரர்களுக்கும் தொந்தரவு."

"நாம் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வரவில்லை என்று யாரும் ஏங்கிப் போய்விடமாட்டார்கள்."

"கூடிய வரை எடுத்த விசேஷங்களுக்கெல்லாம் குழந்தைகளை இழுத்துக் கொண்டு போகாதிருப்பது நல்லது. அழைத்துக் கொண்டு போய்ப் பழக்கப்படுத்தி விட்டால் பிறகு நாம் ஒரு நல்ல புடவையை எடுத்துக் கட்டிக் கொள்ள ஆரம்பிக்கும் போதே, 'அம்மா, நானும்' என்று ஆரம்பித்துவிடும். பள்ளிக்கூடம் போகிற ஆசை குறைந்துவிடும். கூடிய வரை நமது நெருங்கிய பந்துக்கள் வீட்டுக்கு அவைகளை அழைத்துக் கொண்டு போனால் போதும். அவற்றைப் பார்த்துக் கொள்ள வீட்டில் வேறு யாரும் இல்லாவிட்டால்தான் அழைத்துக்கொண்டு போகும்படியாயிருக்கும்" என்றாள் ஜானகி.

"பக்கத்து வீட்டு ராஜி தன் பிள்ளையை ஒரு கலியாணத்துக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டு வந்தாள். அடுத்த நாளே ஜுரம் வந்து விட்டது. இப்போது தேவலை" என்று மரகதம் சொன்னாள்.

"ஆமாம்! ஜுரத்தைப் பற்றிப் பயப்படவே வேண்டியதில்லையாமே!" என்றாள் பார்வதி.

"அது யார் சொன்னது?"

"வத்ஸலா தான்!" வத்ஸலா வைத்தியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள்.

"ஆகையினாலே ஜுரம் வரும் போது அதை 'வாருங்கள்' என்று வரவேற்கலாமா?" என்று மரகதம் கேட்டாள்.

"ஆமாம், ஜுரத்தை வரவேற்கத்தான் வேண்டும். ஜுரத்தைப் பற்றி நாம் சாதாரணமாக என்னென்னமோ எண்ணிக் கொண்டிருக்கிறோம். வத்ஸலா ஒரு நாள் என்னை உட்கார வைத்து ஒரு மணி நேரம் பிரசங்கம்




பண்ணினாள். அவளுக்குத் தான் படித்தது நன்றாக மனத்தில் பதிய வேண்டும் என்றால் இப்படித்தான் என்னைப் பிடித்துக் கொள்வாள். நான் பேசாமல் கேட்டுக் கொண்டிருப்பேன். அவள் என்ன சொல்கிறாள், தெரியுமா?'' என்று பார்வதி மீண்டும் ஆரம்பித்தாள்.

'சரி, அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை' என்று எண்ணியது போல் மற்ற மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பார்வதி சொன்னாள்:

''ஜுரம் என்கிறதைத் தமிழில் காய்ச்சல் என்று மிகவும் பொருத்தமாகச் சொல்கிறார்கள். ஜுரம் என்பது ஒரு வியாதி அல்ல. நாம் சாப்பிடுகிறோமே அதெல்லாம் உஷ்ணமாக மாறி விடுகிறது. அந்த உஷ்ணம் தசை நார்களில் சேர்ந்திருக்கிறது. நடமாடும் போது, வேலை செய்யும்போது அந்த உஷ்ணம் வெளியாகும். இப்படிச் செலவாகிற உஷ்ணம் மிகவும் குறைந்திருந்தால் உடம்பு சுடுகிறது. சரியானபடி சாப்பிட்டு, சரியானபடி வேலை செய்து உடம்பு சுடாமல் பார்த்துக் கொள்ளலாம். சில சமயம் உடம்பில் இரத்தத்தில் ஏதாவது விஷக் கிருமிகள் வந்து விடும். அப்போது அதைத் துரத்துவதற்காக உடம்பு உஷ்ணத்தைக் கிளப்பி விடும். உடனே இரத்தம் சூடேறி அதிலுள்ள வெள்ளை அணுக்கள் அந்தக் கிருமிகளைத் தாக்கும். மூன்று நாளைக்கு மேலும் தொடர்ந்திருந்தால் அப்புறந்தான் அந்த ஜுரத்தின் காரணமான வியாதி என்ன என்று நிர்ணயிக்க முடியுமாம். ஜுரம் வந்தால் உடம்பு, வியாதியை எதிர்த்துப் போராடுகிறது என்று அர்த்தம். ஜுரத்தை முரட்டுத்தனமாக ஆரம்பத்திலேயே அமுக்கி விட்டால் ஆபத்துத்தானும்.''

''என்றாலும் மூன்று நாட்கள் *100, 101* டிகிரி ஜுரத்தோடு குழந்தைகள் திணறிக் கொண்டிருந்தால் நம்மால் சும்மா இருக்க முடிகிறதா?'' என்றாள் ஜானகி.

''ஒரு வேடிக்கை பார்த்தீர்களா? இத்தனை லேடி டாக்டர்கள் இருக்கிறார்களே! அவர்கள் அநேகமாகப் பிரசவ வைத்தியம் பார்க்கிறார்கள். அதைத்தவிர மற்றெதிலும் சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை'' என்றாள் கல்யாணி.

''அதில்தான் பணம் வருகிறது.''

''லேடி டாக்டர்களாக இருக்கிறவர்கள் குழந்தைகள் வைத்தியத்திலும் அதிக சிரத்தை கொள்ள வேண்டும். அதில் அவர்கள் மிகவும் கெட்டிக்காரர்களாக இருக்க முயற்சி செய்ய வேண்டும். இல்லா விட்டால் பெண் வைத்தியர்கள் என்று இருக்க வேண்டிய அவசியமே யில்லை'' என்று கல்யாணி கூறினாள்.

''இத்தனை பெரிய சென்னைப் பட்டணத்தில் குழந்தை வைத்தியம் பார்க்கிற லேடி டாக்டர்கள் எண்ணி மூன்று நான்கு பேர்கள் கூடக் கிடையாது'' என்றாள் மரகதம்.

''என் பெண் இதையேதான் சொன்னாள். அவள் குழந்தைகளுக்கு வைத்தியம் செய்வதைப் பற்றித்தான் அதிகம் படித்து வருகிறாள். சொந்தத்தில் குழந்தைகள் வைத்தியத்துக்காக 'நர்ஸிங் ஹோம்' வைத்துக் கொடுக்கும்படி அப்பாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள்'' என்றாள் பார்வதி.

அப்பொழுது வாசலில் மோட்டார் வண்டி ஊதுகுழல் சத்தம் கேட்கவே, எல்லாரும் புறப்படத் தயாரானார்கள்.

## சில சரக்கு

✿ அடுப்பில் இருப்பதைக் கிளறும்போது தேவையான அளவுக்கு அது உஷ்ணமாகி விட்டதா என்பதை அறிந்து கொள்ளப் புது மாதிரி கரண்டி தயாரித்திருக்கிறார்களாம், அமெரிக்காவிலே. கரண்டியிலேயே தர்மாமீட்டர் இணைக்கப்பட்டிருக்கும். பாலையோ சாம்பாரையோ கிளறும் போதே எந்த அளவுக்கு அது சூடேறி யிருக்கிறது என்பதைக் கரண்டிக் காம்பு முனையில் உள்ள கருவி காட்டி விடும்!

✿ கத்தோலிக ஸ்பெயினிடமிருந்து பிராடெஸ்டண்ட் ஹாலந்து விடுதலை பெறச் சுமார் முந்நூற்றெண்பது வருஷங்களுக்கு முன்னால் கடுமையான யுத்தம் நடத்தினான் வில்லியம். இன்று ஹாலந்தின் அரசியாகத் திகழும் ஜுலியானா அவனுடைய வம்சாவளியில் தோன்றியவள்தான். ஹிட்லர் ஹாலந்தை ஆக்கிரமித்தபோது ஸ்பானிஷ் சர்வாதிகாரி பிராங்கோ அவனுடைய செய்கையை ஆதரித்ததால் ஸ்பெயின் மீது ஹாலந்து மக்களுக்கு என்றுமிருந்து வந்த வெறுப்பு பல மடங்காகப் பெருகியது. இப்படி யிருக்க ஹாலந்து இளவரசி ஐரீன் தன் அரச உரிமைகளைத் துறந்துவிட்டு, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இளவரசன் கார்லாஸ் என்பவரைத் திருமணம் புரிந்து கொள்ளப் போவதாக அறிவித்திருக்கிறாள். சுற்றி வளைத்துப் பார்த்தால் ஏதோ ஒரு விதத்தில் ஸ்பெயின் நாட்டின் அரியாசனத்தில் அமரும் உரிமை கார்லாஸ் குடும்பத்துக்கு உண்டாம்.

✿ சிக்கிம் நாட்டு அரசர் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஓர் அமெரிக்க அழகியை மகாராணியாக்கியது நினைவிருக்கும். இந்த மகாராணி ஹோப் நம்கயாலுக்கு பிப்ரவரி இருபதாம் தேதி கல்கத்தா நர்ஸிங்ஹோம் ஒன்றில் ஆண் குழந்தை பிறந்தது. ஹோப்புக்கு இதுமுதல் பிரசவம். நம்கயாலுக்கு இது நான்காவது குழந்தை. அவருடைய முதல் மனைவி இறந்து ஏழு வருஷங்களாகின்றன.

## ஐந்தாம் அத்தியாயம்

தியாகுவைச் சுசீலாவுக்கு அறிமுகம் செய்து வைத்த பிறகு யசோதை அவளிடம், ''இதோ பார், அப்பா மாடியில் இருக்கிறார். அவரிடம் தியாகுவை அழைத்துப் போ!'' என்றாள்.

''வேண்டாம், யசோதை! உன் மகளுக்கு என் மீது ரொம்ப ரொம்பக் கோபம். வழியிலேயே மடக்கித் திருப்பிவிடப் பார்த்தாள். இந்த மாமாதான் என்னை அழைத்து வரும் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டார். மாடிக்கு அழைத்துப் போகும் வழியிலே தகராறு வந்து விட்டால் இறங்கவும் முடியாது, ஏறவும் முடியாது. திரிசங்கு சொர்க்கம்தான்.'' தியாகு அங்கிருந்த விசுப்பலகையில் உட்கார்ந்து விட்டான்.

''சித்தி! என்னைப் பற்றி இங்கு ஒருவரும் விமரிசனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி விடு.'' சுசீலா வெகுண்டாள்.

விருந்தாளி வந்து விட்ட நேரத்தில் தாம் அங்கிருப்பது உசிதமாகப் படவில்லை, உமாபதிக்கு. ''சுசீலா! சித்திக்கு உறவுக்காரர் வந்திருக்கும்போது இப்படிப் படபடப்பாகப் பேசுவது நல்லதில்லையம்மா! சரி, நான் இப்பொழுது போய்விட்டு நாளை வருகிறேன்'' என்று கூறிய உமாபதி அங்கிருந்து கிளம்பினார்.

''சுசீலா! அப்பாவைக் கூப்பிட்டு மாமா வந்திருப்பதாகச் சொல்லேன். மாமா கிளம்பி விட்டாரே!''

''வேண்டாம். நான் நாளை வருகிறேன்.'' உமாபதி தெருக்கோடிக்குச் சென்று விட்டார்.

''சித்தி! அவரை மாடிக்குப் போகச் சொல்லேன். அப்பாவைப் பார்த்து நீதான் அறிமுகம் செய்து வையேன்!''

''வேண்டாம், நீயே போ!''

''நான் எதற்குப் போகணும்? உனக்குத்தானே அவர் உறவு? நீயே அவரை அழைத்துப் போ.....''

''நீதானே இந்த வீட்டு மகள்? எல்லாம் பார்த்துச் செய்ய வேண்டியவள். நீயே அழைத்துப் போ.''

தியாகுவுக்கு ஒன்றும் புரியவில்லை. மாடிக்குப் போய் ஒருவரிடம் அறிமுகம் செய்து வைக்க ஏன் இவ்வளவு தடுமாற்றம்? யசோதையை அவள் கணவர் தூக்கி வைத்துக் கொள்பவர் என்று சுசீலா சுட்டிக் காட்டுகிறாளா, அல்லது மகள் காரணமாகத் தனக்கு மதிப்பில்லை என்று யசோதை காட்டுகிறாளா? அல்லது இருவருமே பரஸ்பர மதிப்புக் கொடுத்து இவ்விதம் கூறுகிறார்களா?

அவர்கள் பேச்சிலிருந்து அவனால் ஒன்றும் ஊகிக்க முடியவில்லை.

இதற்குள் மாடிப் படியில் காலடிச் சத்தம் கேட்டது. ராஜூவே இறங்கி வந்து கொண்டிருந்தார். தியாகு

# நீரோட்டம்



அவரை ஏற இறங்க ஒரு முறை நோக்கினான். யசோதையின் கணவர் அவராகத்தான் இருக்க வேண்டும். பாதகமில்லை. அதிக கிழவராகக் காணப்படவில்லை. வயது நாற்பத்தைந்துக்குள் தான் இருக்கும். நரைகூட அதிகம் விழவில்லை.

''வணக்கம் ஸார்!'' தியாகு எழுந்து நின்று அவருக்குக் கரம் குவித்து வணக்கம் செய்தான்.

''சுசீலா! அப்பாவிடம் சொல்லம்மா. இவன்தான் என் அத்தை மகன் தியாகராஜன். கல்கத்தாவில் வேலையாக இருக்கிறான்'' என்று யசோதை கூறினாள்.

தியாகு வியப்புடன் அவளை நோக்கினான். நேரிடையாகத் தானே கூறுவதற்குக் கணவரிடம் இவளுக்கு என்ன பயம்?

''அப்பா, இப்பொழுதுதான் இவரை மாடிக்குப் போகச் சொல்லிக் கொண்டிருந்தோம். அதற்குள் நீங்களே வந்துவிட்டீர்கள்......''

''உங்கள் வீட்டைத் தேடிக் கண்டுபிடிப்பதே சற்றுக் கஷ்டமாகத்தான் ஸார் இருந்தது. மாமா எழுதியிருந்த கடிதத்தை ஊரிலேயே விட்டுவிட்டேன். வீட்டு நம்பர் மறந்து விட்டது. வழியில் உங்கள் குடும்ப விவரத்தைக் கூறி வீட்டைக் கேட்டாலே சண்டைக்கு வந்துவிடுகிறார்கள்....'' விஷமச் சிரிப்பு கொப்புளிக்க, கண்கள் சுசீலாவின் மீது படியத் தியாகு கூறிய போது, சுசீலாவின் முகம் சினம் படரச் சிவந்தது.

''அப்பா! குடும்ப விவரம் நன்றாக நினைவிருப்பவருக்கு வீட்டு நம்பர்மட்டும் நினைவிருக்காதா?''

''அதெப்படி முடியும்? என் பெயர் எனக்கு நினைவிருக்கிறது. உங்கள் பெயர் நினைவுக்கு வர முடியுமா? யசோதை, மாமா பெண் என்பதால் அவள் குடும்பத்தைப் பற்றி மாமா எழுதியபடி, நினைவு இருக்கிறது. ஆனால் அவள் புகுந்த வீட்டு நம்பர் நினைவுக்கு எப்படி வரும்......? என்ன யசோதை, நான் சொல்வது.........'' தியாகு திரும்பி நோக்கினான். யசோதை அங்கிருக்கவில்லை. அவள் எப்பொழுதோ அடுக்களைக்குச் சென்று விட்டாள்.

''சுசீலா! அப்பாவைச் சாப்பிடக் கூப்பிடம்மா. தியாகுவையும் சாப்பிட அழைத்து வரச்சொல்.'' குரல் சமையலறையிலிருந்து வந்தது.

''அப்பா! சாப்பிட வாருங்கள்'' என்று கூறிய சுசீலா, ஒருகணம் தியாகுவை ஏறிட்டு நோக்கினாள். பிறகு தலை குனிந்தபடி, ''அப்பா, அவரையும் சாப்பிட அழைத்து வாருங்கள்'' என்றாள்.

''சாப்பிடலாம், வாப்பா'' என்று ஒரே வார்த்தையில் உபசாரத்தை முடித்துக் கொண்டு சமையற்கட்டுக்குச் சென்றார் ராஜு. தியாகு தன் உடைகளை யெல்லாம் மாற்றிக் கொண்டு சாப்பிடச் சென்றான்.

ராஜு மௌனமாகச் சாப்பிட்டார். தியாகுவினால் வெகு நேரம்வரை மௌனமாக இருக்க முடியவில்லை. ''தெற்குப் பக்கத்தை மறந்து நான் கல்கத்தாவுக்குப் போய் வெகு நாட்களாகி விட்டன. இப்பொழுதுதான் நிரந்தரமாக ஓர் இடத்தில் வேலையாக இருக்கிறேன். லீவ் எடுத்துக் கொண்டு வருவதாக மாமாவுக்கு எழுதினேன். யசோதை சென்னையில் இருக்கிறாள், போய்ப் பார்த்துவிட்டு வா என்று மாமாதான் எழுதியிருந்தார்.....கல்கத்தாவிலிருந்து என் நண்பன் ஒருவனும் கும்பகோணத்துக்குப் பிரயாணமாக வந்தான். அவனுக்கு இரவுதான் ரயில். அவனுக்குக் காவலாக இவ்வளவு நேரம் சென்டிரலில் உட்கார்ந்து கிடந்தேன்......''



எஸ்.ரங்கநாயகி

எல்லாவற்றுக்கும் 'உம்' கொட்டி விட்டுச் சாப்பிடுவதில் முனைந்தார் ராஜு. யசோதையும் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. சுசீலாவுக்குத்தான் சங்கடமாக இருந்தது. கலகலவென்று பேசும் ஒரு விருந்தாளியிடம் ஏன்தான் இருவரும் இப்படி மௌனம் சாதிக்கிறார்களோ! வழியில் தான் நினைத்ததுபோல் 'அப்பாவைப் புண்படுத்தும் எண்ணத்துடன் தியாகு வந்திருக்க வில்லை' என்று அவன் பேச்சிலிருந்து புரிந்தது அவளுக்கு. இந்த அப்பாவுக்கு மரியாதை ஏன் மறந்துவிட்டது? முன்பு அம்மாவின் பிறந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் யாராவது வந்தால் கலகலப்பாகப் பேசிய அப்பா ஏன் இப்பொழுது இப்படி மௌனம் சாதிக்கிறார்? சித்திதானாகட்டும், அவன் அவளுடைய வீட்டைச் சேர்ந்தவன் தானே? அவன் வேலையைப் பற்றியோ அவனைப் பற்றியோ விசாரித்துப் பேசுவதற்கென்ன? அப்பாவின் எதிரில் இவள் ஏன் இப்படி அடங்கி ஒடுங்கி நடந்து கொள்ள வேண்டும்...? வேறு வழியில்லை... கடைசியில் தான்தான் பேச வேண்டும் என்பதற்காகக் கல்கத்தாவைப் பற்றி ஏதேதோ கேட்டாள்.

சுசீலாவும் யசோதையும் சாப்பிட்டு விட்டு அடுக்களையிலிருந்து வெளியே வந்து பார்த்தபோது ராஜு மாடிக்குப் போய்விட்டிருந்தார். தியாகு தினசரியைக் கையில் வைத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

''யசோதை! இங்கு சமீபத்தில் ஏதாவது ஹோட்டல் நல்லதாக இருக்குமா? இரவு தங்கவேண்டும்'' என்றான் தியாகு.

''சித்தி! இந்த வீட்டில் முள்ளுச் செடி ஒன்றும் போட்டிருப்பதாகத் தெரியவில்லையே! விருந்தாளிகள் தங்க இந்த வீடு போதுமானது என்று சொல்லு!'' என்று சுசீலா இடைமறித்துக் கூறினாள்.

''அப்பப்பா! இந்தக் காலத்துப் பெண்களையே நம்பக் கூடாது. முன்னே பார்த்தால்...''

''....குதிரை, பின்னே பார்த்தால் கழுதை என்று சொல்ல வருகிறீர்களாக்கும். எப்படியானாலும் என்ன? இரண்டுமே நன்றியுள்ள பிராணிகள் தான். அந்த நன்றி எனக்குக் கொஞ்சம் உண்டு. இந்த வீட்டில் நீங்கள் எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் தங்கலாம்'' என்று கூறிய சுசீலா, தந்தைக்குப் பால் கொடுத்துவிட்டு வர மாடிக்கு விரைந்தாள்.

''தியாகு! சுசீலா நல்ல பெண். இரவு இங்கு தங்குவதற்கு யோசனை செய்ய வேண்டாம். நானும் சுசீலாவும் வழக்கம்போல் கீழே படுத்துக்கொள்கிறோம். மாடியில் அவர் தனியாகத் தான் படுத்துக் கொள்கிறார். நீ அவருடனேயே படுத்துக் கொள்ளலாம்'' என்று யசோதை தியாகுவிடம் கூறினாள்.

வியப்புடன் அவளை நோக்கினான் தியாகு. ''யசோதை, அப்படியானால்?''

''விளக்கம் தேவையில்லை. நான் இருக்கும் நிலையில் சந்தோஷமாக இருக்கிறேன்'' என்றாள் யசோதை.

''சந்தோஷமாக இருக்கப் பழகிக் கொள்கிறாய், அவ்வளவுதான்....... யசோதை! மாமா அவசரப்பட்டு விட்டார்....''

''ஐந்தாறு வருடங்களுக்கு முன் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டவனை நம்பி அப்பா எவ்வளவு நாட்கள் தான் காத்திருக்க முடியும்? நடுவில் ஏதோ ஒன்றிரண்டு கடிதங்கள் உன்னிடமிருந்து வந்தன. அவ்வளவுதான்.''

''வேலை காயம் ஆகும் வரை நான் என்ன செய்ய முடியும் யசோதை? வேலை நல்லதாகத்தான் கிடைத்தது. ஆனால் அது காயம் ஆன பிறகே மாமாவைத் தேடிப் போவதென்று நினைத்தேன். திட்டப்படி எல்லாம் முடிந்த பிறகு மாமாவுக்கு யசோதையைப் 'பார்க்க' எப்போது வரலாம் என்று கேட்டு எழுதியிருந்தேன். அதற்குத் தான் மாமா உனக்கு விவாகமாகி நீ இந்தப் பட்டினக்கரையில் இருப்பதாகவும், உன்னைப் பார்த்துவிட்டு வரும்படியும் எழுதி யிருந்தார். உன் விவாகப் பத்திரிகையைக் கூட மாமா அனுப்பாமல் விட்டது ஆச்சரியம் தான்...'' வார்த்தைகளில் துயரக் கலப்படம் காணப்பட்டது.

''பத்திரிகை அச்சடித்தால் தான் கல்யாணமா? ஏதோ நான்கு பேருக்கு நடுவில் கழுத்தில் மாங்கல்யத்தை ஏற்றுக்கொண்டேன்; வந்துவிட்டேன்.... சுசீலாவுக்கும் ஆதரவு வேண்டியது அவசியம்தானே!''

''இருந்தாலும் உன் கணவர் உன்னிடம் இன்னும் சற்றுச் சரளமாகப் பழகலாம் என்று என் எண்ணம்...''

''வயதுப் பெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டு புது மணப்பெண்ணாக நான் சுகம் கொண்டாடுவது நன்றாக இருக்காது தியாகு.''

''யசோதை! நான் உன் நிலையை மறக்கவே முடியாது... ஆனாலும் என் மனத்தைத் தளர விடவும் நான் விரும்பவில்லை. கடந்ததை மறந்து, எதிரேதான் நோக்குவேன். அப்பொழுதுதான் உன்னிடம் களங்கமில்லாமல் பழக முடியும்....''


பாம்பீச் 52 6.95
பாம்பீச் 28 8.95
பாம்பீச் 10 7.25
பாம்பீச் 12 9.95
பாம்பீச் 13 6.95
இதோ...பாடா பாம்பீச்
காலணிகளில் சுகம் காத்திருக்
கிறது. காரணம், மிக நவீன
செய்முறைப்படி தயாரிக்கப்பட்ட
வை. ஆணிகள் அற்ற அடிப்பாகங்
கள் உங்களுக்கு புத்துணர்ச்சி அளி
க்கும். தவிர, பதமான தோல்களில்
பளபளப்பான உருவ அமைப்பு;
காலில் நன்கு பொருந்துகின்ற
உணர்ச்சி. அவற்றை அணிந்து நடக்க
நடக்க பிரியத்தை அதிகமாக்கும்!
Bata
PALMBEACH

''அது தான் புத்திசாலித்தனம், தியாகு. என்னைப் போலவே நீயும் வாழ முயற்சி செய்!''

மாடியிலிருந்து சுசீலா இறங்கி வந்து விட்டாள். ''சித்தி! அவரை மாடியில் போய்ப் படுத்துக் கொள்ளச் சொல்!'' என்றான்.

''சித்தம் தேவுடா!'' கை கூப்பி வணக்க முறையில் வேடிக்கையாகக் கூறிவிட்டுத் தியாகு பெட்டியிலிருந்து ஜமக்காளத்தையும், சிறு தலையணையையும் எடுத்துக் கொண்டு மாடிக்கு விரைந்தான்.

சுசீலா மாடிப்படியின் அறையிலேயே நின்று கொண்டு அவன் செல்லும் அழகைப் பார்த்துக் கொண்டு நின்றாள். பிறகு மேலிருந்து ஏதேனும் சத்தம் வருகிறதா எனக் கவனித்தாள். ஏதோ கொஞ்சம் பேச்சுக் குரல் கேட்டது. அந்தப் பேச்சிலும் தியாகுவின் குரல்தான் ஓங்கி நின்றது.

என்ன அப்பாவோ இது! இந்த அப்பாவுக்கு ஆனாலும் இவ்வளவு பிடிவாதமும் வன்மமும் வேண்டாம். மாடியில் பாலை வைத்துவிட்டு வரும் போது அவள் எவ்வளவு படித்துப் படித்துச் சொன்னாள்! கடைசியில், '' அப்பா ! கண்டிப்பாகச் சொல்லி விட்டேன். யசோதையும் நானும் ஒரே பருவத்தினர். எனக்காக அவள் வாழ்வைப் பாழடித்து விட்டீர்கள். அவள் குடும்பத்தாரையும் நீங்கள் அலட்சியம் செய்தால் எனக்குக் கெட்ட கோபம் வரும்....'' என்று காரசாரமாகக் கூறிவிட்டுக் கீழே இறங்கி விட்டாள் சுசீலா.

தன் வார்த்தைக்கு அப்பா மதிப்பு வைக்கிறாரா என்பதைத்தான் அவள் ஊன்றிக் கவனித்தாள். ஏதோ ஒப்புக்கு இரண்டு வார்த்தைகள் பேசி விட்டு நிறுத்தி விட்டார் ராஜு.

சுசீலா பல்லைக் கடித்துவிட்டுப் படுத்தாள். யசோதையும் படுத்தாள். ஆனால் அவளுக்கு எளிதில் தூக்கம் வரவில்லை. கால ஏட்டைப் பின் தள்ளிக் கொண்டே சென்றது மனம். இள வயதிலேயே தந்தையைப் பறிகொடுத்துத் தியாகு தாயின் துணையில் படித்ததும், அவன் படிப்பு முடிவதும் தாய் இறப்பதும் ஒன்றாக நேர்ந்தபோது அவன் வீட்டிலே மாமாவிடம் கூடச் சொல்லாமல் ஓடி விட்டதும், இரு வருடங்களுக்குப் பிறகு கல்கத்தாவில் வேலைக்கு அமர்ந்திருப்பதாகக் கடிதம் வந்ததும்.... இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு நிகழ்ச்சி பளிச்சென்று அவள் நினைவில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. மகள் யசோதையுடைய பெட்டியையும் படுக்கையையும் தந்தை கொண்டு வந்து வாசலில் வைக்கிறார். வயதானதோடுகூட வாழ்க்கைத் துன்பங்களை அனுபவித்து அனுபவித்து உறுதிகுலைந்து ஒடிந்து விழுவது போன்ற உடல்நிலை அவருக்கு. மகளுக்குக் கல்யாணமானதில் சற்றுத் தெம்பு பெற்றிருக்க வேண்டும் அவர்; ஆனால் அதிகம் சோர்வடைந்தவராகவே காணப்படுகிறார். இதற்குள் மாப்பிள்ளை வண்டியில் ஏறிவிடுகிறார். பின்தங்கித் தயங்கி நின்ற பெண்ணை, மாப்பிள்ளை தம்மைப் பார்த்துவிட முடியாது என்பதை நிச்சயப்படுத்திக் கொண்ட பிறகு, அவர் நெருங்குகிறார். ''போய்விட்டு வரேனப்பா!'' என்று கூறி நமஸ்கரித்து எழுந்திருக்கிறாள் யசோதை. அவர் கண்களில் நீர்முட்டி வெடித்துச் சிதறுகிறது.

''அம்மா, யசோதை! இந்தக் கையாலாகாத கிழவனை மன்னித்து விடு!''

## ஆஸ்வால்டின் அம்மா —


ஃ 'என் மகனுடைய துணிகரச் செயல் காரணமாகத்தான் இன்று நீங்கள் அமெரிக்க ஜனாதிபதி பதவியை வகிக்கிறீர்கள் என்பதை மறக்க வேண்டாம்' என்று ஜான்ஸனுக்கு அறிவுறுத்துகிறாள்!

ஃ ரூபியினால் கொல்லப்பட்டுத் தன் மகன் இறந்ததற்கு வருத்தம் தெரிவித்து ஜாக்குலேன் கென்னடி தனக்கு அனுதாபக் கடிதம் எழுதவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கிறாள்! 'அவளுக்கு அவள் கணவனிடத்தில் எத்தனை அன்போ அத்தனை அன்பு எனக்கு என் மகனிடத்தில் உண்டு' என்று கட்டிக் காட்டுகிறாள்.



ஃ தன்னுடையதும் தன் மகனுடையதுமான வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதித் தரப் பிரசுரகர்த்தர்களிடமிருந்து டாலர் 25,000 முதல் 50,000 வரை முன் பணமாக எதிர்பார்க்கிறாள்!

ஃ தன் மகன் நிரபராதி என்று வாதாடி அவன் நல்ல பெயரைக் காப்பாற்ற ஜகஜ்ஜாலப் புரட்டு செய்து வருகிறாள். 'அவன் அமெரிக்காவின் மத்திய துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவன்; உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாததால் என் மகன் மீது வீண் பழி சுமத்தி அமெரிக்கப் போலீஸ் தன் மானம் கப்பலேறாமல் பாதுகாத்துக் கொள்கிறது' என்பது அவள் கூறும் கதை ! ●●●




டாக்டர்: மார்பில் உங்களுக்கு எந்த இடத்தில் வலிக்கிறது என்று கரெக்டா காட்டுங்க!

பச்சை குத்திக் கொண்டவர்: இதோ இந்த என்ஜின் அறைக்கும் குளிக்கும் அறைக்கும் நடுவில்தான் வலி!

---

''அப்பா என்ன இது? சந்தோஷமாக எனக்கு விடை கொடுத்து அனுப்புங்கள், அப்பா! நானும் சந்தோஷமாகத்தான் வாழப் போகிறேன். இது சத்தியம்! நீங்கள் கொஞ்சம்கூட வருத்தப்படா தீர்கள்!'' என்கிறாள் யசோதை..... 'ஆனால் அப்பாவிடம் அன்று உறுதி கூறியதுபோல் இன்று நான் சந்தோஷமாகத்தான் வாழ்கிறேனா?' இன்னும் எவ்வளவோ நினைவுகள்....மனம் மூடா தது காரணமாகக் கண்களும் மூட மறுக்கவே, யசோதை விடி விளக்கின் வெளிச்சத்தில் கீதையைப் புரட்டினாள்.

தியாகு வந்து பத்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன. சுசீலாவுக்கு வீட்டில் கலகலப்பு உணர்ச்சியும், புதிய தென்பும் ஏற்பட்டன. தியாகுவும், அவர்களுடன் ஒன்றாகக் கலந்து பழகினான். சுசீலாவைச் சீண்டி விட்டு வேடிக்கை பார்ப்பதில் அவனுக்கு உற்சாகம். தியாகுவுக்குச் சுடச்சுடப் பதில் தருவதில் அவளுக்கு ஆனந்தம். யசோதை இருவருடைய விளையாட்டிலும் பேச்சிலும் பங்கெடுப்பாள். சுசீலா எதிரே இருந்தால் ராஜு ஒப்புக்காக ஓரிரண்டு வார்த்தைகள் தியாகுவுடன் பேசுவார். பிறகு மாடிக்குச் சென்றுவிடுவார். இல்லாவிடில் ஆபீசில் பாதி நேரத்தைக் கழித்துவிடுவார்.

அன்றைய தினம் சுசீலாவும் தியாகுவும் செஸ் விளையாடிக் கொண்டிருந்தனர். ராஜு வெளியே சென்றிருந்தார். திடீரென்று அப்பொழுதுதான் சுசீலாவுக்கு நினைவு வந்தது —

''சித்தி! எங்க காலேஜில் இன்று பழைய மாணவிகள் கொண்டாட்டம். நான் மறந்து விட்டேன்... நான் போகிறேன். நீ என் காய்களை அப்படியே வைத்துக் கொண்டு விளையாட்டை முடித்து விடு'' என்று கூறிய சுசீலா வேறு உடை மாற்றிக்கொள்ள உள்ளே சென்றாள்.

கருத்த நீலத்தில் புடவை உடுத்தி, செந்தாழை நிறத்தில் பிளௌஸ் அணிந்து கழுத்தில் முத்து ஹாரம் இழைய அவள் அவர்களிடம் விடை பெற்றபோது வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தபடி அமர்ந்து கிடந்தான் தியாகு. தன் இரு மை தீட்டிய நயனங்களை அவன் மீது ஓட விட்டுத் தலை குனிந்த சுசீலா, ''நான் போய் வருகிறேன், சித்தி'' என்று கூறிக் கிளம்பி விட்டாள். ''தியாகு! ஆட்டத்தைக் கவனி!'' யசோதை நினைவுபடுத்திய பிறகுதான் தன் தலையைத் திருப்பினான் தியாகு.

சுசீலா வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது உமாபதியின் தாயார் பாலம் அவளைச் சந்தித்தாள்.

''சுகமா?'' என்று மரியாதைக்காகக் கேட்ட சுசீலா பிறகு அவளிடம் ஏன் பேச்சுக் கொடுத்தோம் என்று வருத்தப்பட்டாள்.

''சுகத்துக்கு என்னம்மா குறைச்சல்? நல்லாத்தான் இருக்கேன். உன்னை நெனச்சால்தான் மனசு தவிச்சுப் போறது. சித்த முந்தி உன் வீட்டுக்குத்தான் உன்னைப் பார்த்துவிட்டு வரலாம்னு போயிருந்தேன்...''

''ரொம்ப சந்தோஷம். நான் காலேஜுக்குப் போயிருந்தேன்!''

''உன்னை அனுப்பிவிட்டு அங்கே ஒரே கொம்மாளம் நடக்குது. ஒரு பெரியவனைக் கல்யாணம் செய்துக்கிட்டு இளையாளா வந்தால்தான் என்னவாம், அதுக்காக இப்படியா நடந்துப்பாங்க? யாரோ ஒரு பிள்ளை வந்திருக்கு. அதுக்குச் சரியா சிரிச்சுக் கொம்மாளம் போட்டுக்கிட்டு...சுசீலா! இதெல்லாம் நல்லதுக்குக் காலமில்லே.. ஆமாம்.....''

முன்போலவே சுசீலாவுக்கு இப்பொழுதும் அவளை அறைந்துவிட வேண்டும் என்று ஆத்திரமாகத்தான் இருந்தது. ஆனால் வயதுக்கு மரியாதை கொடுக்க வேண்டியிருந்தது. ''இது போல் ஒருவரும் பேசத் தேவையில்லை. வந்திருப்பவர் சித்தியின் அத்தை பிள்ளை தான். கெட்ட கண்களோடு அவரைப் பார்க்காதீர்கள்'' என்று கூறியவள் விடுவிடென்று தன் வழியே நடந்து சென்று வீட்டை அடைந்தாள். **(தொடரும்)**

"திருநெல்விக் காவலுக்கு மாற்றலாகிப் போன ஸ்டேஷன்மாஸ்டரைப் பற்றி அன்றைக்குச் சொன்னேன். இல்லையா?" என்று ஆரம்பித்தார் ராகவாச்சாரியார்.

"சூரிய நாராயணன் என்று பெயர்கூடச் சொன்னீர்களே?" என்றேன் நான். அவர் கூறும் சுவையான செய்திகளைக் கேட்பதற்கு நான்தான் எப்போதும் தயாராயிற்றே !

"ஆமாம், அவர்தான். திருநெல்விக் காவலுக்கு அவர் போய்ச் சேர்ந்த ஒரு மாதத்துக்கெல்லாம், அருணாசலம் என்று ஒருவர் உதவி ஸ்டேஷன்மாஸ்டராக வந்து சேர்ந்தார்..."

"ஊம்?"


அவர் தொடர்ந்தார்:

"அருணாசலம், சூரிய நாராயணனுக்குக் கீழ் வேலை பார்க்கும் உதவி ஸ்டேஷன் மாஸ்டராக வந்து சேர்ந்தாலும், உண்மையில், 'ஸீனியர்' அவர்தான். அடுத்த வருஷம் ஓய்வுபெற வேண்டியவர். உயர்ந்த சம்பளத்தில், பெரிய சந்திப்பு நிலையத்தில் உதவி ஸ்டேஷன் மாஸ்டராகப் பணியாற்றியவர். நாளைக்கோ, நாளன்றைக்கோ 'டிராபிக் — இன்ஸ்பெக்டராக'ப் பதவி உயர்வு பெற வேண்டியவர். அவருடைய துரதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். நல்ல காலமாகத் தவிர்க்கப்பட்டு விட்ட ஒரு விபத்துக்குக் காரணமாக இருந்தார் என்ற காரணம் காட்டி, இரண்டாண்டு காலத்துக்கு அவரை ஜூனியராகப் போட்டு விட்டது, நிர்வாகம். அதன் காரணமாகவேதான் அவர் ஏ. எஸ். எம். ஆகத் திருநெல்விக் காவலுக்கு வந்து சேர்ந்தார்.

அருணாசலம், இந்தப் பதவிக் குறைப்பை ஒரு பெரிய விஷயமாகக் கருதவில்லை. அவருடைய திறமையின்மையினால் தான் அந்தத் தண்டனையை ஏற்க நேரிட்டது என்றும் சொல்ல முடியாது. அது ஸ்டேஷன்மாஸ்டர் உத்தியோகத்தின் தலைவிதி! விதியின் மடியில் அகப்படாமல் தப்புகிறவர்கள் அபூர்வம்!

ஆனால் ஸ்ரீமதி அருணாசலம் அப்படிக் கருதவில்லை! அலுவலில் தற்செயலாக நேர்ந்து விட்ட சிறு தவற்றை, வேண்டுமென்றே பெரியதாக்கி, 'இவரைத் தொலைத்து விட்டுத்தான் மறு காரியம்' என்று சங்கற்பித்துக் கொண்டு, மேலதிகாரிகள், ஒரு படி குறைவான பதவிக்குத் தன் கணவரைத் தள்ளி விட்டதாக நிச்சயம் செய்து கொண்டாள் ஸ்ரீமதி மங்களம் அருணாசலம்!

விபத்து டிரைவர் ஒருவரால் தவிர்க்கப்பட்டு விட்டது என்றாலும், நிகழ்ந்திருந்தால், விளைவு எண்ணிப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்திருக்கும் என்று அதிகாரிகள் எண்ணினார்கள். அப்படி எண்ணிய அதிகாரிகளின் கடந்த மூன்று தலைமுறையினரையும் எதிர்கால மூன்று தலைமுறையினரையும், தன் கைகளை நொடித்தும் நெரித்தும் சபித்துத் தீர்த்தாள் மங்களம். அதன் பின்னும் அவள் ஆத்திரம் தீரவில்லை. எனவே ரயில்வே போர்டு அங்கத்தினர் ஒவ்வொருவராக எண்ணிப் பார்த்து மலை மலையாகச் சாபத்தை வழங்கினாள். இவ்வளவு ஆன பின்னரும், அவள் மனத்திலிருந்த சாப 'ஸ்டாக்' தீர்ந்து போகவில்லை!




அன்று காலையில் விழித்ததும் யார் முகத்தில் விழித்தானோ, தெரியவில்லை; தவிர்க்காரி பொன்னம்மா வசமாகச் சிக்கிக் கொண்டாள், சாபத்தைக் கட்டிக் கொண்டு போக!

கிராமத்தின் முக்கிய ரஸ்தாவிலிருந்து ஸ்டேஷனுக்குச் செல்லும் கிளைப் பாதையின் முதலில் இருந்த வீடு, அருணாசலத்தின் 'குவார்ட்டர்ஸ்'. அதைத் தாண்டிக்கொண்டு தான் தலைமை ஸ்டேஷன் மாஸ்டர் வீட்

டுக்குச் செல்ல வேண்டும். தினமும், முதல் வீட்டின் முன்புறத்தில் மங்களத்தின் குழந்தைகள் உட்கார்ந்து கொண்டு, பொன்னம்மா தூரத்தில் வரும் போதே பார்த்து விட்டு, உட்புறம் அஞ்சல் செய்யும். பாத்திரமும் கையுமாக மங்களம் வெளியே வந்து நிற்பாள். பொன்னம்மா கூடையை இறக்கி வைத்துத் தயிரைக் கொடுத்து விட்டே அடுத்த வீட்டுக்குச் செல்வாள்.

குறிப்பிட்ட நாளன்று அப்படி நடக்கவில்லை. மங்களத்தின் குழந்தைகள் வாய்க்காலுக்கு அப்பாலிருந்த நாவல் மரத்தின் மேல் காதல் மீதூரப்பெற்றவர்களாய், அங்கே ஓடிப் போய் விட்டார்கள். பொன்னம்மா, எவ்வித விசேஷ காரணமுமின்றி, முதல் வீட்டைத் தாண்டிப் போனாள். அவள் அப்படிப் போனது குற்றமில்லை என்றே வைத்துக் கொள்ளலாம். ஆனால் மங்களத்தின் வீட்டுக்கு வந்ததும், 'இன்னைக்குப் பெரிய ஐயா ஊட்டுக்கு மொதல்லே தயிர் ஊத்திட்டேன்' என்று பொன்னம்மா சொன்னது மன்னிக்க முடியாத குற்றமில்லையா ?

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் வந்ததே கோபம், மங்களத்துக்கு. விசுக் விசுக்கென்று பாத்திரத்தை நகர்த்தினள்; குபுக்கென்று எழுந்து நின்றாள்; படபடவென்று வார்த்தைகளை வீசினாள். ''என்னடி சொன்னே? 'பெரிய ஐயா' வீடா அது? எங்க வீட்டுக்காரரும் பெரிய பெரிய வேலை யெல்லாம் பார்த்தவர் தான். ஒன்பது வருஷங்கள் பிரதம ஸ்டேஷன் மாஸ்டராக இருந்திருக்கார். ஏ. எஸ். எம்.மும் பாயிண்ட்ஸ்மேனும் கதிகலங்கிண்டு இருப்பா.... யாரோ பண்ணின பாவம் எங்களை இங்கே கொண்டுவந்து தள்ளிப்பிட்டா.''

''ஏம்மா, இப்ப நான் என்ன சொல்லிப் புட்டேன்னு கூச்சல் போடறீங்க?''

''ஆ ஹா!..... நீயாடி பேசுகிறே ? உன்னை 'அவள்'னு பேசச் சொல்கிறாள்?''

''யாரு அம்மா?''

''கேட்க மாட்டாயோடி பின்னே? அதான், உங்க பெரிய ஐயாவோட சம்சாரம்! இந்தப் பத்து நாளுக்குள்ளேயே நான் ஆளை எடை போட்டுட்டேன்னேன்! என்ன ராங்கி!.... என்ன கமுக்கம்!.... இரண்டு வார்த்தை அதிகப்படியாகப் பேசினால் கௌரவம் குறைந்து போயிடும்னு நினைத்துக் கொள்ளுகிறது! எனக்குத் தெரியாதுன்னு நினைச்சுக் கொண்டே? அவள்தான் உனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கா, 'எங்க வீட்டுக்காரர்தான் இந்த ஸ்டேஷனுக்குப் பெரியவர். முதல்லே எங்க வீட்டுக்குத்தான் தயிரைக் கொடுக்க வேணும்'னு.....''

சூரிய நாராயணனின் மனைவி பார்வதம், பலத்த குரல் கேட்டதும் தன் வீட்டிலிருந்தபடியே அடுத்த வீட்டை எட்டிப் பார்த்தாள். சொல்லம்புகள் தன்னையே குறியாகக் கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டதும் அவள் திடுக்கிட்டாள். 'அடப் பாவமே! இந்த அம்மாளுக்கு ஏன் புத்தி இப்படிப் போகிறது? நான் சும்மா யிருந்தாலும் வலுச் சண்டைக்கு இழுப்பாள் போலிருக்கே?.... ஏறக் குறையப் பத்து வருஷங்கள் மூத்தவராக இருக்கிறார். மரியாதை கொடுத்தால், காப்பாற்றிக் கொள்ளத் தெரியவில்லையே!.....'

'யம்மோவ்' என்ற குரல் பார்வதத்தின் கவனத்தைக் கவர்ந்தது.

ஸ்வீப்பர் போர்ட்டர் முத்துவின் பெண் சாதி ரோசா நின்று கொண்டிருந்தாள்.

''என்னடி?''

''உங்களைத்தாம்மா சண்டைபடி பேசறாங்க. கேட்டுக்கிட்டு நிக்கிறீங்களே? பளிச்சுப் பளிச்சின்னு பதில் சொல்ல வேணும்?''

''சகதியிலே யாராவது கல்எறிவாங்களா?''

''இல்லாகாட்டி, ஐயாகிட்டே சொல்லுங்க...''

''போடி! இந்த விவகாரம் பெரியவங்க வரை போகப்படாது'' என்றாள் பார்வதம், மெல்ல நகைத்தபடியே.

ரோசா முணுமுணுத்துக்கொண்டே நகர்ந்தாள். ''இந்த அம்மா மாதிரி பொறுமைசாலியை இந்த டேஸன்லே பார்த்ததில்லே!''

அன்றைய தினம் போர்க்கொடி உயர்த்திய மங்களம் அதை என்றைக்குமே இறக்க விரும்பவில்லை போல் தோன்றியது. பார்வதம் எப்போதாவது பேச வரும்போது முகத்தைத் திருப்பிக் கொள்வது இருக்கட்டும், தன் வீட்டுச் சந்துரு, பேபி, துரை மூவரும் 'பெரிய ஐயா' வீட்டுக் குழந்தைகள் மணி, பங்கஜத்துடன் உறவாடுவதற்கும் தடை விதித்து விட்டாள். அவர்கள் பள்ளிக்கூடம் போகும் போது தனித்தனியே புறப்படுவார்கள். ரஸ்தாவின் முதல் திருப்பத்தைக் கடந்ததும், அம்மாளின் கண்ணில் படாது என்று நிச்சயமானதும், அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கொள்வார்கள். தப்பித் தவறி மங்களத்தின் கண்களில் பட்டு விட்டாலோ, அன்று முதுகைத் தனியே கழற்றி வைத்து விட வேண்டியதுதான்!

''சுந்து கடிதாசி போட்டிருக்கான்'' என்றபடியே உள்ளே நுழைந்தார், அருணாசலம். இதைக் கேட்டதும் மங்களத்தின் முகம் உண்மையிலேயே மங்களமாக விகசித்தது.

''என்ன எழுதியிருக்கான் குழந்தை?'' கரைத்துக் கொண்டிருந்த புளியை அப்படியே வைத்துவிட்டு, கையைக் கழுவிப் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டே வெளியே வந்தாள் மங்களம்.

''அடுத்த சனிக்கிழமை அங்கே புறப்படுகிறானாம். ஒரு மாசம் லீவாம்...''


''பேஷ்! ஒரு மாசம் லீவா!...'' இந்தப் பதிலுக்கும் தன்னுடைய அடுத்த கேள்விக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று தன்னையே ஏமாற்றிக் கொண்டு உணர்ச்சித் துடிப்பை மறைக்க முயன்று, பரிதாபகரமான பொய்க் குரலில் கேட்டாள். ''நடேசன் இன்னும் ஜாதகம் அனுப்பவில்லையே?''

உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, ஸ்டேஷனை நோக்கி நடந்தார் அருணாசலம். 'பெண்ணைப் பெற்றவனுக்குக் கவலை இருக்கணும். அக்காள் பிள்ளை என்றால், கிணற்று நீரா? வைகாசி பிறந்தாச்சு. பயல், ஒரு கடிதம் போட வேண்டாம்? எனக்கென்ன வந்தது?... எந்தப் பெண்ணுக்கு அதிருஷ்டமோ?' இந்த எண்ணம் அவருக்கு!

மங்களம் அப்படி வாளாவிருக்க முடியுமா? சகோதரன் நடேசனிடம் வெறும் பாசம் மட்டுமில்லை; நிறைய இரக்கம் கூட உண்டு மங்களத்தம்மாளுக்கு. சம்பிரதாயத்துக்காக

ஒரு கடிதம் எழுதிக் கல்யாணப் பேச்சைத் தொடங்கக் கூடாதா அவன் என்ற ஆதங்கமும் சேர்ந்து கொண்டது.

அவள் 'குழந்தை' என்று குறிப்பிட்ட சந்து என்கிற சுந்தரேசனுக்கு வயது இருபத்து நான்கு. ஐந்து அடி ஆறங்குலம் உயரம், நூற்று இருபத்தெட்டு பவுண்டு; மாநிறத்தை விட நல்ல நிறம்; அமெரிக்கன்க்ராப்பு; மூக்குக் கண்ணாடி உண்டு. பங்களூரில் கணக்குத் தணிக்கையாளர் ஸ்தாபனம் ஒன்றில் முந்நூறு ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். இந்தக் 'குழந்தை' ஹோட்டலில் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்கிறதே என்று தாயார் வருந்துவது இயல்புதானே?



"அப்பப்பா! ஓயாமல் மணியடிச்சுச் சத்தம் போடாதே. நான் வரேன், வரேன்! என்று தான் கத்தறேனே! காதில் விழலில்லையா?"

"நான்தான் மணியடிச்சுண்டே இருக்கேனே எப்படியம்மா காதில் விழும்?"

அன்று சூரிய நாராயணன் வீடு கலகலப்பாய்க் களை கட்டினாற் போலிருந்தது. மங்களத்துக்கு அடிக்கடி இலேசாகக் கேட்ட சிரிப்பொலி வேறு அவள் வெறுப்புத் தீயில் அரைச் சேர் நெய்யை ஊற்றிக் கொண்டிருந்தது.

காரணத்தை அறிய மனம் தவித்துக் கொண்டிருக்கையில் பாயிண்ட்ஸ்மேன் பராங்குசத்தின் மனைவி, மேய்ச்சலுக்கு மாட்டை ஓட்டிப் போனாள்.

"ஏ பச்சை! இங்கே வாடி..."

அவள் வந்தாள். "என்னம்மா?"

"ஒண்ணுமில்லேடி..... சும்மாதான். ரெண்டு நாளா உன்னைக் கண்ணிலே காணவில்லையே என்றுதான் கூப்பிட்டேன்!...... இப்படி வந்து உட்காரேன்..."

பச்சை உட்கார்ந்ததும், "என்னடி பக்கத்து வீட்டிலே ஒரே சத்தமாய் இருக்கு, ஏதாவது விசேஷமா?" என்று கேட்டாள் மெல்லிய குரலில்.

"அட, ஒங்களுக்குத் தெரியாதா அம்மா? அந்த அம்மாவோட பெரிய பொண்ணும்— பட்டணத்திலே அவுங்க அக்கா வீட்டிலே படிச்சிட்டிருந்ததாம் — வந்திருக்கு."

"அப்படியா?"

"பார்க்க ராசாத்தி மாதிரி இருக்குதுங்க!.. எவ்வளவு ஆசையாப் பழகுது! இப்பத்தானே மொத மொதல்லே என்னைப் பாக்குது; பத்து வருஷமாப் பழகினாப்பலே ஒட்டுதலா பேசிச்சுதுங்க..."

மங்களத்தின் நெஞ்சு புரண்டு கொடுத்தது.

"சரி. மாடு எங்கேயோ போயிட்டுதே..."

பச்சையை அனுப்பி வைத்தாள். ஆனால், மனத்தின் தவிப்பு அழிந்து விடுகிறதா?

வீட்டில் வேலை ஓடவில்லை. எந்த வேலையைச் செய்தாலும், அந்த 'ராசாத்தி'யின் நினைவே மேலெழும்பி நின்றது. 'பார்வதத்துக்கு இந்த வயதில் ஒரு பெண் இருக்கிறாளா? தங்கையின் பெண்ணை அக்காள் படிக்க வைத்திருக்கிறாள் போலிருக்கிறது?'

அருணாசலம் அலுவல் முடிந்து வீட்டுக்குள் வந்தார். கையில் அரை டஜன் சாத்துக்குடி இருந்தது.

"ஏது?"

"சூரியோட பெரிய பெண் காலை வண்டியிலே வந்தாள். 'அவள் கொணர்ந்தது' என்று கூறிச் சூரி கொடுத்தான்...."

"கல்யாணம் ஆனவளா?"

"இல்லே! போன வருஷம் எஸ். எஸ். எஸ். ஸி. பாஸ் பண்ணினாளாம். பெரியப்பா வீட்டில் இருந்து கொண்டு சங்கீதம் கற்றுக் கொண்டாளாம்..."

சங்கீதம் என்றதும் அவளையு மறியாமல் மங்களத்தின் நெஞ்சம் குதூகலித்தது. அந்த அம்மாளுக்குப் பாட்டு என்றால் — குரலிசையானாலும் வாத்திய இசையானாலும் உயிர். இன்றைக்கும் கல்யாணங்களுக்குப் போனால் நலுங்கு பாடும்படி அவள் நச்சரிக்கப்பட்டு விடுவாள்.

"அது சரி...... பார்வதம் மாதிரியே வாய்மூடி மௌனியாக இருக்கிறாளோ?"

"இவள் கலகலப்பாகப் பழகுவாள் போலிருக்கிறது. கண்ணுக்கும் அழகாய் இருக்கிறாள். வயலின் பெட்டியை எடுத்துக் கொண்டு அவள் நடந்து சென்ற அழகு ஒன்று போதுமே!"

தோளைக் குலுக்கினாள் மங்களம்.

மாலை ஆறு மணி. சூரியநாராயணன் வீட்டிலிருந்து நழுவிய வயலின் இசை பக்கத்துக் குவார்ட்டர்ஸிலும் புகுந்து விளையாடியது. மங்களத்துக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. இத்தனை நாட்களாக இல்லாமல், இப்போது தானாக அந்த வீட்டுக்குப் போவதா? 'இது என்ன அதிசயம்!.... பொழுது விடிந்தால் என் பிள்ளையும்தான் வரப் போகிறான். அழகாய், படித்தவளாய், சங்கீதம் தெரிந்த பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறேன். ஹூக்கும்!'

உட்புறம் சென்று கீழும் மேலுமாய் நாலு தடவை நடந்தாள். பம்பரம் விளையாடி விட்டு நுழைந்த சந்துருவின் முதுகில் இரண்டு போட்டாள். 'புத்தகத்தை வச்சிண்டு கொஞ்ச நேரம் அழேன்! எப்ப பார்த்தாலும் என்ன விளையாட்டு?' என்று அநாவசியமாய் அதட்டினாள்.

பொறுமை அடங்கவில்லை.

சிறிய அலுமினியக் கிண்ணத்தில் எண்ணெயை எடுத்துக் கொண்டு வாசலை நோக்கி நடந்தாள். ஸ்டேஷனுக்கு மேற்கே பர்

லாங் தூரத்தில் ஒரு சிவன் கோவில் இருந்தது. 'சந்துரு, அஞ்சு நிமிஷத்திலே வந்துடறேன்' என்று குரல் கொடுத்து விட்டுப் படி இறங்குகையில் —

''மாமி!...''

அவன்தான்!

முன்னறிவிப்பு இல்லாமல் தன் முன் செந்திருவே தோன்றியிருக்கிறாளோ?

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? பர்வதத்தின் பெண். இன்றைக்குத்தான் வந்தேன் — மெட்ராஸிலிருந்து...நானும் கோவிலுக்கு வரட்டுமா?''

''பேஷாய்!''

ஒரு மணி சென்றுதான் அவர்கள் திரும்பினார்கள். வீட்டுக்குள் வந்ததும் மங்களம் நீண்டதாய் ஒரு பெருமூச்சு விட்டாள். ஆமாம், அது ஒரு தவிப்பு!

**சு**ந்து வந்து சேர்ந்த ஏழெட்டு நாட்களுக்குப் பின்னர்தான் நடேசனிடமிருந்து கடிதம் வந்தது. தன் பெண்ணுக்கு இரண்டொரு மாதங்களில் திருமணம் செய்ய விருப்புவதாகவும், சுந்தரேசனுக்கு வேறு எங்கும் நிச்சயமாகியிராவிட்டால் அவன் ஜாதகத்தை அனுப்பி வைக்கும்படியும் எழுதியிருந்தார்.

அருணாசலம் உணவருந்திக் கொண்டிருந்த சமயத்திலும் மங்களம் அதைப் பற்றிப் பேசவில்லை. கையைக் கழுவிக் கொண்டு வந்த பின் அதற்கு மேலும் காத்திருக்க முடியாமல், ''உன் தம்பிக்கு என்ன எழுதுவது?'' என்று கேட்டார் அருணாசலம்.

''...நடேசனே அரை மனசாய் எழுதின மாதிரி படுகிறது. உறவு விட்டுப் போக வேண்டாமே என்று பார்த்தேன். அந்தப் பெண்ணுக்குப் பிராப்தமில்லை.''

ஸ்டேஷனிலிருந்து 'டிங் டிங்' என்று மணியோசை கேட்டது.

''திருவாரூர் வண்டி அவுட்டாகி விட்டது. நான் போயிட்டு வரேன்.''

''....கொஞ்சம் இப்படி வாருங்கள்!''

''என்ன மங்களம்?''

''வாசல்லே நின்று கத்த வேண்டாம்.''

அவர் வந்தார்.

''மாலதியின் அப்பா உங்களிடம் ஜாதகம் கேட்கவில்லையா?''

''சூரியா?.... நாலைந்து நாட்களுக்கு முன்பு ஒரு தடவை இது விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தான்'' என்றவர், தொடர்ந்து, ''உனக்குத்தான் அந்தக் குடும்பத்தைக் கண்டாலே ஆகவில்லை. இந்த ஊருக்கு வந்த பத்து நாளைக்கெல்லாம் பகைத்துக் கொண்டு விட்டே. அந்தக் குழந்தைகள் உன்னை என்ன செய்தன? உள்ளே வரவிட்டாயா?...இல்லை, கேட்கிறேன். அவன் எப்படி வாயைத் திறந்து 'ஜாதகம் கொடுங்கோ' என்று கேட்பான்?'' என்று பொரிந்து தள்ளினார்.

மங்களத்தின் கண்களில் நீர் ததும்பியது.

''நானே பத்து நாட்களாக வேதனைப் பட்டுக்கொண்டிருக்கேன்... அது சரி, நான் தான் ஜடம் அப்படிப் பேசிவிட்டேன். இரண்டு நாட்கள் கழித்தாவது பர்வதம் வந்து என்னிடம் பேசியிருக்கக் கூடாதா?... 'உங்க வீட்டுப் பிள்ளைக்கு எங்க மாலதியைப் பண்ணிக்குங்கோ' என்று கேட்டால் முத்தா உதிர்ந்து போகும்? அந்தப் பெண்ணைப் போய் யாராவது வேண்டாமென்று சொல்வார்களா?''

தொடர் வண்டி ஸ்டேஷனுக்குள் நுழையும் சத்தம் கேட்கவே அருணாசலம் விரைவாக வெளியேறினார்.

**ரா**கவாச்சாரி நிறுத்தினார்.

''அப்புறம்?'' என்றேன்.

''மறு நாள் அருணாசலம் வீட்டிலிருக்கும் நேரம் பார்த்து, பர்வதமும் சூரிய நாராயணனும் போனார்கள்.''

''பேஷ், பேஷ்!... மங்களத்தம்மாளின் குரல், முதல் நாள் அவள் பேசிய பேச்சு அவர்கள் காதில் விழுந்திருக்கும்! எனவே..''

''அப்படியில்லை. பக்கத்து வீடு என்றாலும் ஒட்டினாற் போலில்லை. இருபது அடிக்கு அப்பால்தான் இருந்தது.''

''ஓஹோ? அப்படியானால்...?''

''வாசலில் பத்திரிகை படிப்பதாகப் பாவனை பண்ணிக் கொண்டிருந்தானே...''

''சுந்து?''

''...உம்!.. அவன்தான் போய்ச் சொன்னான்...!''

''யாரிடம்?''

''மாலதியிடம்!...''

''எப்போது?....''

''அதற்கு ஏழெட்டு நாட்களுக்கு முன்பிருந்து. தினந்தோறும் வழக்கமாய்ச் சாயங்காலத்தில் சந்தித்த சிவன் கோவிலில்...''

''ஸார், ஸார்...''

''இன்னொரு ஆச்சரியம் தெரியுமோ? மங்களத்தின் நீண்ட பார்வையில் இந்தச் சந்திப்புகள் படாமல் போகவில்லை. தினமும் மாலையில் விபூதியைப் பூசிக் கொண்டு 'கோயிலுக்குப் போயிட்டு வரேன்' என்று சுந்து சொன்னதற்குக் காரணம், திடீரென்று தோன்றிய பக்தி அல்ல என்பதை அந்தத் தாயுள்ளம் புரிந்து கொண்டு விட்டது. அதனால்தான் அவன் வீட்டில் இருக்கும் நேரம் பார்த்து அப்படிப் பேசினான்!''

''கடைசியில் கல்யாணம் நிச்சயமாகி விட்டதென்று சொல்லுங்கோ...''

''அது மட்டுமா? ஒரு நாள் அருணாசலம் வீட்டில் இருக்கையில் சூரிய நாராயணன் உற்சாகத்தோடு வந்தார். 'ஸார், உங்கள் தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்திருந்தீர்களே? அதற்குப் பதில் வந்திருக்கிறது, ஆபீஸிலிருந்து!' என்றார். அருணாசலம் பரபரப்புடன் அவர் கொடுத்த கடிதத்தை வாங்கிப் படித்தார்.


''தண்டனையை எதிர்த்து நீர் கூறியுள்ள வாதங்களை மிகவும் கவனத்துடன் பரிசீலித்ததன் விளைவாக நீர் இதுவரை அனுபவித்த தண்டனையே போதும் என்றும், பழையபடி 'ஸீனியராக' உம்மை உயர்த்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் உமக்கு மாற்றல் உத்தரவு அனுப்பப்படும்...''

மங்களத்துக்கு வாயெல்லாம் பல்! ''எல்லாம் மாலதியோட அதிருஷ்டம்!...உங்களைத்தானே? அவரை உள்ளே வந்து உட்காரச் சொல்லுங்களேன். சம்பந்தி நின்று கொண்டே இருக்கிறாரே?'' என்றாள்.

சுந்து தனக்குள் நகைத்துக் கொண்டான்.

## அமில அஜீரணம் நெஞ்செரிச்சல், வயிற்றுக் கோளாறு இவைகளிலிருந்து

# அதிசீக்கிரமான சமனம் பெற




# பிலிப்ஸ்

## தொடக்கத்தி லிருந்தேயுள்ள

## மில்க் ஆப் மக்னீஷியா

# டேப்லெட்டுகள்

IPB/MOH/T 64.TA.

4 எண்ணம் கொண்ட பாக்கெட்டுக்கு 20 ந.பை.

பிலிப்ஸ் டேப்லெட்டுகள், உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷ்யா கொண்டதும் குடும்பத்தில் எல்லோருக்கும் சவுகரியமாகவும் சீக்கிரமாகவும் சமனம் தரவும் ஏற்றது.

அமில அஜீரணம் உண்டாகும்போது சில பிலிப்ஸ் டேப்லெட்டுகளை வாயில் போட்டு மென்று சாப்பிடவும். அவை நெஞ்செரிச்சலையும் வாயுவினால் ஏற்படும் வயிறு உப்புதலையும் தணிக்கிறது. மேலும் வயிற்றை சரிப்படுத்தி சுவாஸத்தில் உண்டாகும் துர்கந்தத்தையும் அகற்றுகிறது

குடும்பத்தில் எல்லோருக்கும் உபயோகத்திற்காக 75, 150 டேப்லெட்டுகள் கொண்ட பாட்டில்களில் கிடைக்கும் இன்றே பரிசோதித்துப் பாருங்கள்.

## இப்பொழுது


அதிக பாது
காப்பிற்காக
அலுமினியம் போயில்
பாக்கெட்டுகளில்
கிடைக்கும்,

உபயோகத்திற்காக ரஜிஸ்தர் செய்து தயாரிப்பவர்கள்
**டேங்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யு) பிரைவேட் லிட்.,**

# லண்டனில் ஒரு மூர்மார்க்கெட்

ஜூன் ஜூலை மாதங்களில் சென்னை மூர் மார்க்கெட்டை ஒட்டி மேற்குப் பகுதியில் உள்ள மைதானத்தில் மாலை வேளைகளில் போகிறவர்கள் அங்கு ஏதோ மாணவர் மகாநாடோ, சம்மேளனமோ நடக்கிறது என்று நினைத்துக் கொள்ளும் அளவுக்குச் சிறுவர்கள் தலைகள் அங்கு காணப்படும். அந்தக் கூட்டத்தில் புகுந்து கவனித்தால் அங்கு பழைய புஸ்தக வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு மாணவனும் தன் படித்த வருடப் புத்தகங்களைக் கொண்டு வந்து மேஜை பரப்பிக் கொண்டு உட்கார்ந்து விடுவான். அவைகளை விற்றுத் தனக்கு வேண்டிய இந்த வருடப் புத்தகங்களை வாங்க வேண்டுமே! பழைய புத்தகங்களை வாங்க விரும்பும் மாணவர்களும், பெற்றோர்களும் குழுமியிருப்பார்கள்.

ஏறத்தாழ இந்த ரீதியில் ஆரம்பமானது தான் உலகத்திலேயே இன்று பெரிய பழைய புதிய புத்தகக் கடை என்று பெயர் பெற்று விளங்கும் ஃபாயில் ஸ்தாபனம் (W. C. Foyle Ltd.) நாற்பது லட்சங்களுக்கு மேலான புத்தகங்களைக் கொண்ட இந்த ஸ்தாபனம் ஆரம்பமான விதமே விசித்திரமானது.




1904ம் ஆண்டில் ஒரு மளிகைக் கடைக்காரரின் குமாரர்களான வில்லியம் ஃபாயிலும் கில்பெர்ட் ஃபாயிலும் சர்க்கார் உத்தியோகங்களில் புக விரும்பி அதற்கான பரீட்சைப் புத்தகங்களை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார்கள். பரீட்சையும் எழுதினார்கள். பரீட்சை கோவிந்தா வாகி விட்டது. அதற்காக வாங்கிய புத்தகங்களை விற்கக் கல்வித்துறை சஞ்சிகை ஒன்றில் மலிவான விளம்பரம் ஒன்று கொடுத்தார்கள். அதன் விளைவாக அவர்களிடமிருந்த புத்தகங்கள் கொஞ்சம் லாபத்துடனேயே கைமாறின. உடனே இந்த வியாபாரத்தில் இறங்க முடிவு செய்தனர்.

அவ்வளவுதான்! கைக்குக் கிடைத்த பழைய புத்தகங்களை வாங்கி விற்க ஆரம்பித்தார்கள். அவர்கள் வீட்டுச் சமையலறையில் 'உலகத்திலேயே சிறந்த புத்தகக் கடை' என்ற போர்டும் கையால் எழுதி மாட்டப்பட்டது. நாளடைவில் வீட்டில் எல்லா இடங்களிலுமே பழைய புத்தகங்களின் நெடி வீசத் தொடங்கியது. இனி வீட்டில் இடமில்லை என்ற நிலை வந்தபோது கவனிப்பாரற்றுக் கிடந்த ஒரு காலி கிட்டங்கியை வாடகைக்குப் பிடித்தார்கள். கடைசியாக இந்த ஸ்தாபனம் இரண்டு பிரதான தெருக்களை இணைக்கும் பகுதியில் லண்டன் நகரில் பதினொரு சொந்தக் கட்டிடங்களைச் சேர்த்தாற்போல் கொண்டதாக விளங்குகிறது. உள்ளே இருக்கும் அத்தனை பகுதிகளையும் புத்தக ஷெல்புகளையும் ஒரு நபர் விடாமல் பார்க்க வேண்டுமானால் சுமார் நாற்பது மைல் தூரம் சுற்றி நடந்தாக வேண்டும். ஆயிரக்கணக்கான பழம் புத்தக வேட்டைக்காரர்கள், சில புத்தகத் திருடர்கள், ஒரு கண்காணிப்பாளர். அறுநூறு விற்பனைச் சிப்பந்திகள் எல்லோருமாகப் பகல் நேரம் முழுவதும் இந்த ஸ்தாபனக் கட்டிடங்களில் வியாபித்திருக்கிறார்கள்.

ஃபாயில் ஸ்தாபனம் உள்ளே வருபவர்கள் ஏதாவது புத்தகம் வாங்க வேண்டுமென்று வற்புறுத்துவதில்லை. ஆகையால் கல்லூரி மாணவர்கள் அந்தப் புத்தகசாலையைத் தங்கள் ஆராய்ச்சிக் கூடமாகவே மாற்றிக் கொண்டு விடுகிறார்கள்.

'மனச்சாட்சி' மணியார்டர்கள் பல இந்த ஸ்தாபனத்துக்குத் தினம் வருகின்றன. இலவசமாகப் பல புத்தகங்களை இங்கு வந்து உட்கார்ந்து படித்துப் பரீட்சைகளில் வெற்றி கண்டவர்கள், அவசரத் தேவைக்காகப் புத்தகங்களை அபேஸ் பண்ணிக்கொண்டு போனவர்கள் எல்லோரும் வசதி ஏற்பட்டவுடன் இவ்வாறு பணத்தை அனுப்பிவிடுகிறார்கள். ஓர் ஆசாமி பல ரயில்வே பார்சல் ரசீதுகளை அனுப்பியிருந்தான். அந்தப் பார்சல்களில் அவன் பல காலமாகத் திருடிக்கொண்டு போய்ப் படித்து முடித்த எழுநூறு புத்தகங்கள் இருந்தனவாம். ஒரு பணக்கார மாது இருநூற்றி ஐம்பது பவுன்களுக்கு ஒரு செக்கையும் வைத்துக் கடிதம் எழுதியிருந்தாள். இதுவரை பிரசுரிக்கப்பட்டிருக்கும் புத்தகங்களில் மிக உயர்ந்த புத்தகம் ஒன்றையும் மிக மட்டமான ஒரு புத்தகத்தையும் அனுப்புமாறு கேட்டிருந்தாள். ஃபாயில் ஸ்தாபனம் அந்த வேண்டுகோளையும் பூர்த்தி செய்தது.

1930ம் ஆண்டில் நாஜிகள் தங்கள் நாட்டில் பகிஷ்கரிக்கப்பட்ட புத்தகங்களை ஏராளமாகத் தீயிலிடும் பணியை ஆரம்பித்த போது நகைச்சுவை உணர்ச்சி நிரம்பிய வில்லியம் ஃபாயில் ''அங்கு பகிஷ்கரிக்கப்பட்ட புத்தகங்களுக்கு இங்கு நல்ல விலை கொடுத்து வாங்கத் தயார்! எரிப்பதை நிறுத்திப் பேரம் பேசத் தயாரா?'' என்று ஹிட்லருக்கு ஒரு தந்தி அனுப்பினார். ஹிட்லர் தகனத்தில்தான் ஈடுபட்டாரே தவிர இதற்குப் பதில் அனுப்பவில்லை. இதற்குப் பழி வாங்குவதுபோல் ஜெர்மானிய விமானங்கள் இங்கிலாந்தில் குண்டு வீசியபோது வீட்டுக் கூரைகளின் மீது பாதுகாப்புக்காக மணல் மூட்டைகளை அடுக்குவதற்குப் பதிலாக விற்காமல் இருந்த ஹிட்லரின் 'மெயின் காம்ப்ஃ' புத்தகப் பிரதிகளைக் கோணியில் போட்டுக் கட்டி அடுக்கினாராம் அந்த வில்லியம் ஃபாயில்! — கோமதி சுவாமிநாதன்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon